அந்தரங்கமானது


EMF

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2024

## 21- பொருளியல்

## புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. நேர்ப்பொருளியலுக்கும் நியமப்பொருளியலுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடாவது
   (1) நியமப்பொருளியல் விவரண ரீதியான ஆய்வை வழங்கும் அதேவேளை நேர்ப்பொருளியல் கொள்கைத் தீர்வுகளை வழங்கும்.
   (2) நேர்ப்பொருளியல் காரணங்களின் அடிப்படையிலாகும் அதேவேளை நியமப்பொருளியல் மதிப்புகளின் அடிப்படையிலானது.
   (3) நியமப்பொருளியலானது நடைமுறைச் சாட்சியங்களின் அடிப்படையிலான அதேவேளை நேர்ப்பொருளியலானது ஆத்மார்த்தமான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.
   (4) நேர்ப்பொருளியல் பெறுமானத் தீர்ப்புகளில் தங்கியுள்ள அதேவேளை நியமப்பொருளியல் விடயங்களை அடிப்படையாகக் கொண்டது.
   (5) நேர்ப்பொருளியல் விழுமியங்களின் மீது கவனம் செலுத்தும் அதேவேளை நியமப்பொருளியலானது பரிசோதனை செய்யக்கூடிய கருதுகோள்களுடன் தொடர்புடையது.

2. பொருளியலில் 'மூலதனம்' என்ற எண்ணக்கருவை சிறப்பாக விளக்கும் கூற்று பின்வருவனவற்றில் எது?
   (1) மூலதனம் என்பது உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் மனித உழைப்பு மற்றும் புத்தாக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
   (2) மூலதனம் என்பது தனிநபர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நிதி முதலீடுகளைக் குறிக்கும்.
   (3) உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், கட்டடங்கள் போன்ற தொட்டுணரக்கூடிய சொத்துகளை மாத்திரமே மூலதனம் கருதும்.
   (4) மூலதனம் என்பது உற்பத்தியை நிதிப்படுத்துவதற்குப் பயன்படும் நிதி வளங்களைக் கருதும்.
   (5) மூலதனம் என்பது உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் காரணிகளைக் கருதும்.

3. உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளியை நோக்கிய அசைவானது குறிப்பிடுவது
   (1) அமையச் செலவிலோ அல்லது உற்பத்தி வினைத்திறனிலோ மாற்றங்கள் ஏற்படாது என்பதாகும்.
   (2) அமையச் செலவில் ஒரு மாற்றம் ஏற்படும் ஆனால் உற்பத்தி வினைத்திறனில் மாற்றம் ஏற்படாது என்பதாகும்.
   (3) உற்பத்தி வினைத்திறனில் மாற்றம் ஏற்படும் ஆனால் அமையச் செலவில் மாற்றம் ஏற்படாது என்பதாகும்.
   (4) அமையச் செலவிலோ அல்லது ஒதுக்கீட்டு வினைத்திறனிலோ மாற்றம் ஏற்படாது என்பதாகும்.
   (5) உற்பத்தி வினைத்திறனில் ஒரு மாற்றம் ஏற்படும் ஆனால் ஒதுக்கீட்டு வினைத்திறனில் மாற்றம் ஏற்படாது என்பதாகும்.

4. சோசலிசப் பொருளாதார முறைமையொன்றின் பிரதான பண்பாகக் கருதப்படுவது
   (1) இலாப உச்சப்படுத்தலைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டமை
   (2) எல்லா உற்பத்திக் காரணிகளும் தனியார் உடைமையாக உள்ளமை
   (3) பிரதான கைத்தொழில்களும் வளங்களும் பொதுத் துறையின் உடமையாகக் காணப்படுகின்றமை
   (4) பொருளாதாரத்தில் அரசாங்கத் தலையீடு இழிவு மட்டத்தில் காணப்படுகின்றமை
   (5) பொருளாதாரத் தீர்மானங்களில் அரசாங்கத்திற்கு எவ்வித பங்கும் இல்லாதிருத்தல்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Scanned with CamScanner

5. நிரம்பல் வளையியின் வழியே ஒரு அசைவினை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரணி
   (1) உற்பத்திச் செலவில் ஏற்படும் ஒரு மாற்றம்
   (2) குறித்த பொருளின் விலையில் ஏற்படும் ஒரு மாற்றம்
   (3) நுகர்வோன் வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றம்
   (4) தொழில்நுட்பத்தில் ஏற்படும் ஒரு மாற்றம்
   (5) நிரம்பலாளர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் ஒரு மாற்றம்

6. பின்வருவனவற்றுள் ஒன்றைத்தவிர ஏனையவை யாவும் சாதாரண பொருளொன்றின் சந்தைக் கேள்வி வளையியில் வலப்புற நகர்வை ஏற்படுத்தும். அவ்வாறு **ஏற்படுத்தாத** காரணி
   (1) ஒரு பதிலீட்டுப் பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   (2) நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
   (3) ஒரு நிரப்புப் பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (4) குறித்த பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (5) சந்தையில் உள்ள நுகர்வோரின் எண்ணிக்கையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

7. ஏனையன மாறா நிலையில், இழிவுப் பொருளொன்றின் விலை வீழ்ச்சியடையும் போது
   (1) வருமான விளைவானது பதிலீட்டு விளைவை விஞ்சிச் செல்வதால் நுகர்வோர் கேள்வியை அதிகரிப்பர்.
   (2) நுகர்வோர் கேள்வியைக் குறைப்பர் ஏனெனில் அப்பொருள் ஒரு இழிவுப் பொருளாகும்.
   (3) நுகர்வோர் கேள்வியை அதிகரிப்பர் ஏனெனில் பதிலீட்டு விளைவும் வருமான விளைவும் ஒன்றையொன்று பலப்படுத்தும்.
   (4) நுகர்வோர் கேள்வியைக் குறைப்பர் ஏனெனில் பதிலீட்டு விளைவு எதிர்க்கணியமாகும்.
   (5) நுகர்வோர் கேள்வியை அதிகரிப்பர் ஏனெனில் பதிலீட்டு விளைவானது வருமான விளைவை விஞ்சிச் செல்லும்.

8. X மற்றும் Y ஆகியன பதிலீட்டுப் பொருள்களெனக் கொள்க. Y பொருளின் நிரம்பல் அதிகரிக்கும் போது X பொருளின் சமநிலை விலை மற்றும் தொகையின் மீது ஏற்படும் விளைவு யாது?

| | X பொருளின் சமநிலை விலை | X பொருளின் சமநிலைத் தொகை |
|---|---|---|
| (1) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (2) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (3) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (4) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (5) | அதிகரிப்பு | மாறாது |

9. ஒரு போட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் X பொருளின் உற்பத்தியில் ஒரு புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது எனக் கருதுக. புதிய தொழில்நுட்பம் X பொருளின் உற்பத்திச் செலவைக் குறைக்குமாயின் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளன் மிகை மீது பெரும்பாலும் ஏற்படத்தக்க விளைவு யாது?
   (1) உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும் ஆனால் நுகர்வோர் மிகை குறைவடையும்.
   (2) நுகர்வோர் மிகை அதிகரிக்கும் ஆனால் உற்பத்தியாளன் மிகை குறைவடையும்.
   (3) நுகர்வோர் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் அதிகரிக்கும்.
   (4) நுகர்வோர் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் வீழ்ச்சியடையும்.
   (5) நுகர்வோர் மிகை அதிகரிக்கும் அதேவேளை உற்பத்தியாளன் மிகை மாறாதிருக்கும்.


10. ஒரு பொருளின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி பொதுவாக உயர்வாக இருப்பது அப்பொருள்
   (1) நுகர்வோர் செலவீட்டில் ஒரு சிறிய பகுதியாகவும் ஏனைய பொருள்களின் ஒரு நிரப்புப் பொருளாகவும் உள்ள போதாகும்.
   (2) அத்தியாவசியப் பொருளாக இருப்பதுடன் இலகுவில் பழுதாகும் பொருளாகவும் உள்ள போதாகும்.
   (3) நுகர்வோர் செலவீட்டில் ஒரு சிறிய பகுதியாகவும் ஏனைய பொருள்களின் ஒரு பதிலீடாகவும் உள்ள போதாகும்.
   (4) நுகர்வோர் செலவீட்டில் ஒரு பெரிய பகுதியாகவும் ஏனைய பொருள்களின் ஒரு பதிலீடாகவும் உள்ள போதாகும்.
   (5) இழிவுப் பொருளாகவும் ஏனைய பொருள்களின் ஒரு நிரப்புப் பொருளாகவும் உள்ள போதாகும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner


1. குறுக்கு விலைக்கேள்வி நெகிழ்ச்சியானது
   (1) ஒரு பொருள் அத்தியாவசியமானதா அல்லது இழிவுப்பொருளா என்பதைச் சுட்டிக்காட்டும்.
   (2) குறித்த இரு பொருள்களும் நெருங்கிய தொடர்புபட்டிருப்பின் பூச்சியத்தை அண்மிய பெறுமதியைக் கொண்டிருக்கும்.
   (3) குறித்த இரு பொருள்களும் பதிலீடுகளாயின் பூச்சியத்தை விடக் கூடிய பெறுமதியைக் கொண்டிருக்கும்.
   (4) கேள்வி விதியின் காரணமாக எப்போதும் எதிர்க்கணியமாக இருக்கும்.
   (5) குறித்த இரு பொருள்களும் நிரப்பீடுகளாயின் பூச்சியத்தை விடக் கூடிய பெறுமதியைக் கொண்டிருக்கும்.

2. கடுமையாக ஒழுங்குறுத்தப்பட்ட பொருளாதாரம் ஒன்று சந்தைப் பொருளாதாரம் ஒன்றை நோக்கிச் செல்லத் தீர்மானிப்பதாகவும், அரசாங்கம் சந்தை விலைக் கட்டுப்பாடுகளை நீக்கியதாகவும் கொள்க. வரைபடமானது அரசாங்கம் ஆரம்பத்தில் விதித்திருந்த பயனுறுதிமிக்க உச்சப்பட்ச விலையைக் கொண்டிருந்த ஒரு சந்தையை காட்டுகிறது.
அரசாங்கம் உச்ச விலையை நீக்கும்போது விலை மற்றும் தொகையின் மீது ஏற்படும் விளைவு யாது?




| | விலை | தொகை |
|---|---|---|
| (1) | ரூபா 60 இலிருந்து ரூபா 40 ஆகக் குறைதல் | பற்றாக்குறை அகலும் |
| (2) | ரூபா 50 இலிருந்து ரூபா 40 ஆகக் குறைதல் | மிகை அகலும் |
| (3) | ரூபா 40 இலிருந்து ரூபா 50 ஆகக் அதிகரித்தல் | பற்றாக்குறை அகலும் |
| (4) | ரூபா 50 இலிருந்து ரூபா 40 ஆகக் குறைதல் | பற்றாக்குறை அகலும் |
| (5) | ரூபா 50 இலிருந்து ரூபா 60 ஆகக் அதிகரித்தல் | மிகை அகலும் |

13. வரைபடம் சீனிக்கான $D_1$ கேள்வி வளையியையும் $S_1$ ஆரம்ப நிரம்பல் வளையியையும் காட்டுகிறது. அரசாங்கம் சீனியின் மீது ஒரு விசேட வரியை விதிப்பதால் நிரம்பல் வளையி $S_2$ வரை நகர்கிறது எனக் கொள்க.
வரைபடத்தில் உள்ள எப்பகுதிகள் அரசாங்கத்தின் வரி வருவாயையும், புதிய உற்பத்தியாளன் மிகையையும், மீளமுடியா நலன் இழப்பையும் (deadweight loss) அளவிட்டுக் காட்டுகின்றன?




| | வரி வருவாய் | புதிய உற்பத்தியாளன் மிகை | மீளமுடியா நலன் இழப்பு |
|---|---|---|---|
| (1) | B + C + G | H | A + H |
| (2) | E + F | F + G + H | E + F |
| (3) | B + C | C + G + H | E + F + M |
| (4) | B + C + G | H | E + F |
| (5) | B + C + G | F + G + H | E + F + M |

14. அரசாங்கம் நுகர்வோருக்கு அரிசியின் விலையை அதிகரிக்காமல் நெல் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க விரும்புகிறது எனக் கொள்க. அரசாங்கத்தின் நோக்கத்தை அடைய மிகப் பொருத்தமான கொள்கையாவது,
   (1) அரசாங்கம் அரிசிக் கையிருப்புகளை சந்தைக்கு வழங்குதல்.
   (2) அரிசியின் சந்தை விலைக்கு மேலாக உத்தரவாத விலை ஒன்றை நிர்ணயித்து விற்கப்படாதுள்ள வெளியீட்டை அரசாங்கம் கொள்வனவு செய்ய இணங்குதல்.
   (3) அரிசியின் சந்தை விலைக்குக் கீழாக குறைந்தபட்ச விலை ஒன்றை நிர்ணயித்து விற்கப்படாதுள்ள வெளியீட்டை அரசாங்கம் கொள்வனவு செய்ய இணங்குதல்.
   (4) அரிசியின் சந்தை விலைக்கு கீழே உச்சவிலை ஒன்றை அறிமுகம் செய்தல்.
   (5) நெல் விவசாயிகளுக்கு மானியக் கொடுப்பனவு ஒன்றை வழங்குதல்.



Scanned with CamScanner
Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**15.** பின்வரும் எக் கைத்தொழில் பண்புகளின் சேர்மானம் தனியுரிமைப் போட்டிச் சந்தையைக் காட்டுகிறது?

| | பிரவேச சுதந்திரம் | பொருளின் தன்மை | நிறுவனத்தின் கேள்வி வளையி |
|---|---|---|---|
| (1) | உயர் தடைகள் | ஓரினத்தன்மை | கீழ்நோக்கி சரியும் |
| (2) | உயர் தடைகள் | வேறாக்கம் செய்தவை | கீழ்நோக்கி சரியும் |
| (3) | குறைந்த தடைகள் | ஓரினத்தன்மை | கிடையானது |
| (4) | குறைந்த தடைகள் | வேறாக்கம் செய்தவை | கீழ்நோக்கி சரியும் |
| (5) | உயர் தடைகள் | தனித்துவமானது | கிடையானது |

**16.** குறுங்காலத்தில் ஒரு நிறைபோட்டி நிறுவனம் பூச்சிய பொருளாதார மிகையை உழைப்பது
(1) விலை எல்லைச் செலவுக்கு சமப்படும் போதாகும்.
(2) மொத்த வருவாய் மொத்த மாறுஞ் செலவுக்கு சமப்படும் போதாகும்.
(3) எல்லைச் செலவு சராசரி மாறும் செலவுக்கு சமப்படும் போதாகும்.
(4) எல்லை வருவாய் சராசரி நிலையான செலவுக்கு சமப்படும் போதாகும்.
(5) விலை சராசரி மொத்தச் செலவுக்கு சமப்படும் போதாகும்.

**17.** அளவுத்திட்டச் சிக்கனமிலிகளை அனுபவிக்கும் ஒரு நிறுவனம் எதிர்நோக்குவது
(1) குறுங்காலத்தில் எல்லைச் செலவு அதிகரிப்பாகும்.
(2) வெளியீடு அதிகரிக்கும்போது நீண்டகால சராசரி மொத்தச் செலவு அதிகரிப்பாகும்.
(3) நீண்டகாலத்தில் சராசரி மொத்தச் செலவு வீழ்ச்சியாகும்.
(4) உள்ளீடுகளின் அதிகரிப்பை விட வெளியீட்டில் ஒரு கூடிய அதிகரிப்பாகும்.
(5) வெளியீட்டு மட்டம் எதுவாயினும் நீண்டகால சராசரி மொத்த செலவு நிலையாக இருப்பதாகும்.

**18.** பின்வரும் அட்டவணை வெவ்வேறு வெளியீட்டு மட்டங்களில் ஒரு நிறுவனத்தின் மொத்தச் செலவையும் எல்லைச் செலவையும் காட்டுகிறது.

| வெளியீட்டு மட்டம் | மொத்தச் செலவு (ரூபா) | எல்லைச் செலவு (ரூபா) |
|---|---|---|
| 1 | 250 | 50 |
| 2 | 295 | 45 |
| 3 | 330 | 35 |
| 4 | 375 | 45 |
| 5 | 425 | 50 |

5 வெளியீட்டு அலகுகளை உற்பத்தி செய்வதற்கான சராசரி நிலையான செலவு யாது?
(1) ரூபா 300 (2) ரூபா 200 (3) ரூபா 150 (4) ரூபா 60 (5) ரூபா 40

**19.** பெறுமதி சேர்க்கை முறையின் படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவிடப்படுவது
(1) வெளியீட்டின் பெறுமதியிலிருந்து இடைநிலைப் பொருள்களின் பெறுமதியைக் கழிப்பதன் மூலமாகும்.
(2) எல்லா முடிவுப் பொருள்கள் மற்றும் சேவைகளின் பெறுமதியைக் கூட்டுவதன் மூலமாகும்.
(3) பொருளாதாரத்தால் உருவாக்கப்பட்ட மொத்த வருமானங்களைக் கூட்டுவதன் மூலமாகும்.
(4) உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட எல்லா இடைநிலைப் பொருள்களின் பெறுமதிகளையும் கூட்டுவதன் மூலமாகும்.
(5) வெளியீட்டின் மொத்தப் பெறுமதியிலிருந்து இறக்குமதிகளின் பெறுமதியைக் கழிப்பதன் மூலமாகும்.

**20.** முறைசாரா பொருளாதாரம் (informal economy) என்பதனால் கருதப்படுவது
(1) சட்ட விரோதமானதும் அரசாங்கத்திடமிருந்து மறைக்கப்படுவதுமான நடவடிக்கைகளாகும்.
(2) அரசாங்கத்தால் கண்காணிக்கப்படாத அல்லது ஒழுங்குறுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைகளாகும்.
(3) சிறு வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளுமாகும்.
(4) பெரிய கூட்டுத்தாபனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கிடையில் நடைபெறும் பொருளாதார நடவடிக்கைகளாகும்.
(5) பொருளாதாரத்தின் வாழ்வாதார விவசாயத் துறையாகும்.

**21.** ஒரு பொருளாதாரத்தின் மொத்தத் தேசிய செலவிடத்தக்க வருமானம் மொத்த தேசிய வருமானத்தை விட உயர்வாக இருப்பதனால் பிரதிபலிக்கப்படுவது
(1) நாடு வர்த்தக நிலுவைக் குறை நிலையை அனுபவிக்கிறது என்பதாகும்.
(2) நாடு வர்த்தக மிகை நிலையை அனுபவிக்கிறது என்பதாகும்.
(3) நாட்டின் உள்நாட்டு உற்பத்தி அதன் நுகர்வை விஞ்சுகின்றது என்பதாகும்.
(4) நாடு முதலீட்டை விட கூடுதலாக சேமிக்கிறது என்பதாகும்.
(5) நாட்டின் தேறிய வெளிநாட்டு மாற்றல்கள் நேர்க்கணியமாக உள்ளது என்பதாகும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

2. ஒரு கருதுகோள் ரீதியான பொருளாதாரத்தின் தெரிவுசெய்யப்பட்ட சில தேசிய வருமானக் கணக்கீட்டு தரவுகள் கீழே தரப்படுகின்றன (இலக்கங்கள் பில்லியன் ரூபாவில்).

| வகை | பெறுமதி | வகை | பெறுமதி |
|---|---|---|---|
| ஊழியர்களின் நட்டஈடுகள் | 600 | உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த ஏனைய வரிகள் | 50 |
| மொத்த செயல்பாட்டு மிகை | 800 | வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | –20 |
| மொத்த கலப்பு வருமானம் | 850 | உற்பத்திகள், சேவைகள் மீதான மானியங்கள் கழித்த ஏனைய வரிகள் | 120 |
| நிலையான மூலதன நுகர்வு | 150 | | |


மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய வருமானம் என்பவற்றின் பெறுமானங்கள் யாவை?

| | மொத்த உள்நாட்டு உற்பத்தி | மொத்தத் தேசிய வருமானம் |
|---|---|---|
| (1) | 2 420 | 2 400 |
| (2) | 2 270 | 2 250 |
| (3) | 2 420 | 2 440 |
| (4) | 2 570 | 2 550 |
| (5) | 2 250 | 2 230 |

23. அரசாங்க நடவடிக்கைகள் இல்லாத மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் ரூபா 200 மில்லியன் இனால் முதலீடு அதிகரிப்பதன் விளைவாக நுகர்வில் ரூபா 800 மில்லியன் அதிகரிப்பு ஏற்படுத்துகிறது. இப்பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் யாது?

(1) 0.2 (2) 0.25 (3) 0.75 (4) 0.8 (5) 0.9

24. இவ்வரைபடமானது ஒரு மொத்தக் கேள்வி வளையியைக் காட்டுகிறது. இதில் கிடையச்சின் மீது அளவிடப்படுவது எது?




(1) பெயரளவு தேசிய வருமானம்
(2) பெயரளவு தேசிய வெளியீடு
(3) பெயரளவு செலவிடத்தக்க வருமானம்
(4) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி
(5) சாத்திய மட்ட வெளியீடு

25. மொத்தக் கேள்வி வளையியும் மொத்த நிரம்பல் வளையியும் ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் புள்ளியில் பொருளாதாரம் சமநிலையடைவதாகக் கருதுக. வரிகள் சம அளவில் அதிகரிக்கப்படாமல் அரசாங்க செலவீட்டில் ஓர் அதிகரிப்பு ஏற்படுமாயின் பெரும்பாலும் குறுங்காலத்தில் ஏற்படத்தக்க விளைவு யாது?

(1) மொத்தக் கேள்வி வளையி இடப்புறம் நகர்ந்து வேலையின்மை அதிகரிக்கும்.
(2) மொத்தக் கேள்வி வளையி வலப்புறம் நகர்ந்து உயர் வெளியீட்டுக்கும் உயர் தொழில் வாய்ப்புக்கும் இட்டுச் செல்லும்.
(3) மொத்தக் கேள்வி வளையி மாறாதிருக்கும் ஆனால் மொத்த நிரம்பல் வளையி இடப்புறம் நகரும்.
(4) மொத்தக் கேள்வி வளையி வலப்புறம் நகர்ந்து குறைந்த வெளியீட்டிற்கும் குறைந்த தொழில் வாய்ப்புக்கும் இட்டுச் செல்லும்.
(5) மொத்தக் கேள்வி வளையி இடப்புறம் நகர்ந்து குறைந்த விலை மட்டத்திற்கு இட்டுச்செல்லும்.

26. ஒரு வியாபாரி தனது பெட்டகத்தில் இருந்து ரூபா 50 000 ஐ எடுத்து அப்பணத்தை வணிக வங்கியில் வைப்புச் செய்கிறார் எனக் கொள்க. வங்கியிடம் மிகை ஒதுக்குகள் இல்லையெனின் நியதி ஒழுங்குத் தேவை 10% ஆயின், இந்த வைப்பானது வங்கியின் தேவையான ஒதுக்குகளையும் வங்கியின் கடன் வழங்கும் ஆற்றலையும் எவ்வாறு அதிகரிக்கும்?

| | அவசியமான ஒதுக்குகள் (ரூபா) | கடன் வழங்கும் ஆற்றல் (ரூபா) |
|---|---|---|
| (1) | 50 000 | 40 000 |
| (2) | 50 000 | 50 000 |
| (3) | 40 000 | 5 000 |
| (4) | 5 000 | 45 000 |
| (5) | 5 000 | 500 000 |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**27.** பின்வருவனவற்றுள் எக்கூற்று கேள்வித்தூண்டல் பணவீக்கத்தையும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தையும் சிறப்பாக வேறுபடுத்துகிறது?

(1) கேள்வித்தூண்டல் பணவீக்கம் மிகை நிரம்பலால் ஏற்படும் அதேவேளை, செலவுத்தூண்டல் பணவீக்கம் மிகைக் கேள்வியால் ஏற்படுகிறது.

(2) கேள்வித்தூண்டல் பணவீக்கம் மொத்த நிரம்பல் அதிகரிக்கும் போது ஏற்படும் அதேவேளை, செலவுத்தூண்டல் பணவீக்கம் மொத்தக் கேள்வி குறைவடையும் போது ஏற்படுகிறது.

(3) கேள்வித்தூண்டல் பணவீக்கம் கூலி வீத அதிகரிப்பினால் ஏற்படும் அதேவேளை, செலவுத்தூண்டல் பணவீக்கம் பணநிரம்பலின் மிகை அதிகரிப்பினால் ஏற்படுகிறது.

(4) கேள்வித்தூண்டல் பணவீக்கம் மொத்தக் கேள்வியின் அதிகரிப்பினால் ஏற்படும் அதேவேளை, செலவுத்தூண்டல் பணவீக்கம் உற்பத்திச் செலவு அதிகரிப்பதனால் ஏற்படுகிறது.

(5) கேள்வித்தூண்டல் பணவீக்கம் உயர் தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் அதேவேளை, செலவுத்தூண்டல் பணவீக்கம் குறைந்த தொழில்வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

**28.** உயர் வலுப் பணம் உள்ளடக்குவது

(1) பொதுமக்கள் வணிக வங்கிகளில் வைப்புச் செய்துள்ள கால வைப்புக்களையாகும்.

(2) உரிமம் பெற்ற வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் பொதுமக்கள் வைப்புச் செய்துள்ள சேமிப்பு வைப்புக்களையாகும்.

(3) பொதுமக்கள் கைவசம் வைத்துள்ள நாணயம் மற்றும் வணிக வங்கிகளின் ஒதுக்குகளையாகும்.

(4) வணிக வங்கிகள் வழங்கியுள்ள கடன்களையாகும்.

(5) மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு சொத்துக்களையாகும்.

**29.** வட்டி வீதத்திற்கும் பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்விக்கும் இடையிலான தொடர்பை சிறப்பாக விளக்கும் கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி வட்டிவீதத்துடன் சுயாதீனமானது.

(2) பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி வட்டிவீதத்துடன் நேரடியாக விகிதசமமாகத் தொடர்புபட்டுள்ளது.

(3) வட்டிவீதம் அதிகரிக்கும் போது பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி அதிகரிக்கும்.

(4) வட்டிவீதம் அதிகரிக்கும் போது பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி குறைவடையும்.

(5) வட்டிவீதம் உயர்மட்டத்தில் உள்ளபோது பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி முடிவிலியாகும்.

**30.** 2023 ஆம் ஆண்டின் புதிய மத்திய வங்கிச் சட்டமானது இலங்கை மத்திய வங்கியை தடைசெய்திருப்பது

(1) பணத்தை அச்சிடுவதிலிருந்தாகும்.

(2) நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கத்திற்கு கடன் வழங்குவதிலிருந்தாகும்.

(3) அரசாங்கத்தின் வங்கியாகத் தொழிற்படுவதிலிருந்தாகும்.

(4) ஒரு பணக்கொள்கைக் கருவியாக அதன் திறந்த சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தாகும்.

(5) அந்நியச் செலாவணிச் சந்தையில் தலையீடு செய்வதிலிருந்தாகும்.

**31.** பொதுப் பொருள்கள் தொடர்பில் 'போட்டியில்லா நுகர்வு' என்பதன் கருத்து

(1) மற்றவர்களுக்கு கிடைக்கும் அளவு குறையாமல் ஒரு நபரால் அப் பொருள் நுகரப்படமுடியும் என்பதாகும்.

(2) பணம் செலுத்தாத நபர்களுக்கு அப்பொருள் வழங்கப்பட முடியாது என்பதாகும்.

(3) பணம் செலுத்தாதோரை அப்பொருள் நுகர்விலிருந்து விலக்கிவைக்க முடியாது என்பதாகும்.

(4) ஒரு தனிநபரால் மேற்கொள்ளப்படும் பொதுப்பொருள் நுகர்வு ஏனையோருக்கு அப்பொருள் கிடைக்கும் அளவைக் குறைக்கும் என்பதாகும்.

(5) பணம் செலுத்தியோரால் மட்டுமே பொதுப் பொருள் நுகரப்பட முடியும் என்பதாகும்.

**32.** ஒரு குறைந்து செல்லும் வரிமுறையின் பிரதான பண்பாகக் குறிப்பிடப்படக்கூடியது

(1) உயர் வருமானம் பெறுவோரை விட குறைந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தின் அதிக சதவீதத்தை வரி செலுத்துவர் என்பதாகும்.

(2) எல்லை வரி வீதம் சராசரி வரி வீதத்தை விட உயர்வாக இருக்கும் என்பதாகும்.

(3) வரிச் சேகரிப்புச் செலவு வரி வருமானத்தை விட உயர்வாக இருக்கும் என்பதாகும்.

(4) குறைந்த வருமானம் பெறுவோருடன் ஒப்பிடுமிடத்து உயர் வருமானம் பெறுவோரின் எல்லை வரி வீதம் அதிகமாக இருக்கும் என்பதாகும்.

(5) வருமானம் அதிகரிக்கும் போது வரி வீதம் அதிகரிக்கும் என்பதாகும்.



Scanned with CamScanner

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

. இறைக்கொள்கை மீது மாற்றல் செலுத்தல்களின் விளைவு பற்றிய மிகச் சரியான கூற்று எது?
(1) மாற்றல் செலுத்தல்கள் அரசாங்கச் செலவீடுகளை அதிகரிப்பதன் மூலம் மொத்தக் கேள்வியை நேரடியாகப் பாதிக்கும்.
(2) மாற்றல் செலுத்தல்கள் அரசாங்க செலவீட்டின் ஒரு பகுதியல்லாத காரணத்தால் பாதீட்டுக் குறைநிலையைப் பாதிப்பதில்லை.
(3) மாற்றல் செலுத்தல்கள் பொருள்கள். சேவைகளின் உற்பத்திக்கு நேரடியாகப் பங்களிக்காமல் அரசாங்க செலவீட்டை அதிகரிக்கும்.
(4) முதலீட்டைத் தூண்டுவதன் மூலம் மாற்றல் செலுத்தல்கள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.
(5) வீட்டுத் துறையின் செலவிடத்தக்க வருமானத்தைக் குறைப்பதன் மூலம் மாற்றல் செலுத்தல்கள் மொத்தக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்த முடியும்.

. 2022 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் வரி வருவாயின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பிரதான பங்களிப்புச் செய்தவை
(1) வருமான வரிகள், இறக்குமதித் தீர்வைகள், பொருளாதார சேவைக் கட்டணம் என்பன ஆகும்.
(2) விசேட பண்டவரி, வருமான வரிகள், பெறுமதி சேர் வரி என்பன ஆகும்.
(3) வருமான வரிகள், பெறுமதி சேர் வரி, கலால் வரிகள் என்பன ஆகும்.
(4) வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள், பெறுமதி சேர் வரி, விசேட பண்டவரி என்பன ஆகும்.
(5) துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர் வரி என்பன ஆகும்.

. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மீள்கட்டமைப்பு செயன்முறையில் 'கடன் பேண்தகுதன்மைப் பகுப்பாய்வு' (Debt Sustainability Analysis - DSA) என்பதனால் கருதப்படுவது என்ன?
(1) கடனை மீளச் செலுத்தலைத் தவிர்க்காமல் ஒரு நாடு தாங்கக்கூடிய கடன் அளவை நிர்ணயிக்கும் ஒரு ஆய்வாகும்.
(2) ஒரு நாடு அதன் நிகழ்கால வெளிநாட்டுக் கடன் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் ஆற்றல் பற்றிய மதிப்பீடாகும்.
(3) தற்போது உள்ள கடன் மீது வட்டிச் செலுத்தல்களைக் குறைப்பதற்கான ஒரு முறையாகும்.
(4) நீண்ட காலத்தில் ஒரு நாடு அதன் கடன் சேவையை மேற்கொள்ளும் ஆற்றல் பற்றிய ஒரு பகுப்பாய்வாகும்.
(5) ஐந்து வருட காலப்பகுதிக்குள் எல்லா வெளிநின்ற கடன்களையும் முழுமையாக செலுத்தி முடிப்பது பற்றிய பகுப்பாய்வாகும்.

. ஒரு நாடு ஒரு பொருளின் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மைகளைக் கொண்டிருப்பது,
(1) அப்பொருளை உற்பத்தி செய்ய அந்நாடு அதி குறைவான அமையச் செலவைக் கொண்டிருக்கும் போதாகும்.
(2) அந்நாடு ஏனைய நாடுகளை விட அப்பொருளை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் போதாகும்.
(3) அப்பொருளை அதிக விலைக்கு விற்க முடியும் போதாகும்.
(4) அந்நாடு அப்பொருளை அதிக இலாப எல்லையுடன் உற்பத்தி செய்யும் போதாகும்.
(5) ஏனைய நாட்டுடன் ஒப்பிடுகையில் அந்நாட்டுக்கு குறைவான வளங்களைப் பயன்படுத்தி ஒரு பொருளை உற்பத்தி செய்ய முடியும் போதாகும்.

. இறக்குமதி உள்ளீடுகளின் பெறுமதி ரூபா. 5 000 ஆகவும் முடிவுப் பொருளின் பெறுமதி ரூபா. 10 000 ஆகவும் உள்ள ஒரு உள்நாட்டுக் கைத்தொழிலைக் கருத்திற் கொள்க. முடிவுப் பொருள் மீது 25% தீர்வையும் இறக்குமதி உள்ளீடுகள் மீது 20% தீர்வையும் விதிக்கப்படுமாயின் பயனுறு பாதுகாப்பு வீதம் யாது?
(1) 5% (2) 15% (3) 25% (4) 30% (5) 32.5%

. இலங்கை கைச்சாத்திட்டுள்ள புத்தம் புதிய இருபக்க தாராள வர்த்தக உடன்படிக்கை யாது?
(1) சிங்கப்பூர் - இலங்கை இடையிலான தாராள வர்த்தக உடன்படிக்கை
(2) சீனா - இலங்கை இடையிலான தாராள வர்த்தக உடன்படிக்கை
(3) இந்தியா - இலங்கை இடையிலான விரிவாக்கப்பட்ட பொருளாதார பங்காளர் உடன்படிக்கை
(4) வங்களாதேசம் - இலங்கை இடையிலான தாராள வர்த்தக உடன்படிக்கை
(5) தாய்லாந்து - இலங்கை இடையிலான தாராள வர்த்தக உடன்படிக்கை



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

39. பின்வரும் அட்டவணை கருதுகோள் ரீதியான பொருளாதாரத்தின் சில சென்மதி நிலுவைத் தரவுகளைக் காட்டுகிறது.

| வகை | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| வர்த்தக மீதி | 120.1 |
| சேவைகள் கணக்கு மீதி | 29.3 |
| முதலாந்தர வருமான மீதி | −25.8 |
| இரண்டாந்தர வருமான மீதி | 11.5 |
| மூலதனக் கணக்கு மீதி | −35.1 |
| நிதிக் கணக்கு மீதி | −112.6 |
| தேறிய பிழைகளும் விடுபாடுகளும் | 12.6 |

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதி யாது?

(1) ரூபா 149.4 பில்லியன் (2) ரூபா 135.1 பில்லியன் (3) ரூபா 100 பில்லியன்
(4) ரூபா −12.6 பில்லியன் (5) ரூபா −135.1 பில்லியன்

40. பின்வரும் சந்தர்ப்பங்களில் எது மார்ஷல்-லேர்ணர் நிபந்தனையைப் பூர்த்திசெய்கிறது?

(1) ஏற்றுமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.5 ஆகவும் இறக்குமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.3 ஆகவும் உள்ளன.
(2) ஏற்றுமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.8 ஆகவும் இறக்குமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.6 ஆகவும் உள்ளன.
(3) ஏற்றுமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.2 ஆகவும் இறக்குமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.4 ஆகவும் உள்ளன.
(4) ஏற்றுமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.7 ஆகவும் இறக்குமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.2 ஆகவும் உள்ளன.
(5) ஏற்றுமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.8 ஆகவும் இறக்குமதிக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி 0.2 ஆகவும் உள்ளன.

41. ஒரு நாட்டின் மெய்ப் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம் தேய்வடையுமாயின் அதன் மூலம் கருதப்படுவது

(1) வெளிநாட்டுப் பொருள்களுடன் ஒப்பிடுமிடத்து நாட்டின் ஏற்றுமதிகள் சார்பளவில் மலிவாக மாறியுள்ளன என்பதாகும்.
(2) நாட்டின் பணவீக்க வீதம் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்துள்ளது என்பதாகும்.
(3) பணவீக்கம் மாறாநிலையில் இருக்கும்போது நாட்டின் பெயரளவு நாணயமாற்று வீதம் அதிகரித்துள்ளது என்பதாகும்.
(4) நாட்டின் நாணயமானது ஒரு கூடை ஏனைய நாணயங்களுக்கெதிராக பெறுமதி அதிகரித்துள்ளது என்பதாகும்.
(5) பெயரளவு நாணயமாற்று வீதம் மாறா நிலையில் உள்நாட்டு விலைகளில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதாகும்.

42. மத்திய வங்கி புழக்கப் பணங்களின் பரிமாற்ற ஏற்பாடு (swap arrangement) என்றால் என்ன?

(1) பொருட்களையும் சேவைகளையும் பரிமாறிக் கொள்வதற்காக மத்திய வங்கிகளுக்கு இடையிலான ஒரு ஏற்பாடாகும்.
(2) நாணயமாற்று வீதத்தை உறுதிப்படுத்த அல்லது திரவத்தன்மையை வழங்க நாணயங்களைப் பரிமாற்றிக்கொள்ள மத்திய வங்கிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஓர் இருபக்க உடன்படிக்கையாகும்.
(3) நாடுகளுக்கிடையில் வட்டிவீதத்தை ஒழுங்குறுத்துவதற்கான ஒரு பொறிமுறையாகும்.
(4) நாட்டின் பங்குச் சந்தையில் நேரடிச் செல்வாக்குச் செலுத்துவதற்கான ஒரு கருவியாகும்.
(5) வெளிநாட்டு நாணயத்திலான அரச பிணையங்களை விற்பனை மற்றும் கொள்வனவு செய்வதற்காக மத்திய வங்கிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஒரு உடன்படிக்கையாகும்.

43. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி தேக்க நிலையில் இருந்தாலும் அந்நாட்டின் மனித அபிவிருத்திச் சுட்டியில் ஒரு முன்னேற்றத்தை பெரும்பாலும் ஏற்படுத்தவல்ல காரணி எது?

(1) அதிகரித்த ஆயுள் எதிர்பார்க்கை
(2) குறைவடைந்த வருமானச் சமமின்மை
(3) முறைசாராப் பொருளாதாரத் துறையின் வளர்ச்சி
(4) சிறுவர் மரண வீதத்தில் வீழ்ச்சி
(5) தூய குடிநீரைப் பெறுவதற்கான வாய்ப்பில் அதிகரிப்பு



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- 'நடுத்தர வருமானப்பொறி' என்பதனால் கருதப்படும் சூழ்நிலை யாதெனில்
  (1) ஒரு நாடு வறுமை மற்றும் வேலையின்மையில் இருந்து விடுபடமுடியாத நிலையாகும்.
  (2) ஒரு நாடு நடுத்தர வருமான நிலைக்கு நிலைமாறும் போது பணவீக்க அழுத்தங்களை எதிர்கொள்ளும் நிலையாகும்.
  (3) ஒரு நாடு நடுத்தர வருமான மட்டத்தை அடைந்த பின்னர் உயர் வருமான மட்டத்தை அடைய முடியாமல் வளர்ச்சியடையப் போராடும் நிலையாகும்.
  (4) பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறையானது உயர்வருமான மட்டத்தை அடைவதில் தடையாக அமையும் நிலையாகும்.
  (5) குறைந்த மட்டங்களிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உயர் பணவீக்கம் காரணமாக பொருளாதார வளர்ச்சி மட்டுப்படுத்தப்படும் நிலையாகும்.

- பின்வரும் அட்டவணை இரு காலப்பகுதிகளில் ஒரு நாட்டின் தெரிவுசெய்யப்பட்ட சில சமூக பொருளாதாரத் தரவுகளைக் காட்டுகிறது.

| ஆண்டு | பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா பில்லியன்) | எழுத்தறிவு மட்டம் (%) | சனத்தொகையில் 1000 பேருக்கான மரணவீதம் | பொது விலை மட்டம் |
|---|---|---|---|---|
| 2010 | 75 | 82 | 78 | 125 |
| 2020 | 120 | 97 | 52 | 150 |

2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் இப்பொருளாதாரத்தின் சமூக பொருளாதார நிலை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது அட்டவணையில் காட்டப்பட்ட தரவுகளுடன் ஒத்திசைவாகிறது?
(1) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் வாழ்க்கைத் தர முன்னேற்றமும்
(2) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் வாழ்க்கைத் தர வீழ்ச்சியும்
(3) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியும் வாழ்க்கைத் தர வீழ்ச்சியும்
(4) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியும் வாழ்க்கைத் தர முன்னேற்றமும்
(5) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியும் மனித அபிவிருத்தியில் முன்னேற்றமும்

- மூப்படைந்தோர் தங்கியிருத்தல் விகிதம் குறிப்பாகக் கருதுவது
  (1) தொழில்புரியும் வயதுக் குடித்தொகைக்கும் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கும் இடையிலான விகிதமாகும்.
  (2) மொத்தக் குடித்தொகைக்கும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கும் இடையிலான விகிதமாகும்.
  (3) 15 - 59 வயதுக்கிடைப்பட்ட குடித்தொகைக்கும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கும் இடையிலான விகிதமாகும்.
  (4) வயது முதிர்ந்த குடித்தொகைக்கும் 0 - 14 வயதுக்கிடைப்பட்ட நபர்களுக்கும் இடையிலான விகிதமாகும்.
  (5) மொத்தக் குடித்தொகைக்கும் 15 - 64 வயதுக்கிடைப்பட்ட நபர்களுக்கும் இடையிலான விகிதமாகும்.

பின்வரும் நாடுகளுள் எது பெரும்பாலும் உயர்ந்த கினி குணகத்தைக் கொண்டிருக்கும்?
(1) சகலருக்கும் இலவச கல்வி மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நாடு
(2) நேர்க்கணிய பொருளாதார வளர்ச்சியையும் குறைந்தளவு வேலையின்மையும் கொண்டுள்ள நாடு
(3) விருத்திமுறை வரிமுறையினையும் விரிவான மீள் பங்கீட்டுக் கொள்கைகளையும் கொண்டுள்ள நாடு
(4) அதிகுறைந்த 10% வருமானம் பெறுவோர் மொத்த வருமானத்தில் 9% இனைக் கொண்டுள்ள நாடு
(5) பாரியளவு முறைசாராத் துறையினையும் இழிவளவு சமூக பாதுகாப்பு வலைப்பின்னலையும் கொண்டுள்ள நாடு

இலங்கைப் பொருளாதாரத்திற்கு கொழும்பு துறைமுக நகர செயற்றிட்டத்தின் முக்கியத்துவம் யாது?
(1) அது சர்வதேச முதலீட்டையும் வர்த்தகத்தையும் கவர்வதற்கான ஒரு பிரதான ஆரம்ப முயற்சியாகும்.
(2) கொள்கலன் கையாளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள கப்பல் முனையம் ஒன்றை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
(3) அது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.
(4) அது கொழும்பு நகரத்தில் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதில் விசேட கவனஞ் செலுத்துகிறது.
(5) அது ஏனைய கைத்தொழில்களுக்கு மேலாக இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்வதை முதன்மைப்படுத்துகிறது.



Scanned with CamScanner
Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**49.** 2022 ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஏற்பட பிரதான உடனடிக்காரணியாக அமைந்தது

(1) புலம்பெயர் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட குறிப்பிட்டத்தக்களவு வீழ்ச்சி.

(2) இலங்கை ரூபாவில் ஏற்பட்ட மிகையான பெறுமதி அதிகரிப்பு.

(3) உலக எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட துரித அதிகரிப்பு.

(4) இரசாயனப் பசளை உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி.

(5) பேணமுடியாதளவு வெளிநாட்டுக்கடன் திரட்சியில் ஏற்பட்ட அதிகரிப்பு.

**50.** 2023 ம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட கடன் வசதி பிரதானமாக இலக்காகக் கொணடுள்ளமை

(1) நாட்டின் பணவீக்கத்தை 5% சதவீதத்திற்குக் கீழாகக் குறைப்பதாகும்.

(2) பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டையும் கடன் பேண்தகு தன்மையையும் மீள ஏற்படுத்தல்.

(3) 2048 இல் இலங்கையை உயர் வருமானம் பெறும் நாடாக மாற்றியமைத்தல்.

(4) நிலையான நாணயமாற்று முறைமைக்கு உதவுதல்.

(5) அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல்.

※ ※ ※



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை -2024

ෂය අංකය / ட இலக்கம்: **21** විෂයය / பாடம்: **பொருளியல்**

### ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 5 | 31. | 1 | 41. | 1 |
| 02. | 5 | 12. | 3 | 22. | 1 | 32. | 1 | 42. | 2 |
| 03. | 1/2 | 13. | 4 | 23. | 4 | 33. | 3 | 43. | 1 |
| 04. | 3 | 14. | 5 | 24. | 4 | 34. | 3 | 44. | 3 |
| 05. | 2 | 15. | 4 | 25. | 2 | 35. | 1 | 45. | 1 |
| 06. | 4 | 16. | 5 | 26. | 4 | 36. | 1 | 46. | 1/3 |
| 07. | 5 | 17. | 2 | 27. | 4 | 37. | 4 | 47. | 5 |
| 08. | 2 | 18. | 5 | 28. | 3 | 38. | 5 | 48. | 1 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 4 | 39. | 2 | 49. | 5 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 2 | 40. | 2 | 50. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ உப பகுதி 'அ' இலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையும் உப பகுதி 'ஆ' இலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து, ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ வரைபுத்தாள் வழங்கப்படும்.

## உப பகுதி 'அ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) பொருளாதார வளங்களையும் இலவச வளங்களையும் வரைவிலக்கணப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் இவ்விரு உதாரணங்கள் வீதம் தருக. (04 புள்ளிகள்)

 (ii) 'உழைப்பிற்கும்' 'முயற்சியாண்மைக்கும்' இடையிலான பிரதான வேறுபாடுகளை விளக்குக. (03 புள்ளிகள்)

 (iii) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர்கோடாக அமைவது எத்தகைய நிபந்தனைகளின் கீழாகும்? (03 புள்ளிகள்)

 (iv) ஒரு கட்டளைப் பொருளாதார முறைமையிலும், ஒரு சந்தைப் பொருளாதார முறைமையிலும் அரசாங்கத்தின் பணியை ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

 (v) சந்தைப் பொருளாதார, கட்டளைப் பொருளாதார மற்றும் கலப்புப் பொருளாதார முறைமைகள் அருமை பற்றிய பிரச்சினையை எவ்வாறு தீர்க்கின்றன என்பதை விளக்கி இவ்வணுகுமுறைகளின் பயனுறுதன்மையை மதிப்பிடுக. (06 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

## பொருளியல் II

1. (i) பொருளாதார வளங்களையும் இலவச வளங்களையும் வரைவிலக்கணப்படுத்தி, ஒவ்வொன்றுக்கும் இவ்விரு உதாரணங்கள் வீதம் தருக

(04 புள்ளிகள்)

- பொருளாதார வளங்கள் வரையறுக்கப்பட்ட நிரம்பலைக் கொண்டதாயும் பெற்றுக் ாள்ள மனித முயற்சி அல்லது மூலதனம் தேவைப்படும் வளங்களாகும்.

- இவற்றுக்கான கேள்வியுடன் ஒப்பிடுமிடத்து இவற்றின் நிரம்பல் முடிவுள்ளதாக ¡ப்பதனால் இவற்றின் உபயோகம் அமையச் செலவுடன் தொடர்பு பட்டதாகும்.

(01 புள்ளி)

- உதாரணம்:
  1. எண்ணெய் 2. உழைப்பு அல்லது 3. மரக்குற்றி

(01 புள்ளி)

- இலவச வளங்களானவை இயற்கையாகவே அபரிமிதமானவையாகவும் குறிப்பிட்டளவு மனித முயற்சியோ செலவோ ஏற்படாத வளங்களாகும்.

- பூச்சிய விலையில் அவற்றின் நிரம்பல் கேள்வியை விஞ்சியதாக இருப்பதால் பொதுவாக அவை உடைமைகொள்ளப்பட்டதாகவே சந்தைகளில் விற்கப்பட்டதாகவோ இருக்காது.

(01 புள்ளி)

- உதாரணங்கள்:
  1. வளி 2. சூரிய ஒளி 3. புவியீர்ப்பு (01 புள்ளி)

(ii) உழைப்பிற்கும் முயற்சியாண்மைக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை விளக்குக.

(03 புள்ளிகள்)

- உற்பத்திச் செயன்முறையில் தனிநபர்களால் வழங்கப்படும் உடல் மற்றும் உளரீதியிலான ஈடுபாடு உழைப்பு எனப்படும்.

ஒரு வியாபார முயற்சியை ஒழுங்கமைத்து முகாமை செய்து வியாபார இடர்களை ஏற்கும் நடவடிக்கையில் ஈடுபடும் தனிநபர் அல்லது ஒரு குழு முயற்சியாண்மை எனப்படும்.

முயற்சியாளர்கள் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய ஏனைய உற்பத்திக் காரணிகளை (நிலம் உழைப்பு மற்றும் மூலதனம்) ஒருங்கிணைப்பர்.

- பொதுவாக வியாபாரத்தினுள் ஊழியர்கள் தீர்மானமெடுத்தலிலும் இடர்நேர்வை ுலிலும் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையே கொண்டிருப்பர். அவர்கள் பொதுவாக ாமையாளர்களின் அல்லது முயற்சியாளர்களின் அறிவுறுத்தல்களின் கீழ் வேலை செய்வதுடன் லயான கூலி அல்லது வேதனத்தின் மூலம் கொடுப்பனவு செய்யப்படுவர்.

முயற்சியாளர்கள் தாம் எதிர்கொள்ளும் உயர் இடருக்கு பிரதியுபகாரமாக அதிக இலாபத்தைப் பெறுவர் அவர்கள் உபாயரீதியான முடிவுகளை எடுப்பதுடன் மூலதனத்தை முதலீடு செய்து வியாபாரம் தோல்வியடைந்தால் ஏற்படும் இடர் நேர்வையும் எதிர்கொள்வர்.



Scanned with CamScanner
Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- உழைப்பிற்கான வெகுமதியாவது ஊழியர் வழங்கிய நேரம் மற்றும் முயற்சிக்காக வழங்கப்படும் கூலி அல்லது சம்பளமாகும்.

முயற்சியாண்மைக்கான வெகுமதியானது இலாபமாகும் இது எல்லா செலுத்தல்களையும் மேற்கொண்ட பின்னர் எஞ்சும் வருவாயாகும்.

- ஊழியர்களுக்கு சிறப்புத் திறன்களும் தகைமைகளும் தேவைப்படலாம். ஆனால் ஊழியர்கள் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய வேலைகளுக்காக பயிற்றப்படுவதுடன் ஏற்கெனவே தாபிக்கப்பட்டுள்ள செயல் நடைமுறைகளை பின்பற்றவேண்டும்

முயற்சியாண்மையானது புதுப்புனைவு புத்தாக்கம் மற்றும் இடர்நேர்வேற்றல் என்பவற்றுடன் தொடர்பு பட்டது. முயற்சியாளர்கள் போட்டித்தன்மை அநுகூலங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு புதிய பொருள்களை உருவாக்குபவர்களாகவோ ஏற்கெனவே உள்ள செயன்முறைகளை மேம்படுத்த எதிர்பார்க்கும் தொலைநோக்குள்ளவர்களாகவோ இருப்பர்.

- ஊழியர்கள் பொதுவாக தொழில் பாதுகாப்பு வேதனங்கள் மற்றும் ஏனைய நலன்கள் ஊடாக ஊக்குவிக்கப்படுவர்.

முயற்சியாளர்கள் இலாபசாத்தியம் சுயாதீனத்தன்மை என்பவற்றால் உந்தப்படுவதுடன் புத்தாக்கம் அல்லது தனித்துவமான ஏதாவதொன்றை உருவாக்கும் விருப்பத்தைக் கொண்டிருப்பர்.

- ஊழியமானது உற்பத்திக்குத் தேவையான தொழில்படையை வழங்குவதன் மூலம் வியாபார நடவடிக்கைகளை இயலுமானதாக்கி பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கிறது.

முயற்சியாண்மையானது புதிய பொருள்கள் சேவைகள் மற்றும் நடைமுறைகளை அறிமுகப்படுத்தல் தொழில் வாய்ப்புகளை உருவாக்கல் மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த சந்தைகளை உருவாக்கல் ஊடாக பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமானளவு பங்களிப்புச் செய்யும்.

**(ஒன்றிற்கு 01 புள்ளி மூன்று வேறுபாடுகளுக்கு; மொத்தப் புள்ளிகள் 03)**

**(iii) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர்கோடாக அமைவது எத்தகைய நிபந்தனைகளின் கீழாகும்?**

- **நிலையான அமையச் செலவு:** அமையச் செலவு நிலையானதாயின் அதன் கருத்து யாதெனில் ஒரு பொருளின் மேலதிக ஒவ்வொரு அலகினையும் உற்பத்தி செய்ய மற்றைய பொருளின் ஒரு நிலையான அளவினை தியாகம் செய்ய வேண்டும் என்பதாகும்.

**(01 புள்ளி)**

- **வளங்கள் பூரண பதிலீட்டுத் தன்மை வாய்ந்தவை:** உற்பத்தியில் பயன்படுத்தப்படும் வளங்கள் (உழைப்பு மூலதனம் மற்றும் ஏனைய உள்ளீடுகள்) இரு பொருள்களையும் உற்பத்தி செய்வதில் சமமான வினைத்திறனைக் கொண்டிருக்குமாயின் ஒரு பொருளின் உற்பத்தியிலிருந்து இன்னொரு பொருளுற்பத்திக்கு வளங்களை மாற்றும் போது ஏற்படும் அமையச் செலவில் மாற்றமிருக்காது.

**(01 புள்ளி)**

- ஓரினத்தன்மை வாய்ந்த வளங்கள்: எல்லா வளங்களும் ஓரினத்தன்மை வாய்ந்தனவாயின் (அதாவது இரு பொருளையும் உற்பத்தி செய்வதில் சமமான திறன் தரம் மற்றும் உற்பத்தித் திறன் ) உற்பத்தி மாற்றமடையும் போது அமையச் செலவு மாறாதிருக்கும். இந்த ஓரினத்தன்மையானது ஒரு நடைமுறை சூழ்நிலையில் உற்பத்தி இயல்தகவு வளையியை உற்பத்தித் தானத்திலிருந்து வெளிப்புறம் நோக்கிக் குவிவடைக் காரணமாகும். குறைந்து செல்லும் விளைவிதி தொழிற்படுவதை இல்லாமற் செய்து விடுகிறது.

**(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 03)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

(iv) ஒரு கட்டளைப் பொருளாதார முறைமையிலும் சந்தைப் பொருளாதார முறைமையிலும் அரசாங்கத்தின் பணியினை ஒப்பிடுக.

(04 புள்ளிகள்)

- **வளங்கள் மீதும் உற்பத்தித் தீர்மானங்கள் மீதும் கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல்:**
கட்டளைப் பொருளாதாரத்தில் அரசாங்கமானது வளங்கள் மீதும் உற்பத்தித் தீர்மானங்கள் மீதும் பூரண கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். எந்தப் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வது, எவ்வாறு அவற்றை உற்பத்தி செய்வது அவற்றை எவர் பெற்றுக் கொள்வது போன்றவற்றை அது தீர்மானிக்கும். மத்திய திட்டமிடல் அணுகுமுறையானது தனிநபர்களின் விருப்பங்களைவிட தேசிய குறிக்கோள்களை அடைவதையே இலக்காகக் கொண்டுள்ளது.

சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கமானது பொதுவாக உற்பத்தித் தீர்மானங்களில் மட்டுப்படுத்தப்பட்டளவு பணியினையே ஆற்ற முடியும். வளங்கள் கேள்வி நிரம்பல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும் அத்துடன் நிறுவனங்கள் இலாபத்தை உச்சப்படுத்த சுதந்திரமாக உற்பத்தித் தீர்மானங்களை எடுக்கலாம். அரசாங்கமானது சந்தைத் தோல்வி ஏற்படும் போது அல்லது பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு போன்ற அத்தியாவசிய துறைகளில் தேவைப்படும் போது மட்டுமே தலையீடு செய்யும்.

- **வளங்களின் உரிமை**
கட்டளைப் பொருளாதாரத்தில் பெரும்பாலும் நிலம் தொழிற்சாலைகள் மற்றும் மூலதனம் போன்ற எல்லா வளங்களையும் அரசாங்கம் உரிமை கொண்டிருக்கும். மிகக் குறைந்தளவான தனியார் அல்லது தனிநபர் உரிமை காணப்படலாம். அதுவும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகவும் ஒழுங்குறுத்தப்பட்டதாகவும் இருக்கும்.

சந்தைப் பொருளாதாரத்தில் பெரும்பாலான வளங்கள் தனியாருக்குச் சொந்தமானதாக இருக்கும். தனிநபர்களும் வியாபாரங்களும் சொத்துக்களை உரிமை கொள்ளவும் கொள்வனவு செய்யவும் விற்பனை செய்யவும் சுதந்திரமுண்டு.

**பொருளாதார இலக்குகளும் குறிக்கோள்களும்.**
கட்டளைப் பொருளாதாரத்தில் அரசாங்கமானது நிறை தொழில் மட்டம் விலையுறுதிப்பாடு அல்லது வருமான சமபங்கீடு போன்ற தேசிய பொருளாதார இலக்குகளை நிர்ணயித்து முன்னுரிமைப்படுத்தும். பொருளாதாரத்திட்டங்கள் பெரும்பாலும் நீண்டகாலத்திற்குரியனவாகவும் தனிநபரின் இலாப நோக்கத்தின் அடிப்படையிலன்றி சமூகத்தின் நலன் குறிக்கோள்களை குவியப்படுத்தியதாகவும் இருக்கும்.
சந்தைப் பொருளாதாரத்தில் பொருளாதார இலக்குகள் பெருமளவுக்கு தமது தனிப்பட்ட நன்மைகளின் அடிப்படையில் இயங்கும் தனிநபர்கள் மற்றும் மற்றும் வியாபாரங்களால் நிர்ணயிக்கப்படும். அவை ஒட்டுமொத்தமாக பொருளாதார வளர்ச்சியையும் வினைத்திறனையும் புத்தாக்கத்தையும் இயக்கிச் செல்லும். அரசாங்கத்தின் வழமையான பணியாவது சட்டத்தை நடைமுறைப்படுத்துவது சொத்துரிமைகளைப்பாதுகாப்பது பொதுப்பொருள்களை வழங்குவது போன்ற நிலையான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

- **விலையிடல் பொறிமுறை**
கட்டளைப்பொருளாதாரத்தில் சந்தைச் சக்திகளினாலன்றி அரசாங்கத்தினாலேயே விலைகள் நிர்ணயிக்கப்படும். சந்தைப்பொருளாதாரத்தில் கேள்வியும் நிரம்பலும் விலையை நிர்ணயிக்கின்றன. அதன் மூலம் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்கத் தேவையான சமிக்ஞைகள் வழங்கப்படுகின்றன. தனியுரிமைகளை ஒழுங்குறுத்தல் குறைந்தபட்சக் கூலிநிர்ணயம் போன்ற விசேட சந்தப்பங்களிலன்றி அரசாங்கம் பொதுவாக விலையிடலில் தலையீடு செய்வதில்லை.
- **வருமானப் பங்கீடு**
கட்டளைப் பொருளாதாரத்தில் வழமையாகவே பொருளாதார சமத்துவமின்மையை குறைக்கும் நோக்கில் வருமானப்பங்கீடானது அரசாங்கத்தால் அதிகளவில்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

கட்டுப்படுத்தப்படுகின்றது. மிகவும் சமமான வருமானப் பங்கீட்டை ஏற்படுத்தும் நோக்கில் கூலிகளும் விலைகளும் சமூக நலன்புரி விடயங்களும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன.

சந்தைப் பொருளாதாரத்தில் வருமானப்பங்கீடானது சந்தைச் சக்திகளின் கரங்களில் விடப்பட்டுள்ளது. இதனால் திறன் வேறுபாடுகள் உற்பத்தித் திறன் மற்றும் முதலீடு என்பவற்றின் அடிப்படையில் சமமற்ற வருமானப்பங்கீட்டிற்கு இட்டுச் செல்கிறது. வருமானச் சமமின்மையைக் குறைக்க அரசாங்கம் விருத்தி முறை வரிவிதிப்பு சமூகநலத்திட்டங்கள் அல்லது மானியங்கள் ஊடாகத் தலையீடு செய்யலாம்.

- **புத்தாக்கத்திலும் முதலீட்டிலும் பங்களிப்பு**
  கட்டளைப் பொருளாதாரத்தில் புத்தாக்கமும் முதலீடும் அரசாங்கத்தால் திட்டமிடப்படுகிறது. தேசிய முதன்மைத் தெரிவுகளின் அடிப்படையில் அரசாங்கம் குறித்துரைத்த கைத்தொழில்களுக்கும் அரசாங்கம் நிதிகளை ஒதுக்கும். சந்தைப் பொருளாதாரத்தில் புத்தாக்கமும் முதலீடும் இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்ட தனியார் வியாபாரங்களாலும் முயற்சியாளர்களாலும் இயக்கப்படுகின்றன.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி நான்கு விடயங்களுக்கு மொத்தப்புள்ளிகள் 04)**

**(v) சந்தைப்பொருளாதார கட்டளைப்பொருளாதார மற்றும் கலப்புப் பொருளாதார முறைமைகள் அருமை பற்றிய பிரச்சினையை எவ்வாறு தீர்க்கின்றன என்பதை விளக்கி இவ்வணுகுமுறைகள் ஒவ்வொன்றினதும் பயனுறுதன்மையினை மதிப்பிடுக.**

**(06 புள்ளிகள்)**

**சந்தைப் பொருளாதாரம் :**

**அருமைத் தன்மைக்கான அணுகுமுறை:**

- சந்தைப் பொருளாதாரத்தில் அருமைத்தன்மையானது பிரதானமாக விலைப் பொறிமுறையூடாக முகாமை செய்யப்படுகிறது. வளங்கள் கேள்வி மற்றும் நிரம்பலால் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அங்கே விலைகள் சமிக்ஞைகளாகத் தொழில்படுகின்றன. ஒரு பொருளோ அல்லது வளமோ அருமையாக உள்ளபோது அதன் விலை அதிகரிக்கும். அது நுகர்வைக் குறைக்கும் அதேவேளை நிரம்பலை அதிகரிக்கும். மறுதலையாக ஒரு வளமோ பொருளோ அதிகளவில் கிடைக்குமாயின் அதன் விலை குறையும் இது உற்பத்தியைக் குறைக்கும் அதேவேளை நுகர்வை அதிகரிக்கும்.

**(01 புள்ளி)**

- **வினைத்திறன்:**
  **- அனுகூலங்கள்** : கேள்வி நிரம்பலில் ஏற்படும் மாற்றங்களுக்கு உரிய துலங்கலை மேற்கொள்வதில் சந்தைப்பொருளாதாரமானது உயர் வினைத்திறன் கொண்டது. விலைப் பொறிமுறையானது வளங்கள் அவற்றின் பெறுமதி கூடிய பயன்பாட்டில் ஒதுக்கப்படுவதை உறுதி செய்கிறது. நுகர்வோர் தாம் உயர்பெறுமதி கொண்டதாகக் கருதுவனவற்றிற்கு அதிக விலை தரத் தயாராக இருப்பர். உற்பத்தியாளர் அதற்கேற்ப தமது நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

**- வரையறைகள்:** தூய சந்தைப் பொருளாதாரமானது அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை ஏற்படுவதைச் சமமாகக் கருத்திற் கொள்வதில்லை. அதிக வருமானம் கொண்டவர்கள் அருமையான வளங்களை அதிகளவில் அடையும் அதேவேளை குறைந்த வருமானங் கொண்டவர்கள் விலக்கப்படலாம். சந்தைப் பொருளாதாரங்கள் பொதுப்பொருள்களை (தூய வளி போன்ற) போதியளவில் வழங்காதிருக்கலாம் அல்லது (மாசுபாடு போன்ற) வெளிவாரிகளோடு போராட நேரலாம். இதனால் சுத்தமான வளங்களின் அருமைத் தன்மை அதிகரிக்கும்.

**(01 புள்ளி)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**கட்டளைப்பொருளாதாரம் வரையறைகள்:**

**அருமைத் தன்மைக்கான அணுகுமுறை:**
கட்டளைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் வளஒதுக்கீட்டை மத்திய திட்டமிடல் ரீதியில் திட்டமிட்டு கட்டுப்படுத்துகிறது. எப்பொருள்களும் சேவைகளும் எந்த அளவில் என்ன விலையில் உற்பத்தி செய்யப்படவேண்டும் என்பதை திட்டமிடலாளர்கள் தீர்மானிக்கின்றனர்.

தேசிய முன்னுரிமைகளையும் சமூக தேவைகளையும் பூர்த்தி செய்வதை இலக்குப்படுத்தியதாக வளங்களை ஒதுக்கீடு செய்வதை அரசாங்கம் குறிக்கோளாகக் கொண்டிருக்குமேயன்றி தனிநபர் கேள்வி நிரம்பல் வழங்கும் சமிக்ஞைகளின் மீது தங்கியிருப்பதன் மூலம் அன்று.

**(01 புள்ளி)**

- **பயனுறுதித்தன்மை:**

**- அனுகூலங்கள்:** கோட்பாட்டு ரீதியில் கட்டளைப்பொருளாதாரங்கள் அப்படைத் தேவைகள் பூத்தி செய்யப்படுவதையும் வளங்கள் மிகவும் சமமாக ஒதுக்கீடு செய்யப்படுவதையும் உறுதிசெய்ய முடியும். உற்பத்தியையும் பங்கீட்டையும் திட்டமிடுவதன் மூலம் அரசாங்கம் முக்கிய கைத்தொழிற்துறைகள் மீது கவனஞ் செலுத்தலாம். அத்துடன் தனிநபரின் வருமான மட்டங்களைக் கருத்திற் கொள்ளாது அத்தியாவசியப் பொருள்களையும் சேவைகளையும் எல்லோருக்கும் வழங்கும் வண்ணம் வளங்களை ஒதுக்கீடு செய்யலாம்.

**- வரையறைகள்:** சந்தை முறைமையின் இயங்கியல் தன்மைவாய்ந்த துலங்கல்களுக்கு ஈடுகொடுக்க மத்திய திட்டமிடலுக்கு முடியாத காரணத்தால் கட்டளைப்பொருளாதாரங்கள் வினைத்திறனற்றவையாக மாறுகின்றன.

உண்மையான நுகர்வோரின் விருப்பத் தெரிவுகள் பற்றிய கரிசனை இன்றி தெரிவுகள் மேற்கொள்ளப்படுவதனால் பற்றாக்குறைகள் ஏற்படலாம் (திட்டமிடலாளர்கள் கேள்வியை குறைத்தது மதிப்பிடும் போது) அல்லது மிகை உருவாகலாம் (அவர்கள் கேள்வியை மிகை மதிப்பீடு செய்யும் போது). இந்த இறுக்கத்தன்மையானது சில பொருள்களின் தொடர்ச்சியான பற்றாக்குறைக்கும் வேறு சிலவற்றின் மிகைஉற்பத்திக்கும் இட்டுச்செல்லலாம்.

**(01 புள்ளி)**

**கலப்புப் பொருளாதாரம் :**

**- அருமைத் தன்மைக்கான அணுகுமுறை:** ஒரு கலப்புப்பொருளாதாரமானது அருமைத்தன்மையைக் கையாள்வதற்கு கட்டளைப்பொருளாதாரம் சந்தைப்பொருளாதாரம் ஆகியவற்றின் பண்புகளை இணைத்துக் கையாள்கிறது. அரசாங்கமானது முக்கியமாக அத்தியாவசியப் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்காகவும் சிலவகைக் கைத்தொழில்களை ஒழுங்குறுத்துவதற்காகவும் அத்துடன் வளங்களை சமபங்கீடு செய்வதற்காகவும் சந்தையில் தலையீடு செய்கின்றது. விலைப்பொறிமுறையினால் வழிநடத்தப்படும் தனியார் துறையானது வினைத்திறனும் நுகர்வோர் தெரிவும் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் ஏனைய துறைகளைக் கையாளும்.

(01 புள்ளி)

**பயனுறுதித்தன்மை:**

**- அனுகூலங்கள்:** கலப்புப்பொருளாதாரங்கள் சந்தை முறைமையின் நெகிழ்தன்மையினையும் வினைத்திறனையும் கொண்டுள்ளதுடன் சந்தைத்தோல்விகளைக் கட்டுப்படுத்த அரசாங்கத் தலையீட்டை அனுமதிப்பதுடன் கூடுதலான சமபங்கீட்டையும் உறுதிப்படுத்துகிறது. சுகாதாரம் கல்வி சூழற்பாதுகாப்பு போன்ற பொதுப்பொருள்கள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. அதன்மூலம் சந்தைத் தோல்வியடையும் துறைகளில் நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்கும். இம்முறைமையானது வினைத்திறன் மற்றும் சமூக சமத்துவம் ஆகிய இரண்டையும் சமநிலையில் பேணமுடியும்.

**- வரையறைகள்:** கலப்புப் பொருளாதாரங்கள் சிக்கலானவையாக இருப்பதுடன் சந்தைச் சுதந்திரத்திற்கும் அரசாங்கத் தலையீட்டிற்கும் இடையிலான ஒரு சரியான சமநிலையைப் பேணுவதில் சவால்களை எதிர்கொள்ளலாம். மிக அதிகளவிலான தலையீடு புத்தாக்கத்தையும் வினைத்திறனையும் பாதிக்கும் மிகக்குறைந்த தலையீடு ஏற்றத்தாழ்வுகளை அதிகரிப்பதோடு பூர்த்தி செய்யப்படாத தேவைகளையும் அதிகரிக்கும். 5

**(01 புள்ளி)**
**(மொத்தப் புள்ளிகள் 06)**



Scanned with CamScanner
Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. (i) தனிநபர் கேள்வி வளையிகளிலிருந்து சந்தைக் கேள்வி வளையியைப் பெறும் விதத்தை வரைபடங்கள் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) கேள்வியின் விலை நெகிழ்ச்சி என்பதால் கருதப்படுவதென்ன? மொத்த வருவாயில் அது எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும்? (03 புள்ளிகள்)

(iii) ஒரு பொருளின் சந்தை நிரம்பல் வளையியில் செல்வாக்குச் செலுத்தவல்ல அரசாங்கத்தின் மூன்று கொள்கைக் கருவிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) சந்தைச் சமநிலை எண்ணக்கருவை வரைவிலக்கணம் செய்து சந்தைச் சமமின்மையிலிருந்து சந்தைச் சமநிலையை நோக்கி இட்டுச் செல்லும் சக்திகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) நுகர்வோர் மிகையையும் உற்பத்தியாளன் மிகையையும் வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)


(ஆ) விலைக்கேள்வி நெகிழ்ச்சி நுகர்வோர் மிகையை எவ்வாறு பாதிக்கும் என்பதை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

**2, (i) தனிநபர் நேள்வி வளையிகளிலிருந்து சந்தைக் கேள்வி வளையியைப் பெறும் விதத்தை வரைபடங்கள் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)**

- சந்தைக்கேள்வி என்பது ஒரு சந்தையிலுள்ள எல்லா நுகர்வோரும் ஒரு பொருளை பல்வேறு விலைகளில் கொள்வனவு செய்யும் இயலுமையுடன் கொள்ளவனவு செய்ய விரும்பும் மொத்தத் தொகையாகும். இதனைத் தனிநபர் கேள்வி வளையிகளின் கிடையச்சுத் தொகைகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும். அத்தகைய வரைபடம் தனிநபர் கேள்வி வளையிகளை கிடையாகக் கூட்டுவதன் மூலம் சந்தைக் கேள்வி வளையி பெறப்பட்டிருப்பதைக் காட்டும். இது ஒவ்வொரு விலை மட்டத்திலும் கேள்வி எழுப்பப்படும் மொத்தத் தொகையினை பிரதிபலிக்கும். **(02 புள்ளிகள்)**

***A market demand curve is the horizontal summation of the individual demand curves i.e. by taking the sum of the quantities consumed by individual consumers at each price.***

Consider a market consisting of two consumers:




At price P1 fig. 2:2 above, consumer 1 demands q1, consumer II demands quantity q2, and total market demand at that price is $(q_1+q_2)$. At price p2, consumer 1 demands $q'_1$, and consumer II demands quantity $q'_2$ and total market demand at that price is $(q'_1+q'_2)$. DD is the total market demand curve.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

**(ii) கேள்வியின் விலை நெகிழ்ச்சி என்பதனால் கருதப்படுவதென்ன? மொத்த வருவாயில் அது எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும்?**

**- விலைக் கேள்வி நெகிழ்ச்சி (PED)** ஒரு பொருளின் அல்லது சேவையின் விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு அதன் கேள்வித்தொகை எத்தகைய துலங்கலைக் கொண்டுள்ளது என்பதை அளவிடுகிறது. **(01 புள்ளி)**

கணிதரீதியில் அது பின்வருமாறு கணிப்பிடப்படும்:

$$PED = \frac{\%\ \text{Change in Quantity Demanded}}{\%\ \text{Change in Price}}$$

**(சமன்பாடு அவசியமில்லை)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- மொத்த வருவாயின் மீதான தாக்கம்:
  - நெகிழ்வுள்ள கேள்வி (PED > 1):

கேள்வி நெகிழ்வுள்ள போது விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது கேள்வித் தொகையில் அதிகசதவீத அதிகரிப்பை ஏற்படுத்துவதனால் மொத்த வருவாயில் அதிகரிப்பு ஏற்படும். மறுபுறம் விலையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு மொத்த வருவாயை வீழ்ச்சியடையச் செய்யும்.

  - நெகிழ்வற்ற கேள்வி (PED < 1):

கேள்வி நெகிழ்வற்றதாயின் ஒரு விலையதிகரிப்பு கேள்வித் தொகையில் ஒரு மிகச் சிறிய வீழ்ச்சியையே ஏற்படுத்தும். இதனால் மொத்தவருவாய் அதிகரிக்கும். அவ்வாறே ஒரு விலை வீழ்ச்சி மொத்த வருவாயில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

**(ஏனைய நெகிழ்ச்சிப் பெறுமதிகளின் அடிப்படையில் விடை இருப்பினும் புள்ளி வழங்குக)**

**(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

(iii) ஒரு பண்டத்தின் சந்தை நிரம்பல் வளையியில் செல்வாக்குச் செலுத்தும் அரசாங்கத்தின் மூன்று முக்கிய கொள்கைக் கருவிகளைக் குறிப்பிடுக.

- **மானியங்கள்:** ஒரு மானியம் என்பது உற்பத்திச் செலவைக் குறைக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் உற்பத்தியாளருக்கு வழங்கப்படும் நிதியுதவியாகும்.
- **வரிகள் (நேரில் வரிகள்):** ஒரு பொருளின் உற்பத்தியின் மீது அல்லது விற்பனையின் மீது விதிக்கப்படும் கலால் வரி மற்றும் பெறுமதி சேர்வரி விசேட பண்டவரிகள் போன்றவை.
- **ஒழுங்குறுத்தல்களும் தரநியமங்களும்:** உற்பத்தியாளர்கள் பின்பற்ற வேண்டியுள்ள உற்பத்தி நடைமுறைகள் பாதுகாப்பு நியமங்கள் சூழல்பாதுகாப்பு சட்டங்கள் போன்ற அரசாங்க ஒழுங்குறுத்தல்கள்.
- அரசாங்கத்தின் உற்பத்தியும் தாங்கிருப்புப் பேணும் கொள்கைகளும்:

அரசாங்கம் பொருள்களை நேரடியாக உற்பத்தி செய்வதன் மூலம் (அரசதுறை தொழில் முயற்சிகள் ) அல்லது அத்தியாவசியப் பொருள்களின் (பெற்றோலியம் அரிசி சீனி) கையிருப்புகளை சந்தைக்கு வழங்குவதன் மூலம் சிலவகைப் பண்டங்களின் சந்தை நிரம்பலில் செல்வாக்கு செலுத்தி சந்தை நிரம்பலை உறுதிப்படுத்தலாம் .

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி நான்கு கருவிகளுக்கு; மொத்தப் புள்ளிகள் 03)**

(iv) சந்தை சமநிலை எண்ணக்கருவையும் சந்தையை சமநிலையை நோக்கி இயக்கிச் செல்லும் சக்திகளையும் விளக்குக.

- நுகர்வோரால் குறித்த ஒரு விலையில் ஒரு பொருளின் அல்லது சேவையின் மீது எழுப்பப்படும் கேள்வித்தொகையானது நிரம்பலாளரால் நிரம்பல் செய்யப்படும் தொகைக்கு சமப்படும் நிலைமை சமநிலை எனப்படும்.
- (01 புள்ளி)
- இப்புள்ளியில் சந்தையானது சமதளத்தில் இருக்கும். அதன்போது நுகர்வோரும் விற்பனையாளரும் திருப்தியடைவதால் விலை மாற்றமடைவதற்கான எந்தப் போக்கும் காணப்படாது.

(01 புள்ளி)

-**சமநிலையை நோக்கி சந்தையை இயக்கிச் செல்லும் சக்திகள்:** கேள்வி நிரம்பல் ஆகியவற்றின் இயக்கத்தால் சந்தையானது சமநிலையை நோக்கி அசையும். அதன் போது மிகைநிரம்பல் (மிகைநிலை) அல்லது மிகைக் கேள்வி (பற்றாக்குறை) சக்திகள் உருவாகும்.

-ஒரு பொருளின் விலையானது சமநிலை விலையை விட உயர்வாக உள்ளபோது மிகைநிரம்பல் உருவாகும். நிரம்பல் செய்யப்படும் தொகை கேள்வி எழுப்பப்படும் தொகையை விட உயர்வாக இருக்கும்.
-உற்பத்தியாளர்களிடம் விற்றுத் தீர்க்கப்படாத பொருள்கள் இருப்பதனால் விலையில் கீழ் நோக்கிய அழுத்தம் உருவாகும். மிகைநிரம்பலை அகற்றும் பொருட்டு விற்பனையாளர் விலைகளைக் குறைப்பர். இது கேள்வி எழுப்பப்படும் தொகையில் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தும்.

**(01 புள்ளி)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

-ஒரு பொருளின் விலையானது சமநிலை விலையை விடக் குறைவாக இருப்பின் மிகைக் கேள்வி உருவாகும். இதன்போது கேள்வி எழுப்பப்படும் தொகையானது நிரம்பல் செய்யப்படும் தொகையை விட உயர்வாக இருக்கும். வரையறுக்கப்பட்ட நிரம்பலைப்பெற்றுக் கொள்ள நுகர்வோர் தமக்கிடையில் போட்டியிடுவதனால் விலையில் மேல்நோக்கிய அழுத்தம் ஏற்படும். விற்பனையாளர்கள் விலையை அதிகரிப்பர். இதனால் கேள்வித் தொகையில் வீழ்ச்சி ஏற்படும். விலை அதிகரிப்பு நிரம்பலைத் தூண்டுவதால் நிரம்பல் தொகையில் ஒரு அதிகரிப்பு ஏற்படும். இச்செயன்முறையானது விலையானது சமநிலைவிலையை அடைந்து பற்றாக்குறை நீங்கும் வரையில் தொடரும்

**(01 புள்ளி)**

**(மொத்தப்புள்ளிகள் 04)**


(v) (a) - நுகர்வோர் மிகை என்பது நுகர்வோர் ஒரு பொருளுக்கு அல்லது சேவைக்கு செலுத்த விரும்பும் உச்சவிலைக்கும் உண்மையில் செலுத்தும் விலைக்கும் இடையிலான வேறுபாடாகும். **(01 புள்ளி)**

- உற்பத்தியாளர் மிகை என்பது உற்பத்தியாளர் ஒரு பொருள் அல்லது சேவைக்காக பெறவிரும்பும் குறைந்தபட்ச விலைக்கும் உண்மையில் பெறும் விலைக்கும் இடையிலான வேறுபாடாகும்.

**(01 புள்ளி)**

(b) - பூரண நெகிழ்வுள்ள கேள்வி (PED = ∞): நுகர்வோர் விலைமாற்றங்களுக்கு முடிவில்லாத் துலங்கலைக் கொண்டிருப்பர். குறித்த விலைக்கு மேல் விலை அதிகரித்தால் அவர்கள் கொள்வனவை முழுமையாக நிறுத்துவர். ஏனெனில் நுகர்வோர் குறிப்பிட்ட ஒரு விலையில் மட்டுமே கொள்வனவு செய்ய விரும்புவதால் நுகர்வோர் மிகையானது பூச்சியத்தை அண்மித்ததாகக் காணப்படும். விலையில் ஒரு மிகச் சிறிய அதிகரிப்பு நுகர்வோர் மிகையை முழுமையாக அகற்றி விடும்.


**(01 புள்ளி)**




(01 புள்ளி)

- பூரண நெகிழ்வற்ற கேள்வி (PED = 0): விலையில் என்ன மாற்றம் ஏற்பட்டாலும் கேள்வித்தொகையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. எந்தவொரு விலையிலும் நுகர்வோர் மிகை உச்சப்படுத்தப்படும். விலை மாற்றங்கள் மொத்தச் செலவை மட்டுமே பாதிக்கும் நுகரப்படும் அளவைப் பாதிக்காது.

**(01 புள்ளி)**




**(01 புள்ளி)**

**(Total marks 04)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

3. (i) விசேட வரி ஒன்றிற்கும் பெறுமதி அடிப்படையிலான வரிக்கும் (ad-valorem tax) இடையிலான வேறுபாட்டைக் கூறுக. (02 புள்ளிகள்)

(ii) தாராள சந்தையொன்றில் வரியொன்றின் மூலமும் மானியம் ஒன்றின் மூலமும் உருவாக்கப்படும் மீள முடியா இழப்பை (deadweight loss) வரைபடங்களைப் பயன்படுத்திக் காட்டுக. (04 புள்ளிகள்)

(iii) உச்ச நிர்ணயமானது நுகர்வோர் மிகை, உற்பத்தியாளன் மிகை மற்றும் முழு பொருளாதார நலன் மீது ஏற்படுத்தும் தாக்கவிளைவைப் பகுப்பாய்வு செய்க. (06 புள்ளிகள்)

(iv) பசும் பாலுக்கான சந்தைக் கேள்வித் தொழிற்பாடு $Q_D = 280 - 2P$ ஆகவும், சந்தை நிரம்பல் தொழிற்பாடு $Q_S = -220 + 3P$ ஆகவும் உள்ளதாகக் கொள்க. (தொகை மில்லியன் லீற்றரிலும் விலை ரூபாவிலும் தரப்பட்டுள்ளன.)


(அ) சமநிலை விலையும் சமநிலைத் தொகையும் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) பாற்பண்ணையாளர் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு பால் லீற்றருக்கும் ரூபா. 10 மானியம் வழங்கப்படுவதாகக் கொள்க. புதிய சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை யாவை? (04 புள்ளிகள்)

(இ) இந்நிலைமையின் கீழ் முழு மானியத்தின் அளவும் பாற்பண்ணையாளருக்குக் கிடைக்குமா? கிடைக்காதாயின், பாற்பண்ணையாளருக்கு உண்மையில் மொத்த மானியத்தில் கிடைக்கும் சதவீதம் யாது? (02 புள்ளிகள்)

3 (i) விசேட வரி ஒன்றிற்கும் பெறுமதி அடிப்படையிலான வரிக்கும் இடையிலான வேறுபாட்டைக் கூறுக.

- ஒரு விசேட வரியானது ஒரு பொருளின் அல்லது சேவையின் ஒவ்வொரு அலகின் மீதும் ஒரு குறிப்பிட்ட அளவில் வரிவிதிப்பதாகும். (01 புள்ளி)
- ஒரு பெறுமதி அடிப்படையிலான வரி பொருளின் அல்லது சேவையின் பெறுமதியின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை வரியாக விதிப்பதாகும் . (01 புள்ளி)





(மொத்தப் புள்ளிகள் 02)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**(ii)** ஒரு தாராள சந்தையொன்றில் வரியொன்றின் மூலமும் மானியம் ஒன்றின் மூலமும் உருவாக்கப்படும் மீளமுடியா இழப்பை வரைபடங்களைப் பயன்படுத்திக் காட்டுக .


- **ஒரு வரியின் காரணமாக ஏற்படும் மீளமுடியாநலனிழப்பு :** ஒரு பண்டத்தின் மீது விதிக்கப்படும் வரியானது நுகர்வோர் செலுத்தும் விலையை அதிகரிப்பதுடன் உற்பத்தியாளர் பெறும் விலையை குறைக்கும். இதனால் நுகர்வோரும் உற்பத்தியாளரும் பரிமாற்றம் செய்யும் அளவைக்குறைக்கச் செய்து வினைத்திறனின்மைக்கு இட்டுச் செல்லும்.




- வரிக்கு முன்னர் சந்தையானது P1 விலையிலும் Q1, தொகையிலும் கேள்வி நிரம்பலுக்கு சமமாகும் நிலையில் சமநிலையடையும். வரி விதிக்கப்பட்ட பின்னர் நுகர்வோர் செலுத்தும் விலை P2, ஆக அதிகரிப்பதுடன் உற்பத்தியாளன் பெறும் விலை P3 ஆக வீழ்ச்சியடையும். சந்தையில் பரிமாறப்படும் புதிய தொகை Q2 வரையில் வீழ்ச்சியடைகிறது.

- கேள்வி வளையியினதும் நிரம்பல் வளையியினதும் எல்லைக்குட்பட்டு ஆரம்பத்தொகைக்கும் Q1 புதிய தொகைக்கும் Q2, இடையில் காணப்படும் முக்கோணம் வரியினால் ஏற்படும் மீளமுடியா நலனிழப்பை (DWL) பிரதிநிதித்துவப்படுத்துகிறது. வரியின் காரணமாக ஒருசில கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் இடம்பெறுவதனால் இப்பகுதியானது பொருளாதார நலனில் ஏற்படும் இழப்பைப் பிரதிபலிக்கிறது.

- **மானியத்தின் மூலம் ஏற்படும் மீளமுடியா நலனிழப்பு:** ஒரு மானியம் நுகர்வோர் செலுத்தம் விலையை குறைக்கும் அதேவேளை உற்பத்தியாளர் பெறும் விலையை அதிகரிக்கும், இது சந்தை சமநிலை எய்தக்கூடிய உற்பத்தி மற்றும் நுகர்வை விடக் கூடுதலான அளவிலான உற்பத்திக்கும் நுகர்வுக்கும் இட்டுச் செல்லும். இவ்வாறு மேலதிகமாக ஏற்படும் உற்பத்தியும் நுகர்வும் அவற்றின் செலவை விடக் குறைவாக மதிப்பிடப்படுவதனால் வினைத்திறனின்மைக்கு இட்டுச் செல்கிறது.






Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- மானியத்திற்கு முன்பு P1 விலையிலும் Q1தொகையிலும் சந்தை சமநிலையடையும். மானியம் வழங்கப்பட்ட பின்னர், நுகர்வோர் P2 என்னும் குறைந்த விலையை செலுத்துவர். உற்பத்தியாளர்கள் மானியத்தின் காரணமாக P3 என்னும் உயர்ந்த விலையைப் பெறுவர். விற்பனை செய்யப்பட்ட புதிய தொகை சமநிலைத்தொகையாகிய Q1 இனைத் தாண்டி Q2 வரை அதிகரிக்கும். ஆரம்ப சமநிலைத் தொகைக்கும் Q1 புதிய தொகை Q2 இடையிலான கேள்வி நிரம்பல் வளையிகளால் எல்லையிடப்பட்ட முக்கோணப் பிரதேசம் மானியத்தின் மீளமுடியாநலன் இழப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும். இப்பிரதேசம் மானியத்தின் காரணமாக ஏற்படும் வினைத்திறனற்ற மிகைஉற்பத்தியினையும் மிகை நுகர்வினையும் பிரதிபலிக்கிறது.

(iii) உச்சவிலை நிர்ணயமானது நுகர்வோர் மிகை உற்பத்தியாளன் மற்றும் மிகை மற்றும் முழு பொருளாதார நலன் என்பவை மீது ஏற்படுத்தும் தாக்க விளைவைப் புகுப்பாய்வு செய்க

- **நுகர்வோர் மிகையின் மீது ஏற்படுத்தும் விளைவு**

  - உச்சவிலையானது சமநிலை விலைக்குக் கீழே நிர்ணயிக்கப்படும்போது அது நுகர்வோர் பொருளை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய அனுமதிக்கும், இது நுகர்வோர் மிகையை அதிகரிக்கும்.

  - எவ்வாறாயினும் ஒரு விலை உச்சவரம்பு நிரம்பல் தொகையை விடக் கேள்வித்தொகையை அதிகரிக்கச் செய்வதனால் வழமையாக பற்றாக்குறையை ஏற்படுத்தும். அதாவது சமநிலைவிலையை செலுத்தவிரும்பும் சில நுகர்வோர்கள் அப்பொருளை அறவே பெறமுடியாத நிலை ஏற்படும். இதனால் அவர்களது நுகர்வோர் மிகை குறைவடையும்.

- **உற்பத்தியாளன் மிகையின் மீதான தாக்கம்**

  - உச்சவிலையானது சமநிலை விலைக்குக் கீழே நிர்ணயிக்கப்படும்போது அது பின்வரும் காரணங்களால் உற்பத்தியாளர் மிகையை குறைவடையச் செய்யும்:

  - குறைந்த வருமான மட்டம்: உற்பத்தியாளர்கள் தாராள சந்தையில் நிலவும் விலையை விடக் குறைந்தவிலையில் பொருளை விற்க நிர்ப்பந்திக்கப்படுவதால் அவர்களது விற்பனைவருவாய்களும் இலாப வீதங்களும் குறைவடையும்.

  - உற்பத்தி குறைவடைதல்: குறைந்த விலையின் காரணமாக, உற்பத்தியாளர்கள் நிரம்பல் தொகையைக் குறைக்கலாம். ஓன்றில் உச்சவரம்பு விதிக்கப்பட்ட விலையில் உற்பத்தி செய்வது குறைந்த இலாபமீட்டுவதாக இருக்கலாம் அல்லது அவ்விலையில் நட்டத்தை எதிர்கொள்ளநேரிடலாம். இது உற்பத்தியாளன் மிகையினை மேலும் வீழ்ச்சியடையச் செய்யும்.

  - சந்தையிலிருந்து வெளியேறல்: சில உற்பத்தியாளர் குறைந்தவிலைகளில் உற்பத்தியை கொண்டுநடத்துவது நிலைத்திருக்க உதவாது எனக்காண்பதால் சந்தையை விட்டு வெளியேறுவர்.

- **மொத்தப் பொருளாதார மிகையின் மீதான தாக்கம்**

  - பொதுவான சந்தை நிலைமைகளின் கீழ், விலை உச்சவரம்புகள் நுகர்வோர் மிகையை அதிகரிக்கச் செய்யும். நுகர்வோர் சந்தைவிலையை விலையை விட குறைவான



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

விலையில் கொள்வனவு செய்யமுடிவது இதற்கான காரணமாகும். ஆனால் கேள்வியானது போதியளவு நெகிழ்ச்சியற்றதாக இல்லாவிட்டால் நுகர்வோர் மிகை வீழ்ச்சியடையலாம்.

- குறைந்த விலையில் வர்த்தகத்தின் தொகையாகிய பருமன் குறைவடைவதால் உற்பத்தியாளன் மிகை வீழ்ச்சியடையும்.

- ஒரு விலை உச்சவரம்பு விலையானது சமநிலை மட்டத்தை அடையவிடாது தடுப்பதால் சந்தையில் வினைத்திறனின்மையை ஏற்படுத்தும். நிரம்பல் செய்யப்படும் தொகை குறைவடையும் அதேவேளை கேள்வித்தொகை அதிகரிக்கும். அது இவை இரண்டிற்குமிடையில் ஒரு பொருத்தப்பாடின்மையை ஏற்படுத்தும். இது மொத்த பொருளாதார நலனில் ஒரு இழப்பை அதாவது மீளமுடியா சமூகநலனிழப்பை ஏற்படுத்தும்.

- ஒரு விலை உச்சவரம்பு பொதுவாக பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லும். கேள்வியுடன் ஒப்பிடுமிடத்து நிரம்பல் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும். இப்பற்றாக்குறையானது மீளமுடியாத நலனிழப்புக்கு இட்டுச் செல்வது மட்டுமன்றி விலைதவிர்ந்த ஏனைய பங்கீட்டு முறைமைகளுக்கும் (e.g., நீண்ட வரிசைகள், கறுப்புச் சந்தைகள்), இட்டுச் செல்வதால் மொத்த நலன் மேலும் வீழ்ச்சியடையும **(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 06)**

(iv) (a) - பசும் பாலுக்கான சந்தைச் சமநிலை: $Q_D = Q_S$

$Q_D = 280 - 2P$ $\quad$ $Q_S = -220 + 3P$

$280 - 2P = -220 + 3P$

$500 = 5P$ $\quad$ சமநிலை விலை = லீற்றருக்கு ரூபா. 100 **(01 புள்ளி)**

சமநிலைத்தொகை $= 280 - 2\ (100) = 280 - 200 = 80$ (மில்லியன் லீற்றர்) **(01 புள்ளி)**

(b) மானியத்தின் பின் புதிய சமநிலை விலையும் சமநிலைத்தொகையும்

$Q_D = Q_{S1}$

$280 - 2P = -220 + 3\ (P + 10)$ **(01 புள்ளி)**

$280 - 2P = -220 + 3P + 30$

$280 - 2P = -190 + 3P$

$470 = 5P$

$94 = P$ $\quad$ புதிய சமநிலை விலை = லீற்றருக்கு ரூபா. 94 **(01 புள்ளி)**

புதிய சமநிலைத் தொகை $= 280 - 2\ (94)$

$= 280 - 188 = 92$ (மில்லியன் லீற்றர்) **(02 புள்ளிகள்)**

(c) - பாற்பண்ணையாளர்கள் மானியத்தின் முழு அளவையும் பெறுவதில்லை

- மானியத்திற்கு முன்னர் பண்ணையாளர்கள் லீற்றருக்கு 100 ரூபாவைப் பெற்றனர்
- மானியத்தின் பின்னர் பண்ணையாளர்கள் லீற்றருக்கு 104 = (94 + 10) ரூபாவைப் பெற்றனர்
- மானியத்தின் அளவு ரூபா. 10; ஆனால் பண்ணையாளர்கள் பெறுவது லீற்றருக்கு 4 ரூபா மட்டுமேயாகும்
- பாற்பண்னணையாளர் பெற்றுக்கொண்ட மானியத்தின் சதவீதம் = 4 / 10 = 40% ஆகும்

**(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 08)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

4. (i) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டு நிலைமையின் போது குறைந்து செல்லும் விளைவு விதியினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் ஒரு நிறுவனம் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டத்தை எவ்வாறு தீர்மானிக்கும்? (03 புள்ளிகள்)

(iii) உற்பத்திக் காலப்பகுதி ஒன்றில், ஒரு நிறுவனம் ரூபா 200 000 மொத்த வருமானத்தைப் பெறும் அதேவேளை, அதன் வெளிப்படையான செலவுகள் (நேரடிச் செலவு) ரூபா 150 000 ஆகும். நிறுவன உரிமையாளரின் மூலதனம் மற்றும் உழைப்பின் அமையச் செலவு ஆகியவற்றை உள்ளடக்கிய உள்ளார்ந்த செலவுகள் ரூபா 70 000 ஆகும்.
நிறுவனத்தின் கணக்கியல் இலாபத்தையும் பொருளியல் இலாபத்தையும் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு போன்ற விடயத்தால் நிறுவனத்தின் செலவுக் கட்டமைப்பில் ஏற்படும் ஒரு பெயர்ச்சியானது நிறுவனத்தின் குறுங்கால நிரம்பல் வளையியையும் ஒட்டுமொத்த கைத்தொழிலின் நிரம்பல் வளையியையும் எவ்வாறு பாதிக்கும் என விளக்குக. உமது விளக்கத்திற்கு ஆதரவாக பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்துக. (05 புள்ளிகள்)

(v) ஒரு நிறைபோட்டி நிறுவனமானது அதன் வெளியீட்டை அலகொன்று ரூபா 120 சந்தை விலையில் விற்பனை செய்கிறது. 60 அலகுகள் விற்பனை செய்யப்படும்போது நிறுவனத்தின் சராசரி நிலையான செலவு ரூபா 20 உம் சராசரி மாறும் செலவு ரூபா 80 உம் ஆகும்.
(அ) இவ் வெளியீட்டு மட்டத்தில் நிறுவனத்தின் மொத்த வருவாய், மொத்த செலவு மற்றும் பொருளாதார இலாபம் அல்லது நட்டம் ஆகியவற்றைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)
(ஆ) இவ்வெளியீட்டு மட்டத்தில் உற்பத்தியாளன் மிகையினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

4. (i) குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டு நிலைமையின் போது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியினை வரைவிலக்கணப்படுத்துக.

- குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியானது, ஏனைய காரணிகள் மாறாநிலையில் குறுங்காலத்தில், (உழைப்பு போன்ற) மாறுங்காரணியின் மேலதிக அலகுகளை ஒரு நிலையான காரணியுடன் (மூலதனம் அல்லது நிலம் போன்ற), சேர்க்கும் போது மாறுங்காரணியின் ஒவ்வொரு உள்ளீட்டிற்குமான எல்லை உற்பத்தியானது இறுதியில் குறைவடைந்து செல்லும் எனக்கூறுகிறது.

**(02 புள்ளிகள்)**

(ii) **எல்லை வருவாய் (MR) = எல்லைச் செலவு (MC) அணுகுமுறை:**
**MR = MC ஆகும் பொது இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம் இடம் பெறும்.**
**(02 புள்ளி)**

- எல்லை வருவாய் (MR) என்பது வெளியீட்டின் மேலதிக ஒரு அலகினை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் மேலதிக வருவாய் ஆகும். எல்லைச் செலவு என்பது மேலதிக ஒரு அலகு உற்பத்தியை மேற்கொள்வதற்கான செலவாகும். MR ஆனது MC, விடக் கூடுதலாக இருக்கும் வரை நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்கும். அதனால் செலவைவிடக் கூடுதலாக வருவாயை உழைக்க முடிவதே இதற்கான காரணமாகும். ஆனால் MR ஆனது MC, யைவிடக் குறைவாக இருப்பின் மேலதிகமாக ஒரு அலகை உற்பத்தி செய்வது இலாபத்தைக் குறைக்கும். எனவே **MR = MC** ஆகும் புள்ளியே உத்தமப்புள்ளியாக இருக்கும். இதுவே இலாப உச்சப்படுத்தலுக்கான அடிப்படை நிபந்தனையாகும்.

- இலாப உச்சப்படுத்தல் புள்ளியில் **MC கட்டாயமாக அதிகரித்துச் செல்ல வேண்டும்: MR** ஆனது MC இற்கு சமமாவது மட்டும் போதுமானதல்ல; எல்லைச் செலவானது அதிகரிக்க வேண்டும், வீழ்ச்சியடையக் கூடாது, ஏனெனில் இப்புள்ளிக்கு அப்பால் உற்பத்தியை அதிகரித்தால் அது வருவாயை விட அதிக செலவை ஏற்படுத்தி இலாபத்தை வீழ்ச்சியடையச் செய்வதை உறுதிப்படுத்துவதற்காகும்.

**(01 புள்ளி)**
**(மொத்தப் புள்ளிகள் 03)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

அல்லது

**- மொத்தவருவாய் மொத்தச் செலவு அணுகுமுறை:**

மாற்றீடாக, ஒரு நிறுவனம் நேரடியாகவே மொத்த வருவாயையும் (TR) மொத்த செலவையும் (TC) ஒப்பிடலாம்.


இலாபமானது பின்வருமாறு கணிப்பிடப்படும்: TR – TC **(02 புள்ளிகள்)**

வெவ்வேறு வெளியீட்டு மட்டங்களில் TR ஐயும் TC ஐயும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இவை இரண்டிற்கும் இடையிலான மிகப்பெரிய நேர்க்கணிய வேறுபாட்டை ஏற்படுத்தும் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டத்தை அடையாளங்காணலாம்.

**(01 புள்ளி)**

அல்லது

- இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டத்தை வரைபடரீதியில் அடையாளம் காணலாம்.




இலாப உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டத்தை காணும் ஒரு முறை யாதெனில் நிறுவனத்தின் வருவாய் வளையிகளையும் செலவு வளையிகளையும் ஆராய்வதாகும். மொத்த வருவாய் வளையியிக்கும் மொத்த செலவு வளையிக்கும் இடையிலான நிலைக்குத்து இடைவெளி மிகப்பெரிதாகவுள்ள வெளியீட்டு மட்டத்தைத் தெரிவு செய்வதாகும். TR மற்றும் TC வளையிகளுக்கு இடையிலான இடைவெளி பொருளியல் இலாபமாகும் Q*, வெளியீட்டு மட்டத்தில் TR மற்றும் TC என்பவற்றிற்கிடையிலான இடைவெளி பெரிதாக உள்ளது. எனவே TR மற்றும் TC என்பவற்றிற்கிடையிலான இடைவெளி எந்த வெளியீட்டு மட்டத்தில் அதிகமாக உள்ளதோ அதுவே இலாப உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டமாகும். இவ்வெளியீட்டு மட்டத்தில் TR மற்றும் TC வளையிகளின் சாய்வுகள் ஒன்றுக்கொன்று சமமானதாக இருக்கும். அதாவது எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமனாகும். (வரைபடத்தில் இலாப வளையியை வரைவது அவசியமில்லை)

**MR = MC.**


**(03 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

அல்லது

இலாப உச்சப்படுத்தலைக் காணும் மற்றுமொரு வரைபட முறை எல்லை ஆய்வினை மேற்கொண்டு எல்லை வருவாயையும் (MR) எல்லைச் செலவையும் (MC) ஒப்பிடுவதாகும்.




வெளியீடு அதிகரிக்கும் போது எல்லை வருவாய் நிலையாக இருக்கும் ஆனால் எல்லைச் செலவு மாற்றமடையும். MR > MC, ஆயின் மேலதிக ஓரலகை விற்றும் பெறும் வருவாய் அம்மேலதிக அலகை உற்பத்திசெய்ய ஏற்பட்ட மேலதிக செலவை விட அதிகமாகும். அந்த எல்லை அலகின் மூலம் நிறுவனம் பொருளியல் இலாபத்தை உழைக்கலாம். ஆகவே அதன் வெளியீடு அதிகரிக்கும் போது பொருளியல் இலாபமும் அதிகரிக்கும்.
MR < MC, ஆயின் மேலதிக அலகொன்றை விற்பனை செய்து பெறப்படும் மேலதிக வருவாய் அதனை உற்பத்தி செய்ய ஏற்பட்ட செலவை விடக் குறைவானதாகும். அதனால் அந்த எல்லை அலகினால் நிறுவனத்திற்கு பொருளியல் நட்டம் ஏற்படுகிறது. வெளியீட்டை அதிகரித்தால் அதன் பொருளியல் இலாபம் வீழ்ச்சியடையும்.

MR = MC ஆயின் பொருளியல் இலாபம் உச்சப்படுத்தப்படும்.

**(03 புள்ளிகள்)**

(iii) - கணக்கியல் இலாபம் = மொத்த வருவாய் – வெளிப்படையான செலவுகள்
= 200, 000 - 150, 000
= Rs. 50, 000 **(02 புள்ளிகள்)**

- பொருளியல் இலாபம் = மொத்த வருவாய் – ( வெளிப்படையான செலவுகள் + உட்கிடையான செலவுகள்)
= 200, 000 - ( 150, 000 + 70, 000)
= 200, 000 - 220, 000)
= Rs. – 20, 000 ( நட்டம்) **(02 புள்ளிகள்)**

**(மொத்தப்புள்ளிகள் 04)**

**(iv) - நிறுவனத்தின் நிரம்பல் வளையியில் ஏற்படும் விளைவு:**
நிறுவனத்தின் நிரம்பல் வளையியானது நிறுவனமானது வெவ்வேறு விலைகளில் சந்தைக்கு வழங்கத் தயாராகவுள்ள தொகைகளுக்கும் தொடர்புடைய விலைகளுக்கும் இடையிலான தொடர்பைக்காட்டுகிறது. மூலப்பொருள்களுக்கான செலவில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு ஒவ்வொரு உற்பத்தி மட்டத்திலும் உயர்ந்த உற்பத்திச் செலவுகளுக்கு (AVC மற்றும் MC) இட்டுச் செல்லும்.

ஒவ்வொரு விலை மட்டத்திலும் இந்நிறுவனத்தின் இலாபம் இப்போது குறைவடைவதால் தரப்பட்ட விலைகளில் அது சந்தைக்கு வழங்கும் தொகையினைக் குறைக்கும். அதனால் நிறுவனத்தின் நிரம்பல் வளையி மேல்நோக்கி (அல்லது இடப்புறமாக) நகரும். முன்னைய தொகையினை நிறுவனம் உயர்ந்த விலையிலேயே சந்தைக்கு வழங்கும்


**(02 புள்ளிகள்)**

- கைத்தொழிலின் நிரம்பல் வளையியானது தனிப்பட்ட நிறுவனங்களின் நிரம்பல் வளையிகளின் கிடையச்சுக் கூட்டுத் தொகையாகும். தொழிலில் உள்ள பலநிறுவனங்கள் மூலப்பொருள் செலவு அதிகரிப்பை எதிர்கொள்ளுமாயின் அவற்றின் நிரம்பல் வளையிகள் மேல்நோக்கி அல்லது இடப்புறமாக நகரும். இது கைத்தொழிலின் நிரம்பல் வளையியையும் இடப்புறம் நோக்கிநகர்த்தும் எல்லா நிறுவனங்களும் கூட்டாக ஒவ்வொரு விலை மட்டத்திலும் நிரம்பல் மட்டத்தைக் குறைப்பதால் அது ஏற்படும்.

**(01 புள்ளி)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner




(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

**(v) (a)**

- ஓரலகிற்கான சந்தைவிலை: 120 ரூபா
- மொத்த வருவாய் (TR) = ஓரலகின் விலை × வெளியீட்டுத் தொகை
- TR = 120×60 = ரூபா. 7200 **(01 புள்ளி)**

- மொத்தச் செலவு (TC): TC = TFC + TVC
  TC = 1200 + 4800 = ரூபா. 6000 **(01 புள்ளி)**

- பொருளியல் இலாபம் அல்லது நட்டம்:
  இலாபம்/நட்டம் = TR – TC
  இலாபம்/நட்டம் = 7200 – 6000 = ரூபா.1200
  இவ்வெளியீட்டு மட்டத்தில் நிறுவனமானது பெறும் பொருளியல்

இலாபத்தினளவு ரூபா. 1200 ஆகும். **(01 புள்ளி)**

**(மொத்தப்புள்ளிகள் 03)**

**(b)** - 60 அலகு உற்பத்தி மட்டத்தில் உற்பத்தியாளன் மிகை:
- உற்பத்தியாளன் மிகை = மொத்த வருவாய் – மொத்த மாறுஞ்செலவு

**(01 புள்ளி)**

| | | |
|---|---|---|
| மொத்த வருவாய் | = | 7200 |
| மொத்த மாறுஞ்செலவு | = | AVC x Q = 80 x 60 = 4800 |
| உற்பத்தியாளன் மிகை | = | 7200 – 4800 = 2400 |
| | = | ரூபா. 2400 |

**(01 புள்ளி)**
**(மொத்தப் புள்ளிகள் 02)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

5. (i) ஒரு திறந்த பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்ட மாதிரியில் வெளிப்பாய்ச்சல்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) தேசிய கணக்கீட்டு முறைமையில் உற்பத்தி வரம்பினுள் விலக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? (03 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகள் சரியானவையா பிழையானவையா எனக் கூறி உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(அ) வாழ்வாதாரத்திற்கான விவசாய நடவடிக்கைகள் போன்ற சுயநுகர்வுக்கான பொருள் உற்பத்திகள் செய்வது உற்பத்தி வரம்பினுள் உள்ளடக்கப்படும்.

(ஆ) 'ஏனைய உலக நாடுகள்' தேசிய கணக்கீட்டு முறைமையினுள் ஒரு நிறுவன அலகாகக் கருதப்படும்.

(இ) வியாபார நிறுவனங்களால் செலுத்தப்படும் வாகன பதிவுக் கட்டணங்கள் 'உற்பத்தி மீதான ஏனைய வரிகளின்' ஒரு கூறாகும்.

(ஈ) பண்டமாற்றுப் பரிமாற்றல்கள் (barter transaction) உற்பத்தி வரம்பில் உள்ளடக்கப்படுவதில்லை; ஏனெனில் அங்கு பணம் பரிமாறப்படுவதில்லை.

(உ) 'உற்பத்திகள் மீதான வரிகள்' உற்பத்தி செய்யப்படும் பொருள் தொகையின் மீது நேரடியாக விதிக்கப்படும் வரிகளாகும்.

$(01 \times 5 = 05$ புள்ளிகள்)

(iv) சுயாதீன நுகர்வு ரூபா 200 பில்லியனாகவும், எல்லை நுகர்வு நாட்டம் செலவிடத்தக்க வருமானத்தின் 80% ஆகவும், முதலீடு ரூபா 500 பில்லியனாகவும் உள்ள ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தைக் கருதுக. அத்துடன் அரசாங்க செலவீடுகள் ரூபா 300 பில்லியன் ஆகவும் தன்னிச்சையான வரிகள் ரூபா 200 பில்லியனாகவும் உள்ளன. இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) (அ) 'சுருக்க இடைவெளியை' வரைவிலக்கணப்படுத்தி அதனை ஒரு மொத்தக் கேள்வி மொத்த நிரம்பல் மாதிரியில் காட்டுக. (03 புள்ளிகள்)

(ஆ) சுருக்க இடைவெளியை அகற்றுவதன் மூலம் ஒரு பொருளாதாரத்தை நிறை தொழில் மட்டத்தை நோக்கிக் கொண்டு செல்ல எத்தகைய கொள்கைச் சிபாரிசுகளை நீர் பரிந்துரைப்பீர்? (02 புள்ளிகள்)

**5. (i) – ஒரு திறந்த பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்ட மாதிரியில் வெளிப்பாய்ச்சல்கள்:**

**சேமிப்புகள் (S):**
**வரிகள் (T)**
**இறக்குமதிகள் (M)**

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி; மொத்தப் புள்ளிகள் 03 )**

**(ii) - பணம் செலுத்தப்படாத வீட்டு வேலைகள்:**
சுய நுகர்வுக்காக வீட்டு அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் வீட்டுவேலைகள் மற்றும் சேவைகள். (e.g., சமைத்தல், சுத்திகரித்தல், குழந்தை வளர்ப்பு, முதியோர் மற்றும் நோயாளிகள் பராமரிப்பு, சிறுவர்களுக்குப் பாடம் சொல்லித்தரல், இல்லப்பராமரிப்பு மற்றும் வீடு மற்றும் நெடுவாழ்வு வீட்டுபகரணங்களைத் திருத்தல், வீட்டு அங்கத்தவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கல் போன்றன விலக்கப்படுகின்றன.)

- தன்னார்வ வேலைகள்:
சந்தையல்லா நிறுவனங்களுக்கு (தர்மஸ்தாபனங்கள் அல்லது ஏனைய வீட்டுத்தறையினருக்கு) வழங்கப்படும் சம்பளமற்ற தன்னார்வலர் சேவைகள்.

- மாற்றல் செலுத்தல்கள்:
ஓய்வூதியங்கள், தொழிலற்றோருக்கான நன்மைகள், மற்றும் சமூக பாதுகாப்பு போன்ற அரசாங்கத்தின் மாற்றல் செலுத்தல்கள்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- தூய நிதிப்பரிமாற்றங்கள்:

நிதிச் சொத்துக்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் (பங்குகள், பிணையங்கள் போன்றன) அல்லது எளிமையான உரிமை மாற்றங்கள் விலக்கப்படுகின்றன.

- ஏற்கெனவே உபயோகிக்கப்பட்ட பொருள்களின் விற்பனை

- மனிதனின் நெறிப்படுத்தலோ ஈடுபாடோ இல்லாமல் நிகழும் இயற்கையான நிகழும் செயன்முறைகள். உதாரணமாக, சர்வதேச கடற்பரப்பில் மனித செயற்பாடுகள் இன்றி நடைபெறும் மீன் இருப்புகளின் வளர்ச்சி உற்பத்தியாகக் கருதப்படாது.

**(ஒரு நடவடிக்கைக்கு 01 புள்ளி மூன்று நடவடிக்கைகளுக்கு; மொத்தப் புள்ளிகள் 03)**

(iii) (a) – உண்மை.

- சுயதேவைப் பூர்த்திக்கான விவசாயம் உள்ளடக்கப்படும். ஏனெனில் இப்பொருள்கள் விற்கப்படாது உற்பத்தியாளரது வீட்டிலேயே நுகரப்பட்டாலும் கூட இங்கு சந்தைப் பெறுமதியுள்ள ஒரு பொருள் (பயிர் அல்லது கால்நடை) உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே இது பணரீதியில் கணிப்பிடப்படக் கூடிய ஒரு வகை உற்பத்தி நடவடிக்கையாகும்.

(b) – உண்மை

- இவ்வலகு ஒருநாட்டின் வதிவாளர்களுக்கும் வதிவாளர் அல்லாதவர்களுக்கும் இடையிலான எல்லாப் பொருளாதாரக் கொடுக்கல்வாங்கல்களையும் பதிவு செய்கிறது. இதில் சர்வதேச வர்த்தகம் நாடுகளின் எல்லைகளுக்கிடையிலான முதலீடுகள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெற்றதும் அவற்றுக்கு அனுப்பியதுமான வருமானப்பாய்ச்சல்களையும் உள்ளடக்கும். ஒரு திறந்த பொருளாதாரத்தின் சென்மதி நிலுவை மற்றும் மொத்தத் தேசிய வருமானம் என்பவற்றைக் கணிப்பிடுவதில் இக்கொடுக்கல் வாங்கல்கள் முக்கியமானவையாகும்.

(c) - உண்மை.

- வியாபார நிறுவனங்களால் செலுத்தப்படும் வாகனப் பதிவுக் கட்டணங்கள் “உற்பத்தி மீதான ஏனைய வரிகளின்” ஒரு பகுதியாகக் கருதப்படும் ஏனெனில் இவை உற்பத்தி அல்லாத விசேட வரிகளாகும். இவை உற்பத்திச் செயன் முறையின் போது செலுத்தப்படுகின்றன ஆனால் வெளியீட்டுடன் நேரடியாகத் தொடர்பு பட்டவை அல்ல.

(d) - பொய்.

- பணரீதியான பரிமாற்றங்கள் இடம் பெறாவிட்டாலும் பண்டமாற்றுக் கொடுக்கல்வாங்கல்கள் தேசிய கணக்குகளின் உற்பத்தி எல்லையில் உள்ளடக்கப்படுகின்றன. உற்பத்தி எல்லை என்பது பொருள்கள் சேவைகளின் உற்பத்தியை ஏற்படுத்தும் எல்லா பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கும். இதன்போது பணரீதியான கொடுக்கல்வாங்கல் இடம்பெறுகிறதா இல்லையா என்பது முக்கியமானதல்ல.

(e) – பொய்.

- உற்பத்திகள் மீதான வரிகள் முழுமையாக உற்பத்தி செய்யப்பட்ட தொகையோடு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. உற்பத்திகளோடு தொடர்புபட்ட பல்வகை வரிகள் (கலால் வரி, விற்பனைவரி, பெறுமதி சேர்வரி) உள்ளன. இவை விலை, பெறுமதி, மற்றும் பொருள்களின் சிறப்புப் பண்புகள் என்பவற்றின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றன. அவை வெறுமனே உற்பத்தித்தொகையை மட்டும் கருத்திற் கொள்வதில்லை.

**(01 x 05 = 05 புள்ளிகள்)**

(iv) சமநிலைத் தேசிய வருமான மட்டம்:

$Y = C+I+G$ **(01 புள்ளி)**

$C = C_0 + MPC \times (Y_d)$ **(01 புள்ளி)**

$Y = 200 + 0.8\,(Y - T) + 500 + 300$

$Y = 200 + 0.8\,(Y - 200) + 500 + 300$ **(01 புள்ளி)**

$Y = 200 + 0.8Y - 160 + 500 + 300$

$Y = 0.8Y + 1000 - 160$

$Y - 0.8Y = 840$

$Y = 4200$ **(01 புள்ளி)**

**(மொத்தப்புள்ளிகள் 04)**




Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**(v) (a)** - ஒரு சுருக்க இடைவெளியென்பது சாத்திய வெளியீட்டிற்கும் [(நிலைதொழில் மட்டவெளியீடெனவும் அழைக்கப்படும்) பொருளாதாரத்தின் சாத்திய வெளியீட்டைவிட அதன் உண்மை வெளியீடு குறைவாக உள்ளபோது] உண்மை வெளியீட்டிற்கும் இடையிலான வேறுபாடு சுருக்க இடைவெளியாகும்

**(02 புள்ளிகள்)**

மொத்தக் கேள்வி மொத்த நிரம்பல் மாதிரியில் சுருக்க இடைவெளி எண்ணக்கருவானது பின்வருமாறு காட்டப்படுகிறது:




**(வரைபடத்திற்கு 01 புள்ளி விளக்கத்திற்கு 02 புள்ளி மொத்தப்புள்ளிகள் 03)**

(b) சுருக்க இடைவெளியை நீக்கி பொருளாதாரத்தை நிறைதொழில் மட்டத்தை நோக்கிக் கொண்டுசெல்ல கொள்கைவகுப்பாளர்கள் பொதுவாக மொத்தக் கேள்வியை தூண்டி கட்டமைப்புப் பிரச்சினைகளை தீர்த்து பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை வளர்த்தெடுக்க முயல்கின்றனர்.

- விரிவாக்க இறைக்கொள்கை

- அரசாங்க செலவீட்டை அதிகரித்தல்
- வரிகளைக் குறைத்தல்
- தொழிலற்றிருப்போருக்கான உதவு தொகைகளையும் சமூக நலன்புரித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- விரிவாக்கப் பணக்கொள்கை

- குறைந்த வட்டிவீதங்கள் பணநிரம்பல் அதிகரிப்பு
- தொகைரீதியான இலகுவாக்கம் Quantitative Easing (QE)

- ஊழியச் சந்தைக் கொள்கைகள்

- தொழில் பயிற்சிகளும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும்
- சம்பள மானியங்களும் ஆட்சேர்ப்பு ஊக்குவிப்புகளும்
- ஊழியச் சந்தையின் இறுக்கத்தன்மையைக் குறைத்தல்

- வியாபார முதலீட்டிற்கான ஊக்குவிப்புகள்

- முதலீட்டிற்கான வரி ஊக்குவிப்புகள்
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புகள் (SMEs)
- புத்தாக்கத்தையும் முயற்சியாண்மையையும் தூண்டுதல்.

- வர்த்தக மற்றும் ஏற்றுமதிக் கொள்கைகள்

- ஏற்றுமதி ஊக்குவிப்பு
- வர்த்தகத் தடைகளுக்கு தீர்வு காணல்

- பணவீக்கம் பற்றிய கரிசனைகளுக்குத் தீர்வு காணல்

- பணவீக்க கட்டுப்பாட்டு கருவிகள்

- கட்டமைப்புச் சீர்திருத்தங்கள்

- உற்பத்தித் திறன் மேம்படுத்தல்கள் ( தொழில் நுட்பத்தில் முதலீடு செய்தல்)
- டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள்
- ஒழுங்குறுத்தல் சீர்திருத்தங்கள்

(இரு கொள்கை சிபாரிசுகளுக்கு 01 புள்ளி; மொத்தப் புள்ளிகள் 02)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

## உப பகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) இலங்கையின் பணக்கொள்கை தொடர்பில் பரவலாகக் கையாளப்பட்ட **மூன்று** பணக் கூட்டுகளைப் (money aggregates) பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) 2022 செப்டெம்பரில் 70% அளவானதாக உச்ச மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இலங்கை பணவீக்கத்தை 2023 முடிவில் தொடங்கி தனி இலக்கத்திற்கு மட்டுப்படுத்த பங்களித்துள்ள காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பணக்கொள்கையை வகுப்பதில் கொள்கை வகுப்பாளர்கள் வெளிப்படைப் பணவீக்கத்தை விட அடிப்படைப் பணவீக்கத்தில் கவனம் செலுத்துவது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) நியதி ஒதுங்கு வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது பண நிரம்பலின் மீதும் வங்கி முறைமை பணவாக்கம் செய்யும் ஆற்றலின் மீதும் ஏற்படுத்தும் விளைவு எவ்வாறிருக்கும்? (04 புள்ளிகள்)

(v) வட்டி வீத சாளரம் என்னும் எண்ணக்கருவை விளக்கி இலங்கையின் பணக்கொள்கையில் அதன் பங்களிப்பைப் பகுப்பாய்வு செய்க. (05 புள்ளிகள்)

**6 (i) இலங்கையில் விரிவான பணக்கூட்டுகள்:**

- ஒதுக்குப் பணம் (M0)
- குறுகிய பணம் (M1)
- திரண்ட விரிந்த பணம் (M2b)

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி; மொத்தப்புள்ளிகள் 03)**

**(ii) இலங்கையின் பணவீக்கத்தை ஒற்றை இலக்க மட்டங்களில் நிலைநிறுத்த உதவிய காரணிகள்:**

**- இறுக்கப்பணக்கொள்கை:** இலங்கை மத்திய வங்கி (CBSL) தொடர்ச்சியாக வட்டிவீத அதிகரிப்பை மேற்கொண்டது. அத்துடன் இறுக்கமான பணக்கொள்கை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது.

**- நாணயமாற்று வீத உறுதிநிலை:** 2022, இல் ஒரு சடுதியான தேய்வை எதிர்கொண்டதன் பின்னர் இலங்கை ரூபா உறுதியடைந்தது. இறக்குமதிக்கட்டுப்பாடுகள், மற்றும் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இலங்கை ரூபாவின் உறுதிப்பாட்டிற்குக் காரணமாகின. இவ்வுறுதிப்பாடானது இறக்குமதிப்பணவீக்கத்தை குறைத்தது.

**- மேம்பாடடைந்த அரசிறைநிதி ஒழுக்கம் :** இலங்கை அரசாங்கம் அரசிறையை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாதீட்டுக் குறைநிலையைக் குறைத்தல் வருவாய்த்திரட்டலை மேம்படுத்தல் என்பன இதன் அங்கமாகும். இலங்கை IMF-உதவியுடனான நிகழ்ச்சித்திட்டத்தை 2023 இல் நடைமுறைக்கிட்டமை பணவீக்க அழுத்தங்களைக் குறைக்கவும் அரசிறைத்துறை சமமின்மைகளைக் குறைக்கவும் உதவியது.

**- நிரம்பல் சங்கிலிகள் வழமைக்குத் திரும்பியமை :** கோவிட் -19 பெருங்கொள்ளை நோயினாலும் ரஸ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான யுத்தம் காரணமாகவும் முறிவடைந்திருந்த விநியோக சங்கிலிகள் படிப்படியாக வழமைக்குத் திரும்பியதால் உணவு மற்றும் எண்ணெய் போன்ற இறக்குமதிப் பொருள்களின் செலவுகள் நிலைத்தன்மை கொண்டவையாக மாறத் தொடங்கின.

**- உலகப் பண்டவிலைகள் வீழ்ச்சியடைந்தமை:** 2023 இன் நடுப்பகுதியிலிருந்து உலக எண்ணெய் மற்றும் உணவு விலைகள் மிதமடைந்தமை இலங்கையில் செலவுத்தூண்டல் பணவீக்கம் குறைவடைவதில் முக்கிய பங்குவகித்தன.

**- கட்டமைப்புச் சீராக்கல்களை நடைமுறைப்படுத்தியமை:** இச்சீர்திருத்தங்கள் நாட்டின் பேரினப்பொருளியல் உறுதித்தன்மையை முன்னேற்றும் குறிக்கோளைக் கொண்டிருந்தது. கடன் மறுசீரமைப்பு மற்றும் ஆட்சிமுறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், முதலீட்டாளர் நம்பிக்கையையும் பொருளாதார நிலைத்தன்மையையும் மீளத்தாபிக்க உதவின.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**- வெளியக நிதியுதவிகள் கிடைத்தமை:** IMF மற்றும் ஏனைய சர்வதேச நிதிநிறுவனங்களிடமிருந்து கிடைத்த நிதியுதவிகள் நாட்டின் பொருளாதாரத்தையும் நாணயமாற்று வீதத்தையும் நிலைப்படுத்தவும் உதவின.

**(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி நான்கு விடயங்களுக்கு; மொத்தப்புள்ளிகள் 04)**

**(iii)** - பணக்கொள்கையை வகுக்கும்போது கொள்கை வகுப்பாளர்கள் அடிப்படைப் பணவீக்கத்தின் (core inflation) மீதே கவனம் செலுத்துகின்றனர். ஏனெனில் அடிப்படைப்பணவீக்கம் பணவீக்கப்போக்குகள் பற்றிய நிலையானதும் நம்பகரமானதுமான அளவைகளைத் தருகிறது. அடிப்படைப் பணவீக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் கொள்கை வகுப்பாளர்கள் சிறந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தின் நீண்டகால பணவீக்க அழுத்தங்களை இலக்கிட முடிவுகளை எடுக்கலாம்.

**- தற்காலிக தளம்பல்களை விலக்குகிறது:** முதன்மைப் பணவீக்கமானது (headline inflation) நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் உள்ள உணவு மற்றும் சக்திவள விலைகள் உள்ளிட்ட எல்லா வகைகளையும் உள்ளடக்கியுள்ளது. இவை பருவகால மாற்றங்கள் உலக நிரம்பல் அதிர்ச்சிகள் மற்றும் வானிலை மாற்றங்கள் என்பவற்றால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் தன்மை வாய்ந்தனவாகும்.

மறுபுறம் அடிப்படைப்பணவீக்கமானது அடிக்கடி தளம்பல்களுக்கு உள்ளாகும் உள்ளடக்கங்களைத் தவிர்த்து மிகவும் சரியான வகையில் நிலவும் பணவீக்கப் போக்குகளை பிரதிபலிக்கிறது. அதனால் கொள்கைவகுப்பாளர்கள் தற்காலிகமாக ஏற்படும் தளம்பல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தீவிர கட்டுப்பாடுகளை விதிப்பதை தவிர்க்க உதவும்.

**- நீண்டகால பணவீக்கப் போக்குகளை பிரதிபலிக்கும் பொருத்தமான அளவையாகும்:** பணவீக்கக் கூடையில் உள்ள குறைந்த தளம்பல் கொண்ட கூறுகளில் கவனம் செலுத்துவதன் மூலம் கேள்விப்பக்க காரணிகள் ஊடாக ஏற்படும் நீண்டகால பணவீக்க அழுத்தங்கள் பற்றிய ஒரு தெளிவான பார்வையை அடிப்படைப்பணவீக்கம் தருகிறது. மறுபுறம் விலை அதிர்ச்சிகளுக்கு அதிக உணர்திறன் கொண்டுள்ள படியினால் முதன்மைப் பணவீக்கமானது உண்மையான பணவீக்க நிலை பற்றிய பிழையான சமிக்ஞைகளைத் தரக் கூடும்.

**- தேவையற்ற முன்கூட்டிய கொள்கைச் சீராக்கங்களைத் தவிர்க்க உதவுகிறது:** எண்ணெய் விலை அதிகரிப்பு இயற்கை அனர்த்தங்கள் போன்ற தற்காலிக காரணிகளால் ஏற்படும் பணவீக்க அதிகரிப்பை முதன்மைப்பணவீக்கம் காட்டும் போது கொள்கை வகுப்பாளர்கள் பணக்கொள்கையை முன்கூட்டியே இறுக்கமாக்கலாம் அல்லது தளர்வு படுத்தலாம். இது பொருளாதாரத்தில் தேவையற்ற குறுக்கீடுகளாக அமையலாம். அடிப்படைப்பணவீக்கத்தில் கவனஞ் செலுத்துவதன் மூலம் குறுங்காலத் தளம்பல்களுக்கு எதிர்வினை காட்டுவதை தவிர்க்க உதவும்.

**- பணவீக்க எதிர்ப்பார்க்கைகளை முகாமை செய்வதற்கு மிகவும் பொருத்தமானது:** பணக்கொள்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று பணவீக்க எதிர்பார்க்கையை முகாமை செய்வதாகும். ஒரு கால இடைவெளியில் ஏற்படும் விலை மாற்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த மிகப் பொருத்தமானது. பணவீக்க எதிர்பார்க்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள மிகவும் உகந்தது.

**- நிரம்பல் பக்க அதிர்ச்சிகளைக் கையாள பணக்கொள்கையானது குறைந்த ஆற்றல கொண்டதாகும்:** முதன்மைப் பணவீக்கமானது பெரும்பாலும் உலக எண்ணெய் விலை உயர்வு அல்லது விவசாய விளைச்சல் பாதிப்புகள் போன்ற நிரம்பல் பக்கக் காரணிகளால் பாதிக்கப்படுகிறது. பணக்கொள்கையானது பிரதானமாக கேள்விப்பக்க காரணிகளில் செல்வாக்குச் செலுத்துவதால் நிரம்பல் பக்க காரணிகளை அடிப்படையாகக் கொண்ட விலைஅதிகரிப்புகளைக் கட்டுப்படுத்துவதில் குறைந்த வினைத்திறன் கொண்டதாகக் காணப்படுகிறது. உள்நாட்டு நுகர்வு முதலீடு வட்டிவீதம் போன்ற பணக்கொள்கையோடு நெருங்கிய தொடர்பு பட்ட காரணிகளில் செல்வாக்குச் செலுத்தப் பொருத்தமாக இருப்பதால் கொள்கை வகுப்பாளர்கள் அடிப்படைப்பணவீக்கத்தைக் கையாள விரும்புகின்றனர்.

**(04 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Scanned with CamScanner

**(iv) - மத்தியவங்கி நியதி ஒதுக்கு வீதத்தை அதிகரித்தால் (SRR),** வணிக வங்கிகள் தமது வைப்புகளில் அதிக சதவீதத்தை வைப்பாக வைத்திருக்க வேண்டும். அதனால் புதிய வைப்புகளை மேற்கொள்ள அல்லது கடன்களை வழங்க முடியாது இதனால் இம்மாற்றம் பொருளாதாரத்தின் பணநிரம்பலில் மாற்றத்தைப் பின்வரும் காரணங்களால் ஏற்படுத்தும்:

**(01 புள்ளி)**

- **கடன்வழங்கும் ஆற்றல் குறைவடைதல்:** உயர் SRR, காரணமாக வங்கிகள் கடன்வழங்க குறைந்தளவு பணத்தையே கொண்டிருக்கும். கடன்களை பணநிரம்பல் அதிகரிப்பிற்கான பிரதான பொறிமுறையாகும். இப்போது கடன்வழங்குவதன் ஊடாக பணநிரம்பல் விரிவாகும் பொறிமுறை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**(01 புள்ளி)**

- **குறைந்த பணவாக்கம்:** பணப்பெருக்கி விளைவானது குறைவடைந்துள்ளது. ஒவ்வொரு அலகு ஒதுக்கையும் வைத்து வங்கிமுறையானது உருவாக்கக் கூடிய பணத்தின் அளவை பணப்பெருக்கி காட்டும். உயர்ந்த ஒதுக்கு வீதம் பணப்பெருக்கியைக் குறைக்கும். அதாவது ஒவ்வொரு அலகு ஒதுக்கும் குறைந்தளவு கடன்வழங்கலை உருவாக்கும் இதனால் பணநிரம்பல் குறைவடையும். **(01 புள்ளி)**

- பணப்பெருக்கி பின்வருமாறு கணிப்பிடப்படும்

$$\text{Money Multiplier} = \frac{1}{SRR}$$

இது SRR உடன் தலைகீழ் தொடர்பைக் கொண்டுள்ளது. SRR அதிகரித்தால்

பணப்பெருக்கி குறைவடையும் வங்கி முறைமை உருவாக்கும் பணத்தினளவு குறைவடையும். இதனால் மொத்தப்பணநிரம்பலில் சுருக்கம் ஏற்படும்.

**(01 புள்ளி)**

**(மொத்தப்புள்ளிகள் 04)**

(v) வட்டிவீத சாளரம் என்ற எண்ணக்கருவை விளக்கி இலங்கையின் பணக்கொள்கையில் அதன் பங்கினையும் விளக்குக.

- இலங்கை மத்திய வங்கியானது குறுங்கால வட்டிவீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தவும் பணக்கொள்கைளின் நிலைப்பாட்டை வழிப்படுத்தவும் வட்டிவீத சாளரம் **Interest Rate Corridor (IRC)** என்றும் முக்கிய பணக்கொள்கைக் கருவியைப்பயன்படுத்துகிறது. IRC இல் இரு பிரதான கூறுகள் உள்ளன: துணைநில் வைப்பு வசதி வீதம் **Standing Deposit Facility Rate (SDFR)** மற்றும் துணைநில் கடன்வசதி வீதம் **Standing Lending Facility Rate (SLFR)**. ஆகியனவாகும். இவை இரண்டும் சேர்ந்து ஒரு சாளரத்தை உருவாக்குகின்றன. இச்சாளரத்தினுள் வங்கிகளுக்கிடையிலான ஓரிரவு வீதம் போன்ற குறுங்கால சந்தைவட்டிவீதங்கள் ஏற்ற இறக்கங்களுக்கு உட்படும்.

**(01 புள்ளி)**

- **குறுங்கால சந்தைவட்டிவீதங்கள் மீதான செல்வாக்குகள்:**

வட்டிவீத சாளரத்தின் IRC முக்கிய நோக்கம் குறுங்கால வட்டிவீதங்களை குறிப்பாக வங்கிகளுக்கிடையிலான ஓரிரவு வீதத்தை (ஓரிரவுக்குள் வங்கிகள் தமக்கிடையில் கடன் பரிமாற்றங்களைச் செய்யும் போது அறவிடப்படும் வீதம்) வழிப்படுத்துவதாகும்.
இவ்வட்டி வீதம் மிக முக்கியமானதாகும் ஏனெனில் அது ஏனைய வட்டிவீதங்களான கடன் வட்டி வீதங்கள் வைப்பு வீதங்கள் மற்றும் பிணையங்களின் வருமானங்கள் போன்றவற்றில் செல்வாக்குச் செலுத்துவதாகும்.

இலங்கை மத்திய வங்கி SDFR மற்றும் SLFR என்பவற்றை வங்கிகளுக்கிடையிலான ஓரிரவு வீதத்தை விரும்பப்படும் வீதத்தில் பேணவும் நிதிமுறைமையின் திரவத்தன்மையைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்துகிறது.

**(01 புள்ளி)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**- பணக்கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறை:**

SDFR மற்றும் SLFR, ஆகியவற்றை மாற்றயமைப்பதன் மூலம் CBSL நாட்டின் முழுமையான நாணயவியல் நிலைமையில் செல்வாக்குச் செலுத்தும். உதாரணமாக CBSL பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்ட விரும்பினால் அது SDFR மற்றும் SLFR, ஆகிய இரண்டையும் குறைக்கலாம் அதன் மூலம் அதிக கடன் வழங்கலை ஏற்படுத்தலாம்.

மறுபுறமாக, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்பினால், CBSL இவ்வட்டிவீதங்களை உயர்த்துவதன் ஊடாக கடன் பெறும் செலவை அதிகரித்து மிகைத்திரவத்தன்மையைக் குறைக்கலாம். இச்சீராக்கங்கள் மத்தியவங்கியானது அதன் பணக்கொள்கை நிலைப்பாட்டினை முழுப்பொருளாதாரத்திற்கும் ஊடுகடத்துவதற்கு உதவுகிறது.

**(01 புள்ளி)**

**- பணவீக்கக் கட்டுப்பாடு:**

பணவீக்கத்தை இலக்கிடுவதற்கு வட்டிவீத சாளரம் முக்கிய பங்காற்றுகிறது. குறுங்கால வட்டிவீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதன் ஊடாக CBSL மறைமுகமாக பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக உயர்பணவீக்க காலப்பகுதியில் SLFR ஐ அதிகரிப்பது கடன்பெறுவதையும் செலவிடுவதையும் அதைரியப்படுத்தும். இது மொத்தக் கேள்வியைக் குறைத்து விலைமட்டங்களைக் கட்டுப்படுத்த உதவும்.

**(01 புள்ளி)**

**- திரவத்தன்மை முகாமைத்துவம்:**

வட்டிவீத சாளரம் வங்கி முறைமையின் திரவத்தன்மையைப் பேணவும் உதவுகிறது. வங்கிமுறைமையில் மிகைத்திரவத்தன்மை காணப்படும் போது வங்கிகள் தமது நிதிகளை SDFR இல் வைப்புச் செய்யும். இதன்மூலம் மிகைத்திரவத்தன்மை நீக்கப்படும். மறுபுறம் திரவத்தன்மைப்பற்றாக்குறை காணப்படுமாயின், வங்கிகள் SLFR, ஊடாகக் கடன் பெற்று திரவத்தன்மையை முறைமையினுள் உட்பாய்ச்ச முடியும்.

**(01 புள்ளி)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**

7. (i) 'பொதுச் சொத்து வளங்களை' வரைவிலக்கணப்படுத்தி, அவற்றைப் பொதுப் பொருள்களிலிருந்து வேறுபடுத்துக. (04 புள்ளிக

(ii) இலங்கைக்கு பல்பக்க கடன் வழங்கும் மூலாதாரங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிக

(iii) சந்தைத் தோல்வியும், அரசாங்கத் தோல்வியும் ஒரு நாட்டின் வள ஒதுக்கீட்டின் வினைத்திறனின்மைக்கு எவ்வாறு இட்டுச் செல்லுமென விளக்குக. (05 புள்ளிக

(iv) பின்வரும் அட்டவணையானது 2022 ஆம் ஆண்டில் ஒரு கருதுகோள் ரீதியான பொருளாதாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட சில பொது நிதியியல் தரவுகளைக் காட்டுகிறது.

| வகை | பெறுமதி (ரூபா பில்லியன்) | வகை | பெறுமதி (ரூபா பில்லியன்) |
|---|---|---|---|
| வரி அரசிறை | 1 800 | நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் | 800 |
| வரியல்லா அரசிறை | 250 | மூலதனச் செலவினம் | 1 000 |
| கொடைகள் | 50 | தேறிய கடன்வழங்கல் | 200 |
| பொருள்கள், சேவைகள் மீதான செலவினம் | 1 200 | கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 1 400 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 1 500 | | |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி அரச பாதீடு தொடர்பில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) நடைமுறைக் கணக்கு மீதி

(ஆ) முதலாந்தர மீதி

(இ) திரண்ட இறைமீதி

(ஈ) மொத்த நிதியியல் தேவைப்பாடுகள் (02 × 4 = 08 புள்ளிக



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

7. (i) - பொது உரிமை வளங்கள் Common property resources (CPRs) என்பவை ஒரு குழுவினரால் பயன்படுத்தப்படுவதும் போட்டித்தன்மை வாய்ந்ததும் விலக்கல் விதிக்கு உட்படாததுமான வளங்களாகும். இவ்வளங்கள் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படக் கூடியனவாகும். ஒருவர் பயன்படுத்தும் போது மற்றவருக்கு கிடைக்கும் நன்மை குறைவடையும். இதனால் இவை மிகைப்பயன்பாட்டிற்கு ஆளாகி இலகுவில் தீர்ந்து போகக் கூடும். பொதுவளங்களின் பெருந்துயரம் எனப்படும் இந்நிலையைக் the tragedy of the commons எனக் குறிப்பிடுவர் .

உதாரணம்: மீன்வளங்கள், காடுகள், மேய்ச்சல் தரைகள், நீர்நிலைகள், மற்றும் தூயவளி போன்றன. (02 புள்ளிகள்)

- பொதுப்பொருள்கள் போட்டி நுகர்வற்றதும் விலக்குதல் விதிக்கு உட்படாததுமான பொருள்களாகும். ஒரு நபரின் நுகர்வு மற்றையவருக்கு கிடைக்கும் அளவில் எவ்வித குறைப்பினையும் ஏற்படுத்தாது. எவரும் அப்பொருளைப் பயன்படுத்துவதை வினைத்திறனாகக் கட்டுப்படுத்த முடியாது.

உதாரணம்: தேசிய பாதுகாப்பு, பொதுப்பூங்காக்கள், சாலை விளக்குகள், மற்றும் தூய வளி

(02 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 04)

அல்லது

**Key Differences Between Common Property Resources and Public Goods:**

| Feature | Common Property Resources | Public Goods |
|---|---|---|
| Rivalry | Rivalrous: One person's use reduces availability for others. | Non-Rivalrous: One person's use does not reduce availability for others. |
| Excludability | Non-Excludable: Difficult or costly to exclude others from use. | Non-Excludable: Impossible or inefficient to exclude others from use. |
| Consumption Effect | Overuse can lead to depletion or degradation (e.g., overfishing, deforestation). | No depletion from use (e.g., national defense benefits everyone equally). |
| Examples | Fisheries, forests, grazing lands, fresh water. | National defense, public health measures, street lighting. |

(04 புள்ளிகள்)

i) இலங்கைக்கு பல்பக்க கடன் வழங்கல் மூலாதாரங்கள் மூன்றினைப் பெயரிடுக:

- ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)
  ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB)
  ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB)
  விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD)
  சர்வதேச நாணய நிதியம் (IMF)
  நோர்டிக் அபிவிருத்தி நிதியம் (NDF)
  சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியம் (OFID)
  உலகவங்கி (ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி; மொத்தப் புள்ளிகள் 03)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

(iii) - அரசாங்கத் தலையீடின்றி இயங்கும் தாராள சந்தை வினைத்திறனாக வளங்களை ஒதுக்கீடு செய்ய முடியாதபோது சந்தைத் தோல்வி ஏற்படுகிறது. இதனால் உற்பத்தி செய்து நுகரப்படும் பொருள்களும் சேவைகளும் சமூகரீதியில் உத்தமமான மட்டத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றில் மிகக் கூடுதலாகவோ அல்லது மிகக் குறைவாகவோ இருக்கும்.

**- பொதுப்பொருள்கள்:** பொதுப்பொருள்கள் சந்தையினால் வினைத்திறன் வாய்ந்தாக வழங்கப்பட முடியாது ஏனெனில் தனிப்பட்டவர்கள் அவற்றைப்பயன்படுத்த பணம் செலுத்த மாட்டார்கள் அவர்களை விலக்கி வைக்கவும் முடியாது. சந்தை முறைமையானது பொதுப்பொருள்களை வழங்க வளங்களை ஒதுக்கீடு செய்யாது.

**- வெளிவாரிகள்:** எதிர்க்கணிய வெளிவாரிகள் (e.g., சூழல் மாசுபாடு) சமூகத்திற்கு ஏற்படும் முழுமையான செலவை பொருளின் விலை பிரதிபலிக்காத போது ஏற்படும். இது மிகை உற்பத்தியை உருவாக்கும். நேர்க்கணிய வெளிவாரிகள் (e.g., கல்வி) தனிநபரைத்தாண்டி அதன் நன்மைகள் விரிவடையும் போது அவற்றின் குறை உற்பத்தி நடைபெறும். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் வளஒதுக்கீடானது வினைத்திறனற்றதாக இருக்கும்.

**- நிறைவில் போட்டி:** தனியுரிமைச் சக்தி சிலருரிமை அல்லது தனியுரிமைப் போட்டி போன்றவை காரணமாகவும் சந்தைகள் தோல்வியடையும். இத்தகைய சந்தர்ப்பங்களில் நிறுவனங்கள் குறைவாக உற்பத்தி செய்து அதிகளவு விலையினை அறவிட முடியும். இதனால் குறை உற்பத்தியும் உயர் விலைகளும் நிலவும். அது நுகர்வோர் நலனைப்பாதிக்கும். தனியுரிமை அல்லது சிலருரிமையானது இலாபத்தை உச்சப்படுத்துவதற்காக நிரம்பலை மட்டுப்படுத்தும். இது வினைத்திறனற்ற வள ஒதுக்கீட்டிற்கு இட்டுச் செல்லும். சமூகத்தால் விரும்பப்படும் அளவை விடக்குறைவான மட்டத்தில் உற்பத்தி நடைபெறும்

**- சமச்சீரற்ற தகவல்கள்:** ஒரு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடும் இருதரப்பினரில் ஒருவருக்கு கூடுதலான தகவல்கள் கிடைக்குமாயின் அதனால் தீங்குத் தெரிவுகளும் adverse selection அல்லது தார்மீக ஆபத்துப் moral hazard, பிரச்சினைகளும் ஏற்படலாம். சந்தை வினைத்திறனாக இயங்க முடியாது.

**(சந்தைத்தோல்வி காரணிக்கு 01 புள்ளிவீதம் மூன்றிற்கு; 03 புள்ளிகள்)**

- **அரசாங்கத் தோல்வி:** சந்தைத்தோல்வியை சீர்செய்யும் நோக்கில் சந்தையில் இடம்பெறும் அரசாங்கத்தலையீடு வினைத்திறனின்மைகளை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்குமாயின் அது அரசாங்கத்தின் தோல்வி எனக்கூறப்படும்

**- Regulatory Capture ஒழுங்குறுத்தல் கைப்பற்றல்:** ஒழுங்குறுத்துபவர்கள் சமூகநலனின் அடிப்படையிலன்றி கைத்தொழில்களின் நலன்களின் அடிப்படையில் செயற்படுவார்களாயின் கொள்கைகள் சில கைத்தொழில்களுக்கு சார்பாக அமைந்து விடும் இது வளங்களின் பிழையான ஒதுக்கீட்டிற்குக் காரணமாகலாம் கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில்களைப் பாதுகாக்க ஒழுங்குறுத்துபவர்களை தமது செல்வாக்குக்கு உட்படுத்தும் போது அது போட்டித்தன்மையையோ வினைத்திறனையோ உருவாக்காது.

**- அதிகுறைந்த நிலை அல்லது தேவைக்கதிகமான ஒழுங்குறுத்தல்:** சிலவேளைகளிலே அரசாங்கத்தின் ஒழுங்குறுத்தல்கள் மிகக் கடுமையானதாகவோ அல்லது மிகத்தளர்வானதாகவோ இருக்கலாம். கடுமையான ஒழுங்குறுத்தல்கள் வியாபாரங்களுக்கு உயர்ந்த செலவுகளை ஏற்படுத்தலாம் இது போட்டித்தன்மையையும் புத்தாக்கங்களையும் குறைத்து வினைத்திறனின்மைக்கு இட்டுச் செல்லும்.

உதாரணமாக,

அரசாங்கத்தின் கடுமையான சுற்றாடல் சட்டங்கள் பொருளாதார நடவடிக்கைகளைக் குறைக்கலாம். மிகக் குறைவான ஒழுங்குறுத்தல்கள் சுற்றாடல் பாதிப்புகளையும் வளங்கள் அழிவடைவதையும் அதிகரிக்கும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**- பிறழ்வுத் தன்மைவாய்ந்த வரிகளும் மானியங்களும்:** வரிகளும் மானியங்களும் சந்தைத்தோல்வியை சரிசெய்வதை நோக்காக கொண்டிருப்பினும் அவை பிழையாகப் பயன்படுத்தப்படலாம் அல்லது முறையாக வடிவமைக்கப்படாதிருக்கலாம். மானியங்கள் சில துறைகளிலே மிகையுற்பத்தி ஏற்படக்காரணமாகலாம். (e.g., விவசாய மானியங்கள் சிலவகைப்பயிர்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படக் காரணமாகின்றன.), மறுபுறம் வரிகள் விலைகளைப் பிறழ்வடையச் செய்யும் பொருள் உற்பத்தியையும் நுகர்வையும் அதைரியப்படுத்தும் இது தாராளசந்தையில் உற்பத்தி மற்றும் நுகர்வு செய்யப்படும் அளவைக்குறைக்கும்.

**- நிருவாக வினைத்திறனின்மை:** அதிகாரக்கட்டமைப்பின் வினைத்திறனின்மை காரணமாக அரசாங்கங்கள் தோல்வியடையலாம். மெதுவாகத்தீர்மானமெடுத்தல் பொறுப்புக் கூறாத்தன்மை விரயமான செலவுகள் போன்ற பொதுத்துறையின் வினைத்திறனின்மையானது வளங்களின் ஒதுக்கீடு வினைத்திறனாக இடம்பெறாமைக்குக் காரணமாகலாம். இது வினைத்திறனின்மையையும் சமூக தேவைகளை பூர்த்தி செய்வதில் தோல்வியடையும் நிலையினையும் ஏற்படுத்தலாம்.

**- அரசியல் ஊக்குவிப்புகள்:** அரசாங்கத்தின் தீர்மானங்கள் நீண்டகால சமூகநலனை அடிப்படையாகக் கொண்டமைவதற்குப்பதில் குறுங்கால அரசியல் விருப்பங்களின் செல்வாக்குக்கு உட்படலாம். அரசியல்வாதிகள் ஜனரஞ்சகமான அதேவேளை வினைத்திறனற்ற கொள்கைகளை அமுல்படுத்தலாம். உதாரணமாக விலைக்கட்டுப்பாடுகள் அல்லது பாதுகாப்புவாதக் கொள்கைகள். இவை சந்தைச் சமிக்ஞைகளை பிறழ்வுபடுத்துவதால வினைத்திறனற்ற வள ஒதுக்கீட்டிற்கு இட்டுச் செல்லலாம்.

**- வாரந்தேடல் நடத்தைகள்:** வியாபார அல்லது கரிசனைக்குழுவினர் (businesses or interest Groups) வாரந்தேடல் நடவடிக்கைகளில் **rent-seeking**—ஈடுபடலாம். சமூகத்தின் செலவில் தமக்கு சாதகமான நன்மை தரும் கொள்கைகளை (lobbying for favorable policies) கொண்டுவரும் பொருட்டு அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் அணுகுவர். இது உற்பத்தித் திறன் குறைந்த துறைகளில் மிகைமுதலீடு ஏற்படவும் அல்லது அரசியல் ரீதியில் நன்கு தொடர்புகளைக் கொண்டுள்ள கைத்தொழில்களுக்கு வளங்கள் பிழையாக ஒதுக்கீடு செய்யப்படவும். காரணமாகலாம்.

**(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி இரண்டு காரணிகளுக்கு புள்ளிகள் 02)**
**(மொத்தப் புள்ளிகள் 05)**

(iv)
**(a) நடைமுறைக்கணக்கு நிலுவை = (வரிவருவாய் + வரியல்லா வருவாய்) - (பொருள்கள் சேவைகள் மீதான செலவீடுகள் + நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் + வட்டிச் செலுத்தல்கள்)**

$$= (1800 + 250) - (1200 + 800 + 1500)$$
$$= 2050 - 3500 = -1450$$

**(b) முதன்மைக் கணக்கு நிலுவை = (வரிவருவாய் + வரியல்லா வருவாய் + கொடைகள்) - (வட்டிச் செலுத்தல்கள் நீங்கலான மீண்டெழும் செலவினங்கள் + மூலதனச் செலவினம் + தேறிய கடன்வழங்கல்)**

$$= (1800 + 250 + 50) - (3500 - 1500 + 1000 + 200)$$
$$= 2100 - 3200 = -1100$$

**(c) மொத்த நிலுவை = (மொத்த வருவாய் + கொடைகள்) – ( மீண்டெழும் செலவினங்கள் + மூலதனச் செலவினம்)**

$$= (1800 + 250 + 50) - (1200 + 800 + 1500 + 1000 + 200)$$
$$= 2100 - 4700 = -2600$$

**(d) மொத்த நிதியிடல் தேவைகள் = மொத்தப் பாதீட்டுக் குறைநிலை + கடன்மீள் செலுத்தல்கள்**

$$= 2600 + 1400 = 4000$$

**(02 புள்ளிகள் x 4 = 08 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

8. (i) நாடு A ஓரலகு உழைப்பைக் கொண்டு 10 அலகு புடைவைகளை அல்லது 5 சோடி சப்பாத்துக்களை உற்பத்தி செய்ய முடியும். அதேவேளை நாடு B ஓரலகு உழைப்பின் மூலம் 15 அலகு புடைவைகளை அல்லது 10 சோடி சப்பாத்துக்களை உற்பத்தி செய்ய முடியும் எனக் கருதுக.

(அ) ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் எந்நாடு ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது என்பதை விளக்குக. **(04 புள்ளிகள்)**

(ஆ) பரஸ்பர நன்மை தரும் வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் புடைவை மற்றும் சப்பாத்து என்பவற்றிற்கிடையில் சாத்தியமான வர்த்தக மாற்றுவீத வீச்சினை நிர்ணயிக்குக. **(02 புள்ளிகள்)**

(ii) 1977 இன் பின்னர் இலங்கை தொடர்ச்சியாக எதிர்நோக்கும் வர்த்தகக் குறைநிலைக்கான பிரதான காரணங்கள் எவை? **(04 புள்ளிகள்)**

(iii) உலக சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிப் போட்டித் தன்மையை மேம்படுத்த எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்? **(04 புள்ளிகள்)**

(iv) நாணயத்தின் வெளியகப் பெறுமதியின் ஒரு தேய்வுடன் தொடர்புடைய பிரதான பேரினப் பொருளாதார விளைவுகள் யாவை? **(06 புள்ளிகள்)**

8. (i) (a) - A, நாட்டில் 1 அலகு புடைவையின் அமையச் செலவு 5/10 = 0.5 சோடி சப்பாத்து ஆகும். (i.e., அதாவது 1 அலகு புடைவை உற்பத்தி செய்ய ஆகும் செலவு 0.5 சோடி சப்பாத்து ஆகும்).

- B, நாட்டில் 1 அலகு புடைவையின் அமையச் செலவு 10/15 = 0.67 சோடி சப்பாத்து ஆகும். (i.e., அதாவது 1 அலகு புடைவை உற்பத்தி செய்ய ஆகும் செலவு 0.67 சோடி சப்பாத்து ஆகும்).

- B நாட்டுடன் ஒப்பிடுகையில் (0.67 சோடி சப்பாத்து) A நாடு புடைவை உற்பத்தியில் குறைந்த அமையச் செலவைக் கொண்டுள்ளது (0.5 சோடி சப்பாத்து). எனவே, A நாடு புடைவை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது. **(02 புள்ளிகள்)**

- A, நாட்டில் 1 சோடி சப்பாத்தின் அமையச் செலவு 10/5 = 2 அலகு புடைவை ஆகும். (i.e., அதாவது 1 சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ஆகும் செலவு 2 அலகு புடைவை ஆகும்).

- B, நாட்டில் 1 சோடி சப்பாத்தின் 15/10 = 1.5 அலகு புடைவையாகும் (i.e., அதாவது 1 சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ஆகும் செலவு 1.5 அலகு புடைவையாகும்).

- A நாட்டுடன் ஒப்பிடுகையில் (2 அலகு புடைவை) B நாடு சப்பாத்து உற்பத்தியில் குறைந்த அமையச் செலவைக் கொண்டுள்ளது (1.5 அலகு புடைவை). எனவே, B நாடு சப்பாத்து உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

**(02 புள்ளிகள்)**

**(b) வர்த்தக மாற்று விகிதத்திற்கான சாத்தியமான வீச்சு**

பரஸ்பரம் நன்மைதரும் வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் வர்த்தக மாற்று விகிதமானது இரு நாடுகளிலும் ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவுகளுக்கிடையில் காணப்படல் வேண்டும்.

- ஒரு அலகு புடைவைக்கான வர்த்தக மாற்று விகிதம்:

A நாட்டில் 1 அலகு புடைவை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு 0.5 சோடி சப்பாத்து ஆகும். B நாட்டில் 1 அலகு புடைவை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு 0.67 சோடி சப்பாத்து ஆகும்.

**ஆகவே 1 அலகு புடைவைக்கான வர்த்தக மாற்று விகிதம் 0.5 இற்கும் 0.67 இற்கும் இடையிலான சோடி சப்பாத்துகளாகும்.**

**(01 புள்ளி)**

- ஒரு சோடி சப்பாத்துக்கான வர்த்தக மாற்று விகிதம்:

A நாட்டில் 1 சோடி சப்பாத்து உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு 2 அலகு புடைவை ஆகும். B நாட்டில் 1 சோடி சப்பாத்து உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு 1.5 அலகு புடைவை ஆகும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

ஆகவே 1 சோடி சப்பாத்திற்கான வர்த்தக மாற்று விகிதம் 1.5 இற்கும் 2 இற்கும் இடையிலான அலகு புடைவையாகும்.

(01 புள்ளி)
(மொத்தப்புள்ளிகள் 06)

(ii) தொடர்ச்சியாக இலங்கையின் வர்த்தக நிலுவை குறைநிலையில் இருப்பதற்கான காரணங்கள்:

- முதனிலைப் பண்ட ஏற்றுமதியில் தங்கியுள்ளமை
- வரையறுக்கப்பட்ட ஏற்றுமதி அடித்தளம்
- உலக சந்தைவிலைத் தளம்பல்கள்
- இறக்குமதிகளில் அதிகளவு தங்கியுள்ளமை
- அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்கின்றமை: இலங்கையானது பெற்றோலியப் பொருள்கள் இயந்திரங்கள் இடைநிலைப் பொருள்கள் மற்றும் கோதுமை சீனி போன்ற உணவுப்பொருள்கள் உள்ளடங்கிய அத்தியாவசிப் பொருள்களின் இறக்குமதியில் அதிகம் தங்கியுள்ளது.
- பலவீனமான ஏற்றுமதிக் கைத்தொழிற்துறை
- மந்தகதியிலான கைத்தொழில் மயமாக்கம்: ஏற்றுமதியால் உந்தப்பட்ட கைத்தொழில்களை நோக்கி வெற்றிகரமாகப் பயணித்த கிழக்காசியப் பொருளாதாரங்களைப் போலன்றி இலங்கையின் கைத்தொழில் துறையானது பல தசாப்தங்களாக விருத்தி குன்றியதாகவே இருக்கிறது.
- வரையறுக்கப்பட்ட புத்தாக்கமும் உற்பத்தித் திறனும்.
- மிகைமதிப்படைந்த நாணய மாற்று வீதம்:இலங்கை பல்வேறு காலப்பகுதிகளில் மிகைமதிப்புடைய நாணயமாற்றுவீதத்தைக் கடைப்பிடித்தது. அதனால் இறக்குமதிகள் மலிவானதாக மாறியது. ஆனால் இது ஏற்றுமதிப் போட்டித்தன்மையை எதிர்க்கணிய ரீதியில் பாதித்தது.

அதிகரிக்கும் உள்நாட்டுக் கேள்வி:

- அதிகரிக்கும் நுகர்வு: துரித சனத்தொகை வளர்ச்சி, நகரமயமாக்கல், மற்றும் அதிகரிக்கும் நுகர்வு நடத்தைகள் இறக்குமதிப் பொருள்களின், குறிப்பாக நுகர்வுப் பொருள்களின் கேள்வியை அதிகரித்தன. உயர்வான நுகர்வுக்கேள்வி அதற்கேற்ற ஏற்றுமதி வளர்ச்சி இல்லாத காரணத்தால் நீடித்த வர்த்தகச் சமமின்மைகளுக்கு பங்களிப்புச் செய்தது.
- பொருளாதாரத் தாராளமயமாக்கல்: 1970களின் இறுதியில் அறிமுகப் படுத்தப்பட்ட பொருளாதாரத் தாராளமயமாக்கல் கொள்கைகள் ஆடைதயாரிப்பு சுற்றுலாக் கைத்தொழில் துறை போன்றவற்றில் வளர்ச்சியை தூண்டினாலும் வர்த்தகத் தடைகள் நீக்கப்பட்ட காரணத்தினால் அவை இறக்குமதிகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்தி, வர்த்தக நிலுவை மேலும் மோசமடையக் காரணமாகியது.

வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI):

- ஏற்றுமதியை நோக்கியதுறைகளில் குறைவான வெளிநாட்டு நேரடி முதலீடு: ஏற்றுமதியை நோக்கியதுறைகளுக்குள் போதியளவு வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்வதில் இலங்கை போராட்டத்தை எதிர்நோக்கியது. இது ஏற்றுமதிகளை விரிவாக்குவதற்கான சாத்தியத்தை மட்டுப்படுத்தியது. உட்கட்டுமானம் சுற்றுலாத்துறை போன்ற துறைகளில் அதிகளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது நாட்டின் ஏற்றுமதி இயலளவை குறிப்பிடத்தக்களவில் மேம்படுத்தவில்லை.

- உள்நாட்டு யுத்தம் (1983-2009): மூன்று தசாப்த காலங்கள் நீடித்த உள்நாட்டு முரண்பாடுகள் பொருளாதார வளர்ச்சியையும் சர்வதேச வர்த்தகத்தையும் மோசமாகப் பாதித்தன. யுத்தமானது முதலீடு உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிகளில் தடைகளை ஏற்படுத்தியதுடன் குறிப்பாக வடக்குக் கிழக்குப்பகுதிகளில் சுற்றுலாத்துறை மற்றும் விவசாய நடவடிக்கைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது.
- அரசியல் உறுதிப்பாடின்மை: அடிக்கடி ஏற்பட்ட ஆட்சிமாற்றங்கள் ஒத்திசைவில்லாத பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் ஆட்சிமுறைமைசார்ந்த பிரச்சினைகள் போன்றனவும் வர்த்தகத்திற்கும் முதலீட்டிற்கும் நிச்சயமற்ற நிலையை தோற்றுவித்ததுடன் ஏற்றுமதி வளர்ச்சியை மட்டுப்படுத்தின. இதுவும் வர்த்தக நிலுவைக்குறைநிலையை அதிகரித்தது.

(தலா 01 புள்ளி வீதம் நான்கு காரணிகளுக்கு; மொத்தப்புள்ளிகள் 04)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**(iii) - ஏற்றுமதி அடித்தளத்தைப் பன்முகப்படுத்தல்:** இலங்கையின் ஏற்றுமதி அடித்தளம் குறிப்பாக தயாரித்த ஆடைகள் தேயிலை றப்பர் மற்றும் தெங்கு போன்ற ஒரு குறுகிய வீச்சிலான பொருள்களில் வெகுவாகத் தங்கியுள்ளது. இலத்திரனியல் பொருள்கள் மருந்துப்பொருள் உற்பத்தி தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் மற்றும் விவசாயக் கைத்தொழில் பதனிடல் போன்ற உயர்பெறுமதி கொண்ட கைத்தொழில்களை நோக்கி பன்முகப்படுத்துவதன் மூலம் சர்வதேச சந்தையில் போட்டித்தன்மையை ஊக்குவிக்கலாம்.

**- பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்:** மூலப்பொருள்களையும் குறைந்த பெறுமதிகொண்ட பொருள்களையும் ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக இலங்கை பெறுமதிச் சங்கிலியில் மேல்நோக்கி நகர முயற்சிக்க வேண்டும். உதாரணமாக தேயிலையை ஆரம்பநிலை உற்பத்தியாக ஏற்றுமதி செய்யாமல் வர்த்தக நாமங்களைக் கொண்டதும் விசேடமானதுமான தேயிலை சார்ந்த பொருள்களை ஏற்றுமதி செய்யலாம். இறப்பரைப் பொறுத்தமட்டில் மருத்துவ உபகரணங்கள் வாகன உதிரிப்பாகங்கள் போன்ற உயர் தொழில் நுட்பம்வாய்ந்த இறப்பர் பொருள் உற்பத்தியில் கவனஞ் செலுத்த வேண்டும்.

**- கைத்தொழில் வலயங்களும் ஏற்றுமதி உற்பத்தி வலயங்களும் (EPZs):** உலக தரம் வாய்ந்த கைத்தொழில் பேட்டைகளை குறிப்பாக துறைமுகங்களுக்கு அருகில் அமைப்பது ஏற்றுமதியை குறிக்கோளாகக் கொண்ட துறைகளுக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க உதவும். இத்தகைய வலயங்களில் அமைந்துள்ள நிறுவனங்களை அதிக பெறுமதிகொண்ட பொருள்களை உற்பத்தி செய்ய ஊக்குவித்தல் ஏற்றுமதி வளர்ச்சியை மேலும் பெருக்கும்.

**- உற்பத்தித் திறனையும் புத்தாக்கத்தையும் முன்னேற்றல்:** அரசாங்கமும் தனியார்துறையும் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கு அதிக முதலீடுகளைச் செய்து புத்தாக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக ஏற்றுமதிச் சாத்தியங்கள் கொண்ட விவசாயம் பரும்படியாக்கம் மற்றும் சேவைகள் துறைகளில் முதலீடுகளைச் செய்யலாம்.

ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மற்றும் புதுப்பொருள்களை அறிமுகப்படுத்த ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் செயன்முறை முன்னேற்றங்களை அறிமுகப்படுத்தம் நிறுவனங்கள் இலங்கைப் பொருள்களுக்கு உலகப் போட்டித்தன்மையை மேம்படுத்த உதவலாம்.

**- தொழிலாளர் திறன் விருத்தியும் கல்வியும்:** தொழில் பயிற்சி தொழில் நுட்பக்கல்வி அதிக கேள்வி உள்ள துறைகளுக்கு ( ICT, பொறியியல், மற்றும் உயர் தொழில்நுட்ப கைத்தொழில் உற்பத்தி) விசேடமான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கல் ஆகியன உற்பத்தித் திறனையும் போட்டித்தன்மையையும் முன்னேற்றுவதற்கு அத்தியாவசியமாகும்.

**- முதலீடுகளுக்கு உகந்த ஒருசூழலை உருவாக்கல்:** ஒழுங்குறுத்தல்களை ஒத்திசைவாக்கல், நிருவாகரீதியான தடைகளைக் குறைத்தல், கொள்கைகளின் நீடித்ததன்மை என்பன ஏற்றுமதிநோக்கிய துறைகளை நோக்கி வெளிநாட்டு நேரடிமுதலீடுகளைக் கவர உதவும் இலங்கை வியாபாரம் செய்வதை இலகுபடுத்தும் வியாபாரத்தரமிடலில் முன்னேற்றமடைய கரிசனை காட்டல் ஊழலைக் குறைத்தல் வரிமுறைகளை எளிமைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் முதலீட்டாளர்களை நாட்டுக்குள் கவர முயற்சிக்க வேண்டும்.

**உபாயரீதியிலான வர்த்தக உடன்படிக்கைகளையும் சந்தை நுழைவையும் ஏற்படுத்தல்:**

- **வர்த்தக உடன்படிக்கைகளை விரிவாக்கல்:** இலங்கை பல்பக்க மற்றும் இருபக்க வர்த்தக உடன்படிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும். இது ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்கா மற்றும் ஆசியாவின் எழுச்சி பெற்றுவரும் பொருளாதாரங்கின் பாரிய சந்தைகளில் முன்னுரிமை நுழைவைப் பெற்றுத்தரும்.

- **சர்வதேச தரநியமங்களை கடைப்பிடித்தல்:** இலங்கை ஏற்றுமதியாளர்கள் தமது பொருள்கள் சர்வதேச தரநியமங்களையும் பாதுகாப்பு நியமங்களையும் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தவேண்டும். இது ISO தரநியமங்கள், Fair Trade certification, மற்றும் விவசாய ஏற்றுமதிகள் தொடர்பில் organic certification போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதை அவசியமாக்கும். உயர் தரநியமங்களைக் கடைப்பிடிப்பதானது இலங்கைப்பொருள்களின் சர்வதேச சந்தைப்படுத்தலை மேம்படுத்தும்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Scanned with CamScanner

- **டிஜிட்டல் நிலைமாற்றம்:** டிஜிட்டல் வர்த்தகம் மற்றும் e-commerce மேடைகளை பயன்படுத்துவதானது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பாக SMEs, துறையில் உள்ளவர்களுக்கு சர்வதேச சந்தைகளை நேரடியாகச் சென்றடைவதற்கு உதவும். தேசிய ரீதியில் e-commerce மேடைகளை உருவாக்கி டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை (உயர்வேகம் கொண்ட இணையம் மற்றும் செலுத்தல் நுழைவாயில்கள் போன்ற) மேம்படுத்துவது சர்வதேச வர்த்தகத்தை வசதிப்படுத்துவதற்கு மிக அவசியமானதாகும்.

- **பசுமை வலுசக்தியும் சுற்றாடல் தரநியமங்களும்.:** மீள் புதுப்பிக்கத்தக்க வலு மூலாதாரங்களை நோக்கி மாறுவதற்கு கைத்தொழில்களை ஊக்குவித்து சுற்றாடல் காலடித்தடங்களை குறைப்பது இலங்கையின் ஏற்றுமதிகளை சர்வதேச மட்டத்தில் அதிகரிப்பதற்கு உதவும் குறிப்பாக நிலைபேறுத்தன்மைக்கு முன்னுரிமை வழங்கும் சந்தைகளை அடைய இது பயன்படும்.

- **ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்தல்:** ஊழலை அகற்றி ஆட்சிமுறையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது ஏற்றுமதியாளர்களின் செலவுகளைக் குறைக்க உதவுவதுடன் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரவும் உதவும். இறுதியில் ஏற்றுமதித்துறையின் துரிதவிரிவாக்கத்திற்கும் இது உறுதுணைபுரியும்.

**(ஒன்றிற்கும் 01 புள்ளி நான்கு காரணிகளுக்கு; மொத்தப் புள்ளிகள் 04)**

(iv) - **ஏற்றுமதிகளை அதிகரித்தல்:** தேய்வடைந்த நாணயம் காரணமாக நாட்டின் ஏற்றுமதிப் பொருள்கள் வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு மலிவானதாக மாறும். இது பொதுவாக ஏற்றுமதிகளுக்கான கேள்வியை அதிகரித்து வர்த்தக மீதியை மேம்படுத்தக் கூடும்.

- **செலவு கூடிய இறக்குமதிகள் :** நாணயம் தேய்வடைதல் இறக்குமதிகளை செலவ கூடியதாக மாற்றும். இது இறக்குமதிகளுக்கான கேள்வியைக் குறைக்கும். அதனால் உள்ளூர் உற்பத்திகள் இறக்குமதிகளை பதிலீடு செய்யுமாயின் வர்த்தக நிலுவை மேம்பாடடையக் கூடும்

- **இறக்குமதிப் பணவீக்கம்:** உயர் இறக்குமதிச் செலவினங்கள் எரிபொருள் உணவுப்பொருள் மற்றும் மூலப்பொருள்கள் போன்ற இறக்குமதிப் பொருள்கள் சேவைகளின் விலைகளை அதிகரிக்கும். இது ஒட்டுமொத்தமாக நாட்டில் விலைமட்டங்களை அதிகரித்து செலவுத்தூண்டல் பணவீக்கத்திற்கு இட்டுச் செல்லும்.

**கூலி-விலை சுருள் இடர்நேர்வு:** இறக்குமதி செலவு அதிகரிப்பின் காரணமாக விலைகள் அதிகரிப்பதனால் தொழிலாளர்கள் தமது கொள்வனவுச் சக்தியைப் பேண அதிக வேதனங்களை எதிர்பார்ப்பார்கள். இது வேதன விலைச் சுருளுக்குள் இட்டுச் செல்லலாம். வேதன அதிகரிப்பை வழங்கும் போது விலைகள் மேலும் அதிகரிக்கும். இது மேலும் பணவீக்கத்தை அதிகரிக்கும்.

- **மேம்பட்ட தேறிய ஏற்றுமதிகள்:** ஏற்றுமதிகள் அதிகரித்து இறக்குமதிகள் வீழ்ச்சியடைவது தேறிய ஏற்றுமதிகளை அதிகரிக்கும் (ஏற்றுமதிகள் - இறக்குமதிகள்), இது மொத்தக் கேள்வியின் முக்கியமான ஒரு கூறாகும்.

மொத்தக் கேள்வியில் ஏற்படும் இவ்வதிகரிப்பு ஏனையன மாறா நிலையில் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும்.

**குறைவடைந்த நுகர்வும் முதலீடும்:** மறுபுறம் உயர் இறக்குமதி விலைகள் உள்நாட்டு நுகர்வைக் குறைக்கும் அத்துடன் இறக்குமதி முதலீட்டுப் பொருள்களிலும் இடைநிலைப் பொருள்களிலும் தங்கியுள்ள வியாபார நிறுவனங்கள் உயர்ந்த செலவுகளை எதிர்கொள்வதால் பொருளாதாரத்தில் முதலீடுகள் வீழ்ச்சியடையலாம்.

- **அதிகரித்த வெளிநாட்டுக் கடன் சேவைச் செலவுகள்:** ஒரு நாடு பெருமளவில் வெளிநாட்டுக் கடன்களை கொண்டிருக்குமாயின் நாணயம் தேய்வடைந்தால் உள்நாட்டு நாணயத்தில் அக்கடனை மீளச் செலுத்தும் செலவு அதிகரிக்கும்.

- **வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் (FDI) கவர்தல்:** தேய்வடைந்த ஒரு நாணயம் நாட்டின் சொத்துக்களை (நிலம், கம்பனிகள், மற்றும் முதலீடுகள் போன்ற) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மலிவானதாக மாற்றும். இதனால் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு முதலீடு மேற்கொள்வது செலவு குறைந்ததாக மாற்றும். இது நாட்டுக்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) கவர உதவும்.



Scanned with CamScanner
Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**- மூலதன வெளிப்பாய்ச்சலும் முதலீட்டாளரின் நம்பிக்கை குறைதலும்:** மறுபுறம், நாணயத் தேய்வு மூலதன வெளிப்பாய்ச்சலை அதிகரிக்கும். முதலீட்டாளர்கள் நாணயம் மேலும் தேய்வடையலாம் அத்துடன் பொருளாதார உறுதியற்ற நிலை அல்லது பணவீக்கம் ஏற்படலாம் எனக்கருதி தமது முதலீடுகளை மீளப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பர். பட்டியல் முதலீடுகள் தொடர்பில் இதை அவதானிக்கலாம். இங்கு முதலீட்டாளர்கள் தமது நட்டத்தைத் தவிர்ப்பதற்காக தமது பங்குகள் முறிகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்களை விரைவாக விற்பனை செய்வர்.

**- வட்டி வீதங்கள் உயர்வதற்கான சாத்தியங்கள்:** மத்திய வங்கிகள் நாணயத் தேய்வை தொடர்ந்து வட்டிவீதங்களை அதிகரிக்கும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை நிலைப்படுத்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் உயர் வட்டிவீதங்கள் நுகர்வோருக்கும் முதலீட்டாளருக்கும் கடன்பெறும் செலவை அதிகரிப்பதனால் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கலாம்.

**- வருமானச் சமமின்மைகள் விரிவடைதல்:** குறைந்த வருமானம் பெறும் குடித்தனங்கள் தமது வருமானத்தில் பெரும்பகுதியை உணவு எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருள்கள் மீது செலவிடுகின்றன. நாணயத் தேய்வு காரணமாக ஏற்படும் பணவீக்கம் இவர்களை மோசமாகப்பாதிக்கலாம்.

**(ஒரு காரணிக்கு 01 புள்ளி ஏவையெனும் ஆறு காரணிகளுக்கு; மொத்தப்புள்ளிகள் 06)**

9. (i) (அ) அபிவிருத்தியின் ஓர் அளவையாக தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறதென்பதை சுருக்கமாக விளக்குக. **(02 புள்ளிகள்)**

(ஆ) அபிவிருத்தியின் ஓர் அளவை என்ற வகையில் அதன் வரையறைகள் யாவை? **(03 புள்ளிகள்)**

(ii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வறுமை மட்டத்தில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டமைக்கான பிரதான காரணங்களைக் கூறுக. **(04 புள்ளிகள்)**

(iii) பலவீனமான ஆட்சிமுறைமையும் ஊழலும் பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தும்? **(05 புள்ளிகள்)**

(iv) குடித்தொகை நிலைமாற்றங்கள் இலங்கையின் ஊழியச் சந்தையின் மீதும் பொது நிதியியல் மீதும் ஏற்படுத்திய சவால்கள் எவை? **(06 புள்ளிகள்)**

9. (i) (a) அபிவிருத்தியின் ஒரு அளவையாக தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

- **பொருளாதார முன்னேற்றத்தின் ஒரு குறிகாட்டி** : தலைக்குரிய GNI ஒரு நாட்டின் உள்ளே நிலவும் சராசரி வருமான மட்டங்களை அளவிடப் பயன்படுகிறது. இது வாழ்க்கைத்தர மட்டங்களுடன் தொடர்புபட்டுள்ளது. ஒரு நாட்டின் உயர் தலைக்குரிய GNI ஆனது பொதுவாக மக்கள் அதிக வளங்களை பெறும் நிலையிலும் உயர் கொள்வனவு சக்தி கொண்டவர்களாகவும் உள்ளார்கள் எனக் கருதும் அதேவேளை, குறைந்த தலைக்குரிய GNI மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தையும் பெருமளவில் குறைவான வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பிடும்.

- **நாடுகளுக்கிடையில் பொருளாதார அபிவிருத்தியை ஒப்பிடுதல்:** நாடுகளுக்கிடையில் பொருளாதார அபிவிருத்தியை ஒப்பீடு செய்ய தலைக்குரிய GNI உதவுகிறது. நாடுகள் பொதுவாக குறைந்த வருமானம் பெறும் நாடு, நடுத்தர வருமானம் பெறும் நாடுகள், அல்லது உயர் வருமானம் பெறும் நாடுகள் என அவற்றின் தலைக்குரிய GNI இன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது. இவ்வகுப்பாக்கமானது உலகவங்கி போன்ற நிறுவனங்களால் பொருளாதார அபிவிருத்தி உதவித்திட்டங்களுக்காக பொருளாதார அபிவிருத்தி மட்டத்தை அளவிடப்பயன்படுத்தப்படுகிறது.

- **பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறிகாட்டி:** தலைக்குரிய GNI ஆனது ஒரு காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை அளவிடவும் பயன்படுத்தப்படுகிறது. தலைக்குரிய GNI இல் ஏற்படும் ஒரு அதிகரிப்பு நாட்டின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு பொருளாதார வினைத்திறன் மற்றும் நாட்டு மக்களின் நலன்களின் மேம்பாடு பற்றியும் சுட்டிக்காட்டும்

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- **ஏனைய அபிவிருத்திக் குறிகாட்டிகளுடன் உள்ள தொடர்பு:** தலைக்குரிய GNI ஒரு பொருளாதார அளவையாக இருப்பினும் ஆயுள் எதிர்பார்க்கை எழுத்தறிவு சுகாதார வசதிகளின் கிடைப்பனவு மற்றும் கல்வி மட்டங்கள் போன்ற விரிவான அபிவிருத்திக் குறிகாட்டிகளுடனும் தொடர்பு பட்டுள்ளது. ஒரு நாட்டின் தலைக்குரிய GNI அதிகரித்தால் அந்நாட்டிற்கு சமூக சேவைகள் உட்கட்டுமானங்களில் முதலீடு செய்ய அதிக வளங்கள் இருக்கும். அதனால் இவற்றில் மேம்பாடு ஏற்படும்.

**(ஒரு காரணிக்கு 01 புள்ளி இரு காரணிகளுக்கு; மொத்தப் புள்ளிகள் 02).**

**(b) அபிவிருத்தியின் ஓர் அளவையாக தலைக்குரிய GNI இன் வரையறைகள்:**

- வருமானப் பங்கீட்டையும் சமமின்மைகளையும் கவனத்திற் கொள்ளாமை: தலைக்குரிய GNI வருமானத்தின் ஒரு சராசரி அளவையாகும் ஆனால் அவ்வருமானம் மக்கள் மத்தியில் பங்கிடப்பட்டுள்ள விதம் பற்றி எதுவும் காட்டப்படவில்லை. ஒரு நாட்டில் கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் வறுமையில் வாடும் நிலையிலும் அதன் தலைக்குரிய GNI உயர் மட்டத்தில் இருக்கலாம். வருமானம் ஒருசிலரது கைகளில் சென்று சேர்ந்திருக்கலாம்.

- **பொருளாதாரக் காரணிகளை மாத்திரம் கருத்தில் கொள்கின்றமை:** அபிவிருத்தியில் பொருளாதாரம் தவிர்ந்த காரணிகள் இங்கு கருத்திற் கொள்ளப்படவில்லை. அபிவிருத்தி என்பது வருமானம் பற்றியது மட்டுமல்ல; சமூக அரசியல் மற்றும் சுற்றாடல் பரிமாணங்கள் அதில் உள்ளடக்கப்படுகின்றன. சுகாதார வசதிகள் கல்வி அரசியல் சுதந்திரம் மற்றும் சுற்றாடல் நிலைபேறுடைய தன்மை போன்றவற்றை அடைவதும் அபிவிருத்தியின் முக்கிய அம்சமாகும். தலைக்குரிய GNI பொருளாதாரமல்லாத விடயங்கள் பற்றி எவ்வித தகவல்களையும் வழங்கவில்லை

- **சமூகநலன்கள் இதில் உள்வாங்கப்படுவதில்லை:** ஆயுள் எதிர்பார்க்கை எழுத்தறிவு வாழ்க்கைத்தரம் போன்ற குறிகாட்டிகள் அபிவிருத்தியை விளங்கிக் கொள்வதில் முக்கியமானவையாகும். ஆனால் இவை தலைக்குரிய GNI இல் உள்வாங்கப்படவில்லை. இதன் விளைவாக ஒரேயளவான தலைக்குரிய GNI ஐக் கொண்டுள்ள இரண்டு நாடுகள் சமூக மனித அபிவிருத்தியில் பாரிய வித்தியாசங்களைக் கொண்டிருக்கலாம்.

- **வாழ்க்கைத்தரத்தையோ மக்கள் நலனையோ பிரதிபலிப்பதில்லை:** தலைக்குரிய GNI நாடுகளுக்கிடையில் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் வேறுபாடுகளை பிரதிபலிப்பதில்லை. ஒரு டொலர் வெவ்வேறு நாடுகளில் வேறுபட்ட கொள்வனவுச் சக்தியைக் கொண்டிருக்கும்.

- **வாழ்க்கைத்தரம்:** தலைக்குரிய GNI ஒரு நாட்டில் காணப்படும் உட்கட்டமைப்புகள் பொதுச் சேவைகள் வீடமைப்பு சுற்றாடல் போன்றவற்றின் தரங்களையும் வாழ்க்கைத்தரத்தையும் ஒட்டுமொத்த நலனையும் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**சுற்றாடல் பேண்தகுதன்மையும் வளங்களின் துரிததேய்வும்:** சூழல் தரமிழப்பை புறந்தள்ளல்: தலைக்குரிய GNI பொருளாதாரத்தின் வெளியீட்டினைப்பற்றி மட்டுமே கருத்திற்கொள்கிறது. பொருளாதார நடவடிக்கைகளை பேணிச்செல்ல முடியுமா என்பது குறித்து கவனம் செலுத்தவில்லை. இயற்கை வளங்களை மிகையாகச் சுரண்டுவதால் ஒரு நாடு உயர்ந்த தலைக்குரிய GNI இனை அடையமுடியும். ஆனால் நீண்டகாலத்தில் அது நீண்டகால சுற்றாடல் சீர்கேட்டிற்கும் எதிர்கால அபிவிருத்தி சாத்தியங்கள் பாதிக்கப்படவும் காரணமாகும்.

- **வருமானங்களில் தளம்பல்கள்:** தலைக்குரிய GNI வெளிநாட்டிலிருந்தான வருமானங்களை (தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் போன்ற) உள்ளடக்குகிறது. வெளியகக் காரணிகளால் இத்தகைய வருமானங்களின் உள்வருகைகளில் ஏற்படும் தளம்பல் நிலைமைகள், அபிவிருத்தி அளவையைப் பிறழ்வடையச் செய்யும். வெளிநாட்டு வருமானத்தில் ஏற்படும் ஒரு திடீர் வீழ்ச்சி உள்நாட்டுப்பொருளாதாரத்தின் உண்மையான நிலைமையினைப் பிரதிபலிக்காது.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 05)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**(ii) அண்மை ஆண்டுகளில் இலங்கையில் வறுமை மட்டம் துரிதமாக அதிகரித்தமைக்கான பிரதான காரணங்கள்:**

- **பொருளாதார நெருக்கடியும் தேக்கநிலையும்:** உயர் மட்டத்திலான வெளிநாட்டுப் படுகடன் காரணமாக கடன் நிலைபேற்றுத் தன்மையைப் பேணமுடியாத நிலையுடன் இலங்கை மிகத் தீவிரமான கடன் நெருக்கடியை எதிர்நோக்கியது. இது நாடு 2022 இல் படுகடனை மீளச் செலுத்தமுடியாத நிலைக்கு இட்டுச் சென்றதுடன் சர்வதேச கடன்களை மேலும் பெறமுடியாத நிலையை ஏற்படுத்தியதுடன் வெளிநாட்டுச் சொத்துகள் விரைவாகத் தேய்வடையவும் காரணமாகியது. இக்கடன் சுமையானது அரசாங்கம் சமூகநலத்திட்டங்களை நிதியீட்டம் செய்வதையும் உட்கட்டுமானங்களில் முதலீடு செய்வதையும் பாதிப்புறும் நிலையில் உள்ள மக்களுக்கு உதவுவதையும் மட்டுப்படுத்தியதுடன் நாட்டின் வறுமைநிலை தீவிரமாகவும் காரணமாகியது.

- **பணவீக்கமும் வாழ்க்கைச் செலவும்:** பொருளாதார நெருக்கடியின் உடனடி விளைவுகளில் வானுயரச் சென்ற பணவீக்கமும் ஒன்றாகும். உயர் பணவீக்கம் குறிப்பாக, உணவு மற்றும் எரிபொருள் உயர் விலைகள் குடித்தனங்களின் கொள்வனவுச் சக்தியை தேய்வடையச் செய்தன. இது பெருமளவில் குறைந்த வருமானம் பெறும் குழுக்களைத் தீவிரமாகப் பாதித்தது.

- **நாணயப் பெறுமதித் தேய்வு:** இலங்கை ரூபாவின் சடுதியான பெறுமதித் தேய்வு குறிப்பாக உணவு எரிபொருள் மருந்துவகைகள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளின் செலவுகளை அதிகரித்தது.

- **ஊழல்:** நாட்டின் பொருளாதார நெருக்கடியை ஊழல் மேலும் தீவிரப்படுத்தியது. பொது நிதிகள் பிழையாக ஒதுக்கப்பட்டதுடன் பொதுத்துறை முகாமைத்துவம் வினைத்திறனற்றதாக மாறியது. நாட்டின் மீதான வெளிநாட்டு முதலீட்டாளரின் நம்பிக்கை குறைவடைந்தது. வறுமை ஒழிப்பிற்காகவும் சமூகநலனுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய நிதிவளங்கள் வேறு துறைகளுக்கு நகர்த்தப்பட்டன. இது பாதிப்புறும் நிலையில் உள்ள மக்கள் நேரடியாகவே பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

- **கோவிட் 19 கொள்ளை நோய்:** இலங்கைப் பொருளாதாரம் சுற்றுலாத்துறையின் மீது பெருமளவில் தங்கியுள்ளது, அதன் மூலம் கணிசமானளவு அந்நியச் செலாவணி உழைப்புக்கு பங்களிக்கிறது. கோவிட் -19 பெருங்கொள்ளை நோய் சுற்றுலாப்பயணிகள் வருகையில் தீவிர வீழ்ச்சியை ஏற்படுத்தியதுடன், சுற்றுலாத்துறையிலும் அதனோடு தொடர்புடைய ஏனைய துறைகளிலும் (விருந்தோம்பல், போக்குவரத்து, மற்றும் சில்லறை வர்த்தகம்). பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருமான வீழ்ச்சி பல குடும்பங்களை வாழ்க்கைப் போராட்டத்தில் தள்ளியதுடன் வறுமைநிலை அதிகரிக்கவும் காரணமாகியது.

- **உயர் வேலையின்மையும் குறைதொழில் வாய்ப்பும்:** பொருளாதார நெருக்கடியும் கொள்ளை நோயும் குறிப்பிடத்தக்களவு வேலை இழப்புகளை குறிப்பாக சுற்றுலா கைத்தொழில் உற்பத்தித் துறையிலும் கட்டுமானத் துறையிலும் ஏற்படுத்தியது. இது குடும்பங்களின் வருமானவீழ்ச்சிக்கு பங்களித்ததுடன் வறுமையை அதிகரித்தது.

- **விவசாயத்துறை எதிர்நோக்கும் சவால்கள்:** 2021இல், இலங்கை அரசாங்கம் திடீரென இரசாயன வளமாக்கிப்பயன்பாட்டைத் தடைசெய்ததுடன் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தது. இக்கொள்கை, பின்னர் நீக்கிக் கொள்ளப்பட்டாலும், விவசாய உற்பத்தியில் தீவிரமான தடங்கல்களை ஏற்படுத்தியதுடன், நெல் தேயிலை மரக்கறிவகைகள் ஆகிய விளைபொருள்களின் விளைச்சலை குறைத்தது. இது உணவுப்பற்றாக்குறையை ஏற்படுத்தியதுடன் விலை அதிகரிப்புக்கும் இட்டுச் சென்றதுடன் விவசாயிகளின் வருமானங்கள் குறைவடையவும் காரணமாகி பலரை ஆழமான வறுமை நிலையில் விழச் செய்தது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- **வெளியக அதிர்ச்சிகள்:** எண்ணெய் உணவு வளமாக்கி போன்ற அத்தியாவசியப் பொருள்களின் உலக விலைகள் அதிகரித்தமை இலங்கையின் பொருளாதாரத்தில் மேலும் அழுத்தங்களை அதிகரித்தது. இறக்குமதியில் தங்கியுள்ள ஒரு பொருளாதாரமாக வெளியக விலை அதிர்ச்சிகளுக்கு அதிகம் பாதிப்புறும் நிலையில் உள்ளதால் உள்நாட்டு பணவீக்க நிலைமை மேலும் மோசமாக்கியது. இது வறுமை அதிகரிப்புக்கு நேரடிப்பங்களிப்பை வழங்கியது.

- **வெளிநாட்டிலிருந்தான தொழிலாளர் பணஅனுப்பல்கள் குறைந்தமை:** இலங்கையின் புலம் பெயர் தொழிலாளர்கள் உழைத்து அனுப்பும் பணவனுப்பல்கள் ஒரு முக்கிய அந்நியச் செலாவணி மூலாதாரமாகவும் வீட்டுத்துறை வருமானமாகவும் உள்ளது. பொருளாதார நெருக்கடிக் காலத்தில் இவற்றின் உள்வருகையானது சடுதியாக வீழ்ச்சியடைந்தது. புலம் பெயர் வேலைவாய்ப்புகளுக்கான கேள்வி குறைவடைந்தமையும் நாணயமாற்றுவீத வேறுபாடுகளும் இந்நிதிப்பாய்ச்சல்கள் குறையக் காரணமாகும். இவ்வீழ்ச்சியானது கிராமப்புறங்களில் உள்ள குடும்பங்களை வெகுவாகப் பாதித்து வறுமை நிலை அதிகரிக்கக் காரணமாகியது.

- **சமூக நலன்புரித் திட்டங்கள் போதாமை:** இலங்கையில் சில சமூக நலத்திட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட பெரியளவிலான வறுமைநிலையினைக் கையாள்வதற்குப் போதுமானதாக இல்லை. சமூக பாதுகாப்புத்திட்டங்களை விரிவாக்குவதற்கும் வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் ஆற்றலை அரசிறை நெருக்கடியானது தடுத்தது. இதனால் பாதிப்புறு நிலையிலிருந்த பலகுடும்பங்கள் போதிய உதவியின்றி வறுமையில் சிக்கித் தவித்தன.

- **காலநிலை மாற்றத்தின் விளைவுகள்:** இலங்கையானது வெள்ளப்பெருக்கு வரட்சி மண்சரிவு போன்ற காலநிலை தொடர்புடைய இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புறும் நிலை அதிகரித்து வருகிறது. இந்நிகழ்வுகள் விவசாய உற்பத்தித் திறன் பாதிப்புக்கும் சமூக இடப்பெயர்வு வாழ்வாதாரங்களை இழத்தல் போன்றவற்றுக்கும் குறிப்பாக கிராமப்புறங்களில் காரணமாகியது. இது வறுமையையும் பொருளாதார ரீதியில் பாதுகாப்பற்ற தன்மையையும் அதிகரித்தது.

**(ஒரு காரணத்திற்கு 01 புள்ளி நான்கு காரணங்களுக்கு மொத்தப் புள்ளிகள் 04)**

(iii) **பலவீனமான ஆட்சிமுறையும் ஊழலும் பொருளாதார வளர்ச்சியை பல்வேறு வழிகளில் நடைசெய்தன.**

- **வளங்கள் பிழையாக ஒதுக்கீடு செய்யப்படல்:**

பலவீனமான ஆட்சி முறை வினைத்திறனற்ற வளஒதுக்கீட்டை ஏற்படுத்தியது. அரசியல் ரீதியில் நல்ல தொடர்புகளைக் கொண்டுள்ள நபர்களுக்கும் பிராந்தியங்களுக்கும் சார்பான முதலீட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஊழல் பொதுநிதியை உற்பத்தியை ஈட்டித்தரவல்ல முதலீடுகளிலிருந்து தனிப்பட்ட நபர்களுக்கு நன்மை தரவல்ல முதலீடுகளை நோக்கி மாற்றியது.

- **தடுக்கப்பட்ட முதலீடுகள் :**

பலவீனமான ஆட்சிமுறை பொருத்தமற்ற கொள்கைகள் பலவீனமாக சொத்துரிமை ஒழுங்குறுத்தல் வெளிப்படைத்தன்மை குறைவாகக் காணப்பட்டமை போன்றவற்றால் நாட்டில் நிச்சயமற்ற தன்மைகள் உருவாகின.

ஊழல் இலஞ்சம் முறைசாராத கட்டணங்கள் போன்றவற்றால் வியாபாரம் செய்வதற்கான செலவு அதிகரித்தன. இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளைக் குறைத்தது.

- **பொதுத்துறை சேவை வழங்குதலில் வினைத்திறன் குறைவடைந்தமை:**

திறமையற்ற ஆட்சியானது தாமதங்களுக்கும் அதிகாரவர்க்க வினைத்திறனின்மைக்கும் இட்டுச் சென்றதுடன் குடிமக்களும் வியாபாரங்களும் தமக்குத் தேவைப்படும் பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதை கடினமாக்கியது. ஊழல் காரணமாக ஒப்பந்தங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் திறமை அடிப்படையில் வழங்கப்படுவதற்குப் பதிலாக பாரபட்சம் பார்த்து வழங்கப்படுவதால் பொதுப்பொருள்களும் சேவைகளும் தரமற்றதாக வழங்கப்படக் காரணமாகியது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- பொதுமக்களின் நம்பிக்கை தேய்வடைந்தமை:

**பலவீனமான தாபன ரீதியான கட்டமைப்புகள்:**

பலவீனமான ஆட்சிமுறை பலவீனமான நிறுவனக்கட்டமைப்பிற்கு இட்டுச் செல்லும். இவற்றால் பொருளாதார மற்றும் சமூக சவால்களை வினைத்திறனாக முகாமை செய்ய முடியாது.

ஊழல் சட்டத்துறையையும் நிதித்துறையையும் பலவீனமாக்கும் ஒப்பந்தங்களையும் சொத்துரிமைகளையும் நடைமுறைப்படுத்தப்படுவதை இது கடினமாக்கும். நீண்டகால பொருளாதாரத்திட்டமிடலையும் நிடித்தவளர்ச்சியையும் அதைரியப்படுத்தும்.

- **அரசிறைத்துறையின் மீது ஏற்படும் தாக்கம்:**

பலவீனமான ஆட்சிமுறை பாதீட்டு பிழையான முகாமைத்துவத்திற்கும் தாக்குப்பிடிக்க முடியாத கடன் திரட்சிக்கும் இட்டுச் செல்லும்.

ஊழலானது தனிநபர்களும் வியாபாரங்களும் அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்குவதன் மூலம் வரியை தவிர்ப்பதனால் வரிவருவாயை வீழ்ச்சியடையச் செய்யும்.

ஊழலானது அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதிவழங்குவதையும் பேரினப்பொருளாதார சமமின்மையை கையாள்வதையும் மட்டுப்படுத்தும்.

- **புத்தாக்கத்தையும் முயற்சியாண்மையையும் தடைசெய்யும்:**

பலவீனமான ஆட்சிமுறை வியாபார சூழலின் எதிர்வுகூறுந்தன்மையினையும் நியாயத் தன்மையையும் குறைக்கும்.

ஊழல் வாரந்தேடல் கலாசாரத்தை ஊக்குவிக்கும். வியாபாரங்கள் உற்பத்திதிறனையும் புத்தாக்கத்தையும் முன்னேற்றுவதை விடுத்து அரசியல் தயவைப்பெற்றுக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவதைக் காணலாம். இது இயங்கியல் துறையின் வளர்ச்சிபோக்குகளை மந்தமாக்குவதுடன் முயற்சியாண்மைநடவடிக்கைளுக்குத் தடையாக அமையும்.

**(05 புள்ளிகள்)**

**(iv) ஊழியச் சந்தைக்கான சவால்கள்:**

**-வீழ்ச்சியடையும் ஊழிய நிரம்பல்:** பிறப்புவீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடையும் நிலையில் சனத்தொகை மூப்படையும் போது தொழில்புரியும் வயது சனத்தொகை சுருங்கும். ஒருசில இளைஞர்கள் மாத்திரமே ஊழியச் சந்தையில் பிரவேசிப்பதனால் ஊழிய நிரம்பல் வீழ்ச்சியடையும். இது குறிப்பாக இளைஞர்கள் அதிகம் தேவைப்படும் தொழில்நுட்பம் உற்பத்தித்துறை மற்றும் சேவைகள் போன்ற துறைகளில் ஊழியப்பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லலாம்.

- **அதிகரிக்கும் தங்கியிருத்தல் வீதம்:** அதிகரிக்கும் முதியோர் சனத்தொகையும் எண்ணிக்கையில் சிறிய வேலையாட்களும் காணப்படுகின்றமை தங்கியிருத்தல் வீதத்தை (தொழில்புரியா தங்கியிருப்போருக்கும் தொழில் புரியும் வயது சனத்தொகைக்கும் இடையிலான விகிதம்) அதிகரிக்கும். இது சிறுவர்களையும் முதியோர்களையும் தாங்க வேண்டிய அழுத்தத்தை சுருங்கிச் செல்லும் தொழிற்படையின்மீது மேலும் ஏற்படுத்தும்.

- **மூப்படையும் தொழில்படை:**
- **குறைவடையும் உற்பத்தித் திறன்:** தொழிற்படை மூப்படைய உற்பத்தித் திறன் வீழ்ச்சியடையலாம். பௌதீக ரீதியில் உடல்வலுக்குறைதல், தொழில் நுட்ப மாற்றங்களுக்கு மெதுவான இயைபாக்கம், உடல் நலத்துடன் தொடர்புடைய விடுமுறைகள் என்பன காரணமாக இது ஏற்படலாம். முதிர்ந்த தொழிற்படை புதிதாக எழுச்சிபெறும் கைத்தொழில்களின் தேவைகளைப்பூர்த்தி செய்ய சிரமப்படநேரிடும். குறிப்பாக புத்தாக்கமும் உயர்தொழில் நுட்பமும் கொண்ட துறைகளில் அதை அவதானிக்கலாம்.
- **திறன்களின் பொருந்தாத்தன்மை:** முதிர்ந்த தொழிலாளர்கள் எழுச்சி பெற்றுவரும் துறைகளான டிஜிட்டல் தொழில் நுட்பம் செயற்கை நுண்ணறிவு அல்லது பசுமை வலுசக்தி போன்ற துறைகளுக்கு அவசியமான திறன்களைக் கொண்டிராமல் இருக்கலாம். மீளபயிற்சி நடவடிக்கைகளுக்காக குறிப்படத்தக்களவு முதலீட்டை மேற்கொள்ளாவிட்டால் த்திறன் இடைவெளி பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பிரதான தடையாக அமையலாம்

**(03 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

- **பொதுநிதியியலின் மீது ஏற்படும் தாக்கங்கள்:**
- **அதிகரிக்கும் ஓய்வூதியச் செலவுகள்:** அதிகரித்த மூத்த சனத்தொகை ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நன்மைக்கான கேள்வி அதிகரிக்கும். இலங்கையின் ஓய்வூதிய முறைமை பொதுத்துறை ஊழியர்களையும் சில முறைசார்ந்த துறை ஊழியர்களையும் உள்ளடக்குகிறது. தற்போதே அம்முறைமையானது நிதி அழுத்தங்களை எதிர்கொள்கிறது. மேலும் அதிகளவினர் ஓய்வு பெற்று அதிககாலம் வாழும்போது இந்நிலை இன்னும் மோசமடையலாம். அதிகரிக்கும் ஓய்வூதியத்தேவைகளுக்காக அரசாங்கம் அதன் பாதீட்டில் அதிக தொகையை ஒதுக்கீடு செய்ய நேரிடும்.
- **சுகாதார செலவினங்கள்:** மூத்தோர் சனத்தொகை அதிக சுகாதார சேவைகளை அவசியமாக்கும். குறிப்பாக நீண்டகால நோய்களாகிய இதய நோய்கள் நீரிழிவு அல்சீமர் மறதிநோய் போன்ற நோய் நிலைமைகள் பராமரிப்பைத் தேவைப்படுத்தும். அரசாங்க சுகாதார சேவைகள் அதிக அழுத்தங்களை எதிர்கொள்ளும். ஏனெனில் முதியவர்கள் பெரும்பாலும் விலை கூடிய சிகிச்சைகளை அடிக்கடி பெறவேண்டிய தேவை ஏற்படும். சுகாதார சேவைகளுக்கான அதிகரித்த கேள்வி அரசிறைநிதியியலில் அதிக அழுத்தங்களை ஏற்படுத்தும்.
- **குறைவடைந்த வரிவருவாய்:** குறைவடையும் தொழில் புரியும்வயதுச் சனத்தொகை குறைந்த எண்ணிக்கையிலான வரிசெலுத்துபவர்களை உருவாக்கும் இது அரசாங்கத்தின் வருவாய் திரட்டும் நடவடிக்கையைப் பாதிக்கும்

- **அதிகரித்த பாதீட்டுக் குறைநிலை:** அதிகரித்த அரசாங்க செலவீடுகள் மற்றும் சுருங்கும் அரசாங்க வருவாய்கள் இணைந்து பெரிய பாதீட்டுக்குறைநிலையை உருவாக்கும். இலங்கை ஏற்கெனவே குறிப்பிடத்தக்களவு பொதுப்படுகடன் சுமையை எதிர்கொள்கிறது. இந்த குடித்தொகை அழுத்தங்கள் பொதுநிதியியலை நிலைப்படுத்தி பொதுப்படுகடனை குறைக்கும் முயற்சிகளை சிக்கலாக்கக் கூடும்.

- **பொது உட்கட்டமைப்புகள் மீதும் சேவைகள் மீதும் ஏற்படும் அழுத்தங்கள்:**
- **மூத்தோர் நலன்பேணும் சேவைகள்:** மூத்த சனத்தொகைக்கு ஏற்புடைய பொது உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க வேண்டியுள்ளது. உதவியாளருடன் கூடிய வீட்டுவசதிகள் பராமரிப்பு நிலையங்கள் முதியோருக்கான போக்குவரத்து வசதிகள் போன்றவை இதில் உள்ளடங்கும். இவற்றை விரிவாக்க அதிக முதலீடுகள் தேவைப்படும்

**(03 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 06)**

10. (i) தற்போது இலங்கை அனுபவித்துவரும் பொருளாதார நெருக்கடிக்கு பங்களிப்புச் செய்துள்ள பிரதான காரணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் அதற்கு உதவியாக சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆற்றும் பணி யாது? **(04 புள்ளிகள்)**

(iii) அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதியில் பொருளாதார மீட்சியினையும் பேண்தகு வளர்ச்சியையும் அடைவதற்கு இலங்கை பதிலிறுக்க வேண்டியுள்ள பிரதான சவால்கள் யாவை? **(06 புள்ளிகள்)**

(iv) டிஜிட்டல் உட்கட்டுமானங்களில் ஏற்படும் முன்னேற்றம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார வினைத்திறன் மற்றும் சர்வதேச போட்டித் தன்மை ஆகியவற்றை எவ்வாறு ஊக்குவிக்கலாம்? **(06 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**10. (i)** இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பங்களித்த முக்கிய காரணிகள் :

- இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது உள்நாட்டில் பிழையான முகாமைத்துவமும் வெளியக அதிர்ச்சிகளும் இணைந்து உருவாக்கிய ஒன்றாகும். இந்நெருக்கடிக்குப் பங்களித்த பிரதான காரணிகள்:

- **முகாமை செய்ய முடியாதளவு வெளிநாட்டுக் கடன்:** உட்கட்டுமானங்களை விருத்தி செய்வதற்காக பிரதானமாக வாங்கப்பட்ட கடன்களால் நாடு பேணமுடியாத கடன் திரட்சி மட்டத்தினை அடைந்திருந்தது. அவை போதியளவு பொருளாதார விளைவினை ஈட்டித்தரவில்லை. அதனால் கடன் சேவை செலவுகள் அதிகரித்து சென்மதிநிலுவைப் பிரச்சினையை ஏற்படுத்தின. 2022 இல் இலங்கை முதல் தடவையாக கடனை மீள் செலுத்த முடியாத நிலையை எய்தியது அது முதலீட்டாளவின் நம்பிக்கையை சிதைத்தது. அரச வருவாயில் கணிசமான பகுதி கடன்சேவைக்குப் பயன்படுத்தப்பட்டது. ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்காக ஒரு சிறிய பகுதியே எஞ்சியிருந்தது.

- **அந்நியச் செலாவணிப்பற்றாக்குறை:** சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியானது கோவிட் 19கொள்ளை நோய் காரணமாக இலங்கையர்களின் பணஅனுப்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒன்றிணைந்து, மிகப் பெரிளயளவு கடனை சேவை செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியதுடன் அந்நியச் செலாவணிப்பற்றாக்குறையை உருவாக்கியது. அது அத்தியாவசியப்பொருள்களை இறக்குமதி செய்யும் ஆற்றலைக்குறைத்தது.

- **கோவிட்-19 கொள்ளை நோய்:** கோள்ளை நோய இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் முக்கியதுறைகளான சுற்றுலாவையும் ஏற்றுமதிகளையும் மோசமாகப் பாதித்தது. பொருளாதார வீழ்ச்சி அதிகரித்தது வேலையின்மையும் வறுமை மட்டங்களும் அதிகரித்தன.

- **கொள்கைப் பிறழ்வுகள்:** இரசாயன வளமாக்கிகளைத் தடைசெய்து இயற்கை விவசாயத்திற்கு உடனடியாக மாற எடுக்கப்பட்ட நடவடிக்கை போன்ற தீடீர் கொள்கை மாற்றங்கள், பலவீனமாக பொருளாதார முகாமைத்துவம், விவசாயத்துறை உற்பத்தியில் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக்குறைப்புகள் அரச வருவாயைக் குறைத்தன. அது பாதீட்டுக்குறைநிலையை அதிகரித்தது.

**மோசமான நாணயமாற்றுவீத முகாமைத்துவம்:** மிகைமதிப்பள்ள ஒரு நாணயத்தை செயற்கையாக பேணியமையால் நிலைத்திருக்கமுடியாத நாணயமாற்று வீத முறைமையினை எதிர்கொள்ள நேர்ந்தது இது வெளிநாட்டுச் சொத்துகளில் நெருக்கடிநிலையினை உருவாக்கியது.

- **அதிகரித்த பணவீக்கம்:** நாணயப் பெறுமானத்தேய்வு மற்றும் நிரம்பல் பற்றாக்குறையினால் பணவீக்கம் அதிகரித்தது. கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடைந்தது. மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மோசமடைந்தன. அது பரந்தளவில் மக்களின் எதிர்ப்புக்கு இட்டுச் சென்றது. பற்றாக்குறையை ஈடுசெய்ய மத்தியவங்கி பணத்தை அச்சடித்தமையும் பணவீக்கத்தை வானளாவ உயர்த்தியது.

- **உலகளாவிய நிகழ்வுகளின் விளைவுகள்: கோவிட்** -19 கொள்ளை நோய்: இந்நோய் சுற்றுலாத்துறையைச் சிதைத்ததுடன் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் பணஅனுப்பல்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. ரஸ்ய உக்ரைன் யுத்தம் உலக உணவு மற்றும் எரிபொருள் விலைகளை அதிகரித்தது. அத்தியாவசியப் பொருள்களுக்களுக்கான இலங்கையின் இறக்குமதிச் செலவினங்கள் அதிகரித்தன.

- **ஆட்சிமுறைமையும் ஊழலும்:** அடிக்கடி ஏற்பட்ட தலைமைத்துவ மாற்றமும், நிலையான பொருளாதாரக் கொள்கைகள் காணப்படாமையும், நம்பிக்கையைச் சிதைத்தது. நிதிகள் முறைகேடாகக் கையாளப்பட்டமை, வெளிப்படைத்தன்மை இன்மை, கேள்விக்குரிய மெகா உட்கட்டுமான திட்டங்கள் மீதான முதலீடுகள் என்பன பொருளாதார ரீதியில் பாதிப்புறும் தன்மையை அதிகரித்தன. **பலவீனமான நிறுவனங்கள்:** பொது நிதியியலில் பலவீனமான ஆட்சிமுறையானது நெருக்கடியின் போது அதற்கெதிரான கொள்கை நடைமுறைப்படுத்தலை பலவீனப்படுத்தியது.

**(ஒன்றிற்கு 01 புள்ளி நான்கு காரணிகளுக்கு; மொத்தப்புள்ளிகள் 04)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Scanned with CamScanner

**(ii)** - இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நிதிநிறுவனங்கள் (IFIs) இலங்கைக்கு உதவுவதில் கணிசமான பங்கினை ஆற்றுகின்றன.
நிதி உதவி வழங்கல் கொள்கை வழிகாட்டல் மற்றும் கடன் மீள் கட்டமைப்பு செயன்முறை என்பவற்றின் ஊடாக இவ்வுதவி வழங்கப்பட்டது.

**- அவசர நிதி உதவி:** IMF இலங்கைக்கு முக்கியமான நிதியுதவியை பொருளாதாரத்தை நிலைப்படுத்த வழங்கியது உடனடி சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வாக மக்களின் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைக் மீளக் கட்டியெழுப்ப உதவி வழங்கப்பட்டது. 2023 மார்ச் மாதம் 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் விரிவாக்கப்பட்ட கடன் வசதி (Extended Fund Facility) ஊடாக பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தவும் கடன் நிலைபேற்றுத்தன்மையை பேணவும் உதவும் வகையில் வழங்கப்பட்டது.

**- கடன் மீள் கட்டமைப்புப் பொறிமுறை :** IMF ஆனது கடன்வழங்கிய நாடுகளும் தனிப்பட்ட பிணை உரிமையாளர்களும் கடன்மீள்கட்டமைப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை வசதிப்படுத்தியது. இது இலங்கை கடன் வழங்கியவர்களுக்கான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை வளங்களை அத்தியாவசிய தேவைகளுக்காகவும் அபிவிருத்திக்காகவும் விடுவிப்பதை நோக்காகக் கொண்டது

**- தொழில் நுட்ப உதவிகள் :** நிதிமுகாமைத்துவம் இறைக்கொள்கையின் சீர்திருத்தங்கள் பொருளாதார நிருவாகம் போன்றவற்றில் IFI கள் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கின

**- கொள்கை வழிகாட்டல்:** நிதிவசதிக்கான நிபந்தனைகள் மூலம் கொள்கை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. பேரினப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

**- சமூக பாதுகாப்பு வலையமைப்பு :** பாதிப்படையும் நிலையில் உள்ள மக்களைக் கருத்திற் கொண்டு சமூகபாதுகாப்பு வலைப்பின்னல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் பணவீக்கம், உணவுப்பற்றாக்குறை, போன்றவற்றால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏற்படும் தாக்கங்களை குறைக்க முயற்சிக்கப்பட்டது

**- கண்காணித்தலும் மதிப்பிடலும்:** IFIs சீராக்கல் திட்டங்களை கண்காணித்து மதிப்பிடும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

**(ஒன்றிற்கு 01 புள்ளி நான்கு காரணங்களுக்கு மொத்தப்புள்ளிகள் 04)**

**(iii)** - அடுத்த ஐந்து வருடங்களில் இலங்கையில் பொருளாதார மீட்சியையும் நீடித்த வளர்ச்சியையும் அடைவதில் இலங்கை சில முக்கிய சவால்களை எதிர்கொண்டு சமாளிக்க நேரிடும்:

**- கடன் மீள் கட்டமைப்பும் முகாமைத்துவமும்:** நாட்டில் பேணமுடியாத நிலையில் உள்ள கடனை வினைத்திறனாக மீள் கட்டமைப்பு செய்வது மிக முக்கியமானதாகும். சமாளிக்கக் கூடிய மட்டத்தில் கடன் சுமையை பேணும் நிலையை அடையும் வகையில் கடன்வழங்கியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவது இதில் உள்ளடங்கும்.

**- பேரினப்பொருளாதார நிலைத்தன்மையை மீள்தாபித்தல்:** பேரினப்பொருளாதார நிலைத்தன்மையை பேணுவது குறிப்பாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது நாணயப் பெறுமதியை நிலைப்படுத்தல் மிகவும் அவசியமாகும். இதற்கு சிறந்த பணக்கொள்கை, அரசிறை ஒழுக்கம், மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளை பேணுவதற்கான அர்ப்பணிப்பும் தேவையாகும்.

**- பொருளாதாரப் பன்முகப்படுத்தல்:** சுற்றுலா மற்றும் தேயிலை போன்ற ஒருசில துறைகளில் தங்கியிருப்பதைக் குறைத்தல். ஏனைய துறைகளை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தியைப் பன்முகப்படுத்தி ஒரு தாக்குப்பிடிக்கும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பலாம்

**- ஆட்சிமுறைமையினையும் தாபனரீதியான இயலுமையையும் மேம்படுத்தல்:** ஆட்சிமுறையை வலுப்படுத்தல், ஊழலைக் கட்டுப்படுத்தல், தாபனக் கட்டமைப்பை மேம்படுத்தல் ஆகியன வினைத்திறனான கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கும், பொருளாதார முகாமைப்படுத்தலுக்கும் அவசியமாகும். வெளிப்படைத்தன்மை கொண்ட, பொறுப்புக் கூறும் தன்மைகொண்ட ஆட்சிமுறை பொதுமக்களின் நம்பிக்கையையும் முதலீட்டாளின் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப உதவும்.

**-மனித மூலதனத்தில் முதலீடு செய்தல்:** தொழிற்படையின் உற்பத்தித் திறனையும் இயைபுறும் தன்மையையும் மேம்படுத்த, கல்வியின் மீதும், திறன் விருத்தியின் மீதும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். சுகாதார சேவைகளையும், கல்வி, உட்கட்டமைப்புகளையும் முன்னேற்றுவது நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**- உட்கட்டமைப்பு அபிவிருத்தி:** போக்குவரத்து, எரிசக்தி, மற்றும் டிஜிட்டல் தொடர்பாடல் போன்ற முக்கிய உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்தல் பொருளாதார நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக்கவரவும், வியாபார சூழலை மேம்படுத்தவும் அவசியமாகும்.

**- தனியார்துறை வளர்ச்சியை ஊக்குவித்தல்:** தனியார்துறை முதலீடுகளுக்கும் முயற்சியாண்மைக்கும் உகந்த சூழலை உருவாக்குவது பொருளாதார மீட்சிக்கும் தொழில்வாய்ப்பு உருவாக்கத்திற்கும் அவசியமாகும். ஒழுங்குறுத்தல் சீர்திருத்தங்கள், நிதிவசதிகளை அடையக் கூடிய தன்மை என்பன இதில் உள்ளடங்கும்.

**- சமூகரீதியிலான சமமின்மைகளை அகற்றல்:** வறுமையையும் வருமானச் சமமின்மையையும் குறைக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது பேண்தகு அபிவிருத்திக்கு முக்கியமானதாகும். நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட பாதிப்புறு நிலையில் உள்ள சனத்தொகைக்கு உதவத்தக்க சமூக பாதுகாப்பு மற்றும் இலக்கிடப்பட்ட உதவிநிகழ்ச்சித் திட்டங்கள் போன்றன இதில் உள்ளடங்கும்.

**- சுற்றாடல் நிலைத்த தன்மை:** நிலைபேறுடைய நடைமுறைகளை பொருளாதார திட்டமிடலிலும் அபிவிருத்தியிலும் உள்ளடக்குவது சுற்றாடல் கரிசனைகளை கையாள்வதற்கு அவசியமாகும். பசுமை வலுசக்தி, பேண்தகு விவசாயம், மற்றும் சூழற் பாதுகாப்பு முயற்சிகள் நீண்டகால பொருளாதார வளர்ச்சியையும் மீள்தன்மையையும் ஆதரிக்கும்.

**- உலகரீதியிலானதும் பிராந்திய ரீதியிலானதுமான வர்த்தகத் தொடர்புகளை ஊக்குவித்தல்:** வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்துவதும் புதிய சந்தை வாய்ப்புகளைத்தேடுவதும் இலங்கையின் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தவும் பொருளாதாரத்தின் மீள்தன்மையை மேம்படுத்தவும் முக்கியமாகும். வர்த்தக ஒப்பந்தங்கள் புதிய சந்தைகளை அடைவதை வசதிப்படுத்தும்.

**(06 புள்ளிகள்)**

**(iv)** - இலங்கையின் பொருளாதார வளர்ச்சியையும் போட்டித்தன்மையையும் கட்டியெழுப்புவதில் டிஜிட்டல் உட்கட்டமைப்புகளின் மட்டம் முக்கியபங்காற்றுகிறது.

**- தொடர்பு படுத்தலையும் அணுகலையும் மேம்படுத்தல்:** வலுவான டிஜிட்டல் உட்கட்டுமானம் கிராமிய மற்றும் நகரங்களுக்கிடையிலான தொடர்பாடலை முன்னேற்றுவதுடன் தனிநபர்களும் வியாபாரங்களும் தகவல்களையும் சேவைகளையும் பெறவும் சந்தைகளை அடையவும் ஏதுவாகும்.

**- உற்பத்தித் திறனை அதிகரித்தல்:** டிஜிட்டல் கருவிகளும் தொழில் நுட்பங்களும் உற்பத்தி செயல்பாடுகளையும் நெறிப்படுத்துவதுடன், வினைத்திறனை மேம்படுத்தி, வியாபாரத்தின் செலவுகளைக் குறைக்கும். கைத்தொழில் சேவைகள் மற்றும் விவசாயத்துறைகளில் ஏற்படும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு உயர்ந்த பொருளாதார வெளியீடு மற்றும் போட்டித்தன்மை அதிகரிப்பிற்கு இட்டுச் செல்லும்.

**- E-வணிகத்தையும் வர்த்தகத்தையும் வசதிப்படுத்தல்:** ஒரு உறுதியான டிஜிட்டல் உட்கட்டமைப்பு E-வணிக வளர்ச்சியை ஆதரிக்கும் வியாபாரங்கள் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பரந்த சந்தையை அடையவும் உதவும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**- வெளிநாட்டு நேரடி முதலீட்டை கவர்தல் :** உயர் நிலை டிஜிட்டல் உட்கட்டமைப்புகளைக் கொண்டுள்ள நாடுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கவர்ச்சிகரமானதாக உள்ளன. முன்னேற்றமடைந்த டிஜிட்டல் இயலுமைகள் வியாபாரம் செய்வதன் இலகுதன்மையை மேம்படுத்தும். இது போட்டித் தன்மையில் நன்மையை ஏற்படுத்தி தொழில்நுட்பத்துறைகளை நோக்கி முதலீடுகளைக் கொண்டுவரும்.

**- புத்தாக்கத்தையும் முயற்சியாண்மையினையும் வளர்த்தல் :** நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் சுற்றுச் சூழல் முறைமையானது டிஜிட்டல் கருவிகளைம் வளங்களையும் வலையமைப்புகளையும் அடைய அனுமதிப்பதால் புத்தாக்கத்தையும் முயற்சியாண்மையினையும் ஆதரிக்கும்.

**- அரசாங்க சேவைகளையும் ஆட்சிமுறைமையையும் முன்னேற்றல்:** டிஜிட்டல் உட்கட்டுமானங்கள் அரசாங்க சேவைகள் வழங்கலை மேம்படுத்துவதுடன் வினைத்திறனாக அவற்றைப் பெறக்கூடியதாக இருக்கும். E-governance முயற்சிகள் வெளிப்படைத்தன்மையை முன்னேற்றி ஊழலைக்குறைத்து பிரசைகளின் ஈடுபாட்டை அதிகரிக்கும். இது சிறந்த ஆட்சிமுறைக்கும் பொருளாதார நிலைத்தன்மைக்கும் இட்டுச் செல்லும்.

**- கல்வி வாய்ப்புகளை விரிவாக்கல்:** முன்னேற்றமடைந்த டிஜிட்டல் உட்கட்டுமானங்கள் கல்வியையும் பயிற்சி நிகழ்ச்சிகளையும் அடைவதை வசதிப்படுத்தும். இது தொழிற்படையின் திறன்களை மேம்படுத்த உதவும்.

**- டிஜிட்டல் நிதியை ஆதரித்தல்:** டிஜிட்டல் நிதிச் சேவைகளை அடைவது நிதியியல் உள்வாங்கலை (financial inclusion) மேம்படுத்தும். இதனால் தனிநபர்களும் வியாபாரங்களும் கடன், சேமிப்புகள், மற்றும் காப்புறுதி என்பவற்றை அடையக்கூடியதாக இருக்கும்.

**- தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் மேற்கொள்ளல்:** டிஜிட்டல் உட்கட்டுமானங்கள் தரவுகளை திரட்டுவதையும் பகுப்பாய்வு செய்வதையும் இயலுமானதாக்குகிறது. இதன் மூலம் வியாபாரங்களும் கொள்கை வகுப்பாளர்களும் தகவலறிந்து முடிவெடுக்கலாம்.

**(ஒரு காரணத்திற்கு 01 புள்ளி; ஆறுகாரணங்களுக்கு மொத்தப்புள்ளிகள் 06)**

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/